விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 03 ஞாயிற்றுக்கிழமை (19.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 212




# மைத்திரியை பதவி நீக்க மகிந்த தரப்பு உறுதி

## அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என வாசு, திஸ்ஸ சூளுரை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிட மகிந்த ஆதரவாளர் தீர்மானித்துள்ளனர். இதனை கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சிகளில் ஒன்றான இடதுசாரிக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோர் உறுதி செய்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மைத்திரியின் வீட்டை சுற்றிவ்ளைப்போம்

### இராணுவ அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பொது தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பச்சை நிற உடை அணிந்து ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைய வேண்டும். அவ்வாறு இணையாவிட்டால் இராணுவத்தினர் மற்றும் பொது மக்களை இணைத்துக் கொண்டு ஜனாதிபதியின் வீட்டை சுற்றிவளைப்போம் என தாய் நாட்டிற்கான இராணுவ அமைப்பு தெரிவித்துள்ளது. 16 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு செயலர் யாழில்



16 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவற... உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் அதிபருக்கோர் அஞ்சலி....

தோற்றம்
16
10
1964

மறைவு
16
07
2015



## அமரர் சதாசிவம் கணேஸ்வரன்

(அதிபர், யாழ். புங்குடுதீவு மகா வித்தியாலயம்)

மாங்காய்ச் சிறுதீவின்
மங்காத புகழ் கொண்ட
நீலக் கடலலைகள் நித்தமும் தாலாட்ட
நாகம்மாள் நல்லாட்சி புரியும்
மணி பல்லவத்தின் தங்க மகனே!
தீவகக் கல்வி வலயத்தில்
ஆசான், அதிபரென
அத்தனைக்கும் மொத்தமாய்
அர்த்தங்கள் தந்தவரே....
புங்கைநகர் மகா வித்தியாலயத்தில்
வித்தாகி, விதையாகி
விருட்சமாய் நின்றவரே
முடிவாய்ச் சொல்லுகின்றோம்
உங்கள் கண்ணியத்தில்
குறையொன்றும் இல்லை
கடமையிலும் கறை ஒன்றும் இல்லை
சத்தியமாய்ச் செப்புகின்றோம்
மறையாக எழுந்தீர்...!

எம் மனமெல்லாம் கலங்க
மகா வித்தியாலயத்தின்
வரலாற்றில் நீங்கள் இல்லை...
அதன் வரலாறே நீங்கள் ஆனீர்...
பணி என்று வந்து விட்டால்
பனிப்புயலும் உமக்குக்
கால் தூசிதான் நோயும், பாயும்
உமக்குத் தூரம்தான்
அதனால்தான்
கொல்லும் நோயுடனும்
கொழும்புக்குச் சென்றீரோ...?
கூடவே கலந்துரையாடலுக்கு
காலனுமா வந்தான்...?
கனத்த இதயம் தனை
சுமக்க வைத்து எங்கு சென்றீர்
நின் ஆத்மா நயினைத்
தாயின் பாதார விந்தங்களில் நித்தம்
சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துயருறும் :
கோட்டக்கல்வி பணிப்பாளர்,
கல்விக்கோட்ட அதிபர்கள்,
கோட்டக்கல்வி அலுவலக அலுவலர்கள்

கோட்டக்கல்வி அலுவலகம்,
வேலணை.

(1188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறை குறித்து 61 முறைப்பாடுகள் பதிவு

## 80 வீதமானவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன

(கொழும்பு)

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் 61 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 80 வீதமானவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று டிரான்ஸ்பேரன்ஸி இன்டர் நெஷனல் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சான் விஜேதுங்க தெரிவித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவுக்கு சேலைன் ஏற்றவேண்டும் - ரணில்



(கொழும்பு)

நாட்டுக்கு உயிரூட்ட மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குமாறு அனுராதபுரத்தில் எழுப்பப்பட்ட கோஷம் கேலிக்குரியது என பிரதமர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நொச்சியாகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே

15 ஆம் பக்கம் பார்க்க....

### ஊழல் விசாரணைகளை தடுக்கும் நோக்கில்

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அரசியல்வாதிகள் அழுத்தம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல், மோசடிகள் சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளுக்கு அரசியல் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் உட்பட சில அரசியல்வாதிகள் இந்த அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்தவர்களுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரிப்பதை தடுக்கும் நோக்கிலேயே இந்த அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அழுத்தங்கள் காரணமாக ஆணைக்குழுவில் உள்ள பொலிஸ அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## பிரகீத் கடத்தப்பட்டு 2000 நாட்கள் பூர்த்தி



(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு, காணா

15 ஆம் பக்கம் பார்க்க....

## திருமணம் செய்வதாக கூறி 15 வயது சிறுமி கடத்தல்!

### 21 வயது இளைஞன் கைது

(கரணவாய்)

திருமணம் செய்வதாகக் கூறி 15 வயதுடைய சிறுமி ஒருவரை கடத்திச் சென்ற இளைஞர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

பரந்தன் உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த மேற்படி சிறுமி, நெல்லியடி இராஜகிராமப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி வசித்து வந்துள்ளார்.

இதேவேளை நெல்லியடி இராஜ கிராமத்தைச் சேர்ந்த 21 வயதுடைய குறித்த இளைஞர் மேற்படிச் சிறுமியுடன் காதல் என்ற போர்வையில் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார்.

இதனையறிந்த சிறுமியின் பெற்றோர் சிறுமியை பரந்தன் உமையாள்புரத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதனை அறிந்து கொண்ட மேற்படி இளைஞன் பரந்தன் உமையாள்புரம் பகுதிக்கு சென்று சிறுமியை சந்தித்து திருமணம் செய்வதாகக்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய வங்கியுடன் இந்.வங்கி கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியுடன் இந்திய ரிசேவ் வங்கி நேற்று விசேட நாணய பரிமாற்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

இதன்படி இலங்கை மத்திய வங்கி. 6 மாத காலப்பகுதிக்குள் 1.1 பில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் நாணயத்தை வலுப

15 ஆம் பக்கம் பார்க்க....

## சப்ரகமுவ முதல்வரின் வாகனத்தில் 3 கிலோ கஞ்சா பொதி மீட்பு

(கொழும்பு)

மூன்று கிலோ கஞ்சா போதைப் பொருளுடன் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத்தின் பாதுகாப்பு வாகனத்தை பொலிஸார் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

பொல்காவல மதுவரி திணைக்கள அதிகாரிகள் பொல்காவல நகரில் வைத்து இந்த வாகனத்தை கைப்பற்றியுள்ளனர்.

வாகனத்தில் இருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தற்போது கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

தனது பாதுகாப்பு வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிந்து கொண்ட முதலமைச்சர் மகிபால ஹேரத், கேகாலை பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனது பாதுகாப்பு வாகனம் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

மகிபால ஹேரத்தின் மகன்

15 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸாருக்கு ரூ.40 கோடி பொதுத் தேர்தல் செலவீனம்

(கொழும்பு)

பொது தேர்தலுக்கான வேட்பு மனு கையேற்றல் ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் தேர்தலுக்கு அடுத்த நாள் வரை, பொலிஸ் திணைக் களத்தின் செயற்பாடுகளுக்காக 40 கோடி ரூபாய் செலவாவதாக கணக், கிடப்பட்டுள்ளது.

குறித்த கணக்கறிக்கை பொலிஸ திணைக்களத்தினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைகக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேர்தலின் போது மேலதிக கொடுப்பனவாக 12 கோடி ரூபாய் செலுத்த நேரிடும் என கணக்கிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்றுவதற்காக 5 கோடி ரூபாயும், எரிபொருளுக்காக 8 கோடியே 80 லட்சம் ரூபாயும் செலவிடப்படவுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் பேருந்து விபத்து

### ஹயஸுடன் மோதி கடைக்குள் புகுந்தது



(யாழ்ப்பாணம்)

யாழ்.முட்டாஸ் கடை சந்தியில் தனியார் பேருந்து ஒன்று நேற்றைய தினம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த ஹயஸ் வாகனத்துடன் மோதி அருகில் உள்ள கடை ஒன்றினுள் புகுந்துள்ளது.

குறித்த விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன் கடையின் முன்பகுதி சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

# ஓய்வூதியத்தில் புதிய திட்டம் மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைக்குள் புதிய திட்டமொன்றின் தேவை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி, அரச ஊழியர்கள் குறிப்பாக இராணுவத்தில் இருப்பவர்கள் 43 முதல் 45 வயதுக்குள் ஓய்வு பெறுவது நாட்டின் அபிவிருத்தியில் ஏற்படும் நட்டமாகவே தாம கருதுவதாகத் தெரிவித்தார.



வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில், அரச சேவையில் முப்படையினர் போன்ற அனைத்து பிரிவினரையும் கருத்திற் கொண்டதில், ஓய்வு பெறும் கொள்கை தொடர்பில் புதிய திட்டமொன்று அவசியம் என தாம் எண்ணுவதாகவும் குறிப்பிட்டார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தர் மீது கத்திக்குத்து மூவர் விளக்கமறியலில் வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு இமையாணன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்து தொடர்பில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்கு இமையாணன் பகுதியில் 4 நபர்களின் கத்திக் குத்துக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மேற்படி குடும்பஸ்தர் வீட்டுக்கு திரும்பியுள்ளார்.

இதேவேளை இது தொடர்பில் விசாரணையில் ஈடுபட்டு வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் வாக்குமூலம் ஒன்றினையும் கொடுத்துள்ளார்.

அதில் சம்பவ தினத்தன்று வடமராட்சி கிழக்கு இமையாணன் பகுதியில்தனியாகசென்றுக்கொண்டிருந்த வேளை நான்குபேர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்துள்ளார்கள்.

திடீரென இடைமறித்த அந்நபர்களில் 3 நபர்கள் தன்னைக் குத்தியுள்ளார்கள் எனவும் அம்மூன்று நபர்கள் தொடர்பாக அடையாளங் காட்டுவதாகவும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அன்றைய தினம் குறித்த 3 சந்தேக நபர்களும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களையும் வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-5-60)

## பொது நூலகத்தின் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். பொது நூலகத்தின் வாசகர் வட்ட பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பொதுசன நூலக வாசகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பொது நூலக பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (இ-5-51)

## மிதிவெடி வெடித்ததில் இராணுவ வீரர்காயம்

மயிலிட்டிப் பகுதியில் ஏ.பி.ரக மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் இராணுவ வீரர் ஒருவர் நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த தஸ்ஸநாயக்க (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மயிலிட்டி பிரதேசத்தில் மீள்குடியேற்றப்படவுள்ள பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில்மயிலிட்டிஇராணுவ முகாமைச் சேர்ந்த குறித்த இராணுவவீரர் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை தவறுதலாக மிதிவெடி வெடித்ததில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-9)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணக்கல்விவலயமுறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி நிகழ்வில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாச நாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான வரதராஜமூர்த்தி, பொ. அருணகிரிநாதன், எஸ்.மாணிக்கராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சண்முககுமார், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.சற்குணராஜா, கல்லூரி அதிபர் திருமதி வி.விமலநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## புடையன் பாம்பு தீண்டிய குடும்பஸ்தர் உயிரிழப்பு

புடையன் பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் குடத்தனை மேற்கைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான ஆடரமமூர்த்தி (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் வீட்டு வளவில் இருந்த புடையன் பாம்பு அவரைத் தீண்டியுள்ளது.

உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினமிரவு அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (இ-3)

## மரத்திலிருந்து விழுந்த குடும்பஸ்தர் மரணம்

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கிய போது தவறிவிழுந்த குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான ம.பாலேந்திரம் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் உயரமான தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்த அவர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் பிற்பகல் 1.45 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (இ-3)

## பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து மடுக்கோவில் வரை பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மக்களின் நன்மை கருதி இ.போ.ச. பருத்தித்துறை சாலையின் ஏற்பாட்டில் தினம் தோறும் காலை 5 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் பேருந்து கொடிகாமம், சாவகச்சேரி, முழங்காவில் ஊடாக மன்னார் பேருந்து நிலையத்தை காலை 8.15மணிக்கு சென்றடையும்.

அங்கிருந்து காலை 8.45 மணிக்கு புறப்பட்டு முற்பகல் 10.15 மணிக்கு மடுக்கோவிலை சென்றடையும்.பின்னர் அங்கிருந்து பிற்பகல் 12.30மணிக்கு மடுக்கோவிலில் இருந்து புறப்படும் பேருந்து மன்னார் பேருந்து நிலையத்திற்கு பிற்பகல் 2 மணிக்கு சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டு மேற்படி பாதையூடாக பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடையும் என கோண்டாவில் இ.போ.ச.(வடக்கு) பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-2)

## விசேட தேவையுடையோருக்கான தனிப்பிரிவு யாழ். பொதுநூலகத்தில்

யாழ்.பொது நூலகத்தில் விசேட தேவையுடையோரின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் பிரத்தியேக செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதில் குறிப்பாக விழிப்புணர்வுடன் வலுவற்றோருக்கான இணைய வசதிகள், ஒலிப்பதிவு இறுவெட்டுக்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் என்பவற்றை மின்பொருள் உதவியுடன் கணனியில் வாசிக்க முடியும்.

அத்துடன் தொடுகை முறை மூலம் வாசித்தல் தொடர்பாக நூல்களும் வைக்கப்பட்டுள்ளன.

எனவே மாற்றுத்திறனாளிகள் தமது வாசிப்புத் திறன்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேற்படி பகுதியை பயன்படுத்துமாறு அதன் பொறுப்பாளர் கே.சிவகுமார் தெரிவித்துள்ளார். (இ-5-51)

60 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின்
ஓய்வு நிலை உப அதிபர்
திருமதி எம்.பி.ஆர்.கனகரட்ணம்
அவர்களை

பல அதிபர் ஆசிரியர் மாணவர் நேயம்
பற்றுடனே முப்பது ஆண்டுகாலம்
கலகலப்பாய் யாழிந்து ஆரம்பப்பள்ளி
கவின்பெறவே அயராது உழைத்த மாதே
பலகாலம் எம்முடனே சேவையாற்றி
பார்வையிலே ஆசிரியப் பண்பினானாய்க்
கலமாகக் கரை கண்டு ஓய்வு ஆனீர்
காவியத்தி லிடம்பிடித்தீர் நீடுவாழி!

வாழ்த்துவோர் :
திரு.திருஞானசம்பந்தப்பிள்ளை திரு.வே.ஞானகாந்தன்
திரு.கா.தவராசா திரு.சு. தியாகலிங்கம்
(1175)

## பாரதி ச.முன்பள்ளியின் விளையாட்டு விழா

(கரணவாய்)

அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு தலைவர் க.பரஞ்சோதி தலைமையில் அல்வாய் கிழக்கு மாயக்க குடியேற்ற பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சிதம்பராக் கல்லூரி அதிபர் சி.ராஜதுரை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக அல்வாய் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.தீபா மற்றும் அல்வாய் கிழக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சிவரூபன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக அல்வாய் கிழக்கு ஜே/380 கிராம சேவையாளர் ற.கிருசாந்தன், அல்வாய் கிழக்கு இலங்கை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் என்.ராஜலிங்கம், துன்னாலை ஜே/372 கிராம சேவையாளர் திருமதி ரஞ்சித் ரிச்சேர்ட் மற்றும் கரவெட்டி கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் பா.கலைவாணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர். (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடனான உடன்படிக்கையே மகிந்தவின் வெற்றிக்கு காரணம்

## ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கை காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறமுடிந்தது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையின்படி வடக்கு, கிழக்கின் தமிழர்கள் அந்த தேர்தலை பகிஷ்கரிப்பர் என்பது முக்கியமான உள்ளடக்கமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்டான பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வுஒன்றில்உரையாற்றிய அவர்,

கடந்த 2002-2004 ஆம ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சமாதான பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் காவல் துறை பொறுப்பாளர் நடேசன் தலைமையில் அவர்களின் குழு பங்கேற்றது.

இதன்போது விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை கோரிய போதும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை முழுமையாக நிராகரித்ததாக ஹக்கீம் கூறினார்.

இந்தநிலையில் 2005ஆம் ஆண்டு தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணிப்பதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் தலைமையில் பெருமளவு பணம் விடுதலைப் புலிகளுக்கு வழுங்கப்பட்டது என்று ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தநிலையில் 2010 தேர்தலைபொறுத்தவரை போர் வெற்றி மாத்திரமே மகிந்த ராஜபக்ஷவுக்கு உதவியளித்தது என்றும் ஹக்கீம் சுட்டிக்காட்டினார். (இ-7)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-478)

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

கார் விற்பனைக்குண்டு

302-XXXX எனும் தொடரிலக்கமுடைய வெள்ளைநிற A/C யுடன் கூடிய நன்கு பராமரிக்கப்பட்ட நிலையில் உள்ள TOYOTA Camry வகையைச்சேர்ந்த கார் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 112 9310

(169)


# ஆத்ம சாந்தி பிரார்த்தனை

அன்னை மடியில் 20 . 12 . 1929



அரணடியில் 15 . 07 . 2015

## அமரர் சிவசம்பு மகேஸ்வரன்

(ஓய்வுநிலை தபால் அத்தியட்சகர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை போஷகர்)

ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய காரைநகர் முல்லைப்புலவை வசிப்பிடமாகக் கொண்ட **அமரர் சிவசம்பு மகேஸ்வரன** அவர்களின் இழப்பு இச்சபைக்கு பேரிழப்பாகும்.

நெற்றியில் திருநீறும் நிறைவான சிவசிந்தனையும் பக்தியுடன் ஆலய தரிசனமும் பாங்கான நடைமுறையும் தித்திக்கும் இன்சொல்லும் இவை இத்தனையும் இனி எங்கு காண்போம்? தங்களின் அன்பு, அடக்கம், அறிவு, வாய்மை, நேர்மை, தூய்மை, அயராது உழைக்கும் பண்பு, இன்முகம் காட்டி வரவேற்கும் அழகு இவையெல்லாம் சேர்ந்து எமது மடாலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது என்பதனை என்றும் எம்மால் மறந்துவிடமுடியாது.

சிவப்பணியில் அன்னதான பணிக்காக அர்ப்பணித்த தங்களை சடுதியாக சிவன் அழைத்துவிட்டானா? எந்தவேளையிலும் எமக்கு அறிவு, ஆலோசனைகள் வழங்கி எல்லோரையும் ஊக்கப்படுத்துவீர்கள் ஐயா! தாங்கள் மடாலய வாசலில் நின்றால் சகலதும் சிறப்பாக நிறைவு பெறுவது கண்டு நாம் மகிழ்வோம் ஐயா!

சபையின் பல பதவி நிலைகளிலும் பணிபுரிந்து இப்போ நீண்ட காலமாக போஷகராக சபையினை அலங்கரித்தீர்கள் ஐயா!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதோடு எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்து அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத தில்லைக்கூத்தன் திருவடியின் கீழ் நித்திய ஆனந்தத்தைப் பெற பெருமாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை , ஈழத்துச் சிதம்பரம் (சிவன்கோவில்), காரைநகர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து சண்முகரட்ணம்

மண்ணில்: 01.12.1946

விண்ணில்: 14.07.2015



யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சண்முகரட்ணம் அவர்கள் 14.07.2015 அன்று காலமானார்.

அன்னார் சண்முகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் கனகம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் மைத்துனியும் நிரந்தன் (கனடா), நிர்மலன் (அவுஸ்திரேலியா), நிரஞ்சனா (கனடா), நிசாந்தினி (கனடா), நிரோசினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருத்தீபன், தயாபரன், சுதன், வாணி, ரூபி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாகித்தியா, சங்கீத், சாருஷ், ஆதிஷ், திசான், சண்விகா, நிகேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Mahinda Funeral Directors & Florists, No.591, Galle Road, Mount Lavinia வில் சனிக்கிழமை 18.07.2015 இன்று பிற்பகல் ஒரு மணி முதல் 6 மணிவரை பார்வைக்காக வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (20.07.2015) இன்று முற்பகல் 10 மணியளவில் ஆசையா வீடு, கரவெட்டி மத்தி, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வீ.சண்முகரட்ணம்

தொடர்பு: 077 761 2167

# ராசி பலன்

19.07.2015

(ஆடி 03, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

திருதியை முற்பகல் 10.51 மணிவரை

மகம் முன்னிரவு 9.38 மணிவரை

இராகுகாலம் 4.31-6.01 மணிவரை

சுபநேரம்-9.01-10.31 மணிவரை

சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | கிரகநிலை | | சூரி, புதன் |
| | | | குரு, சந், சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகளால் அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, புதிய திட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பச் சுமை கூடும், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக்குறைவான நாள், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பிறக்கும், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்:** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு:** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்:** முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், களஸ்திர நன்மையுண்டு, கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவ கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

மீப்பேயில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடத்தில் நடத்தும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம் மற்றும் பகுதிநேரம்) கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டலில் ஓரங்கமாகக் கொளஎப்படும் இக்கற்கை நெறிக்கான தெரிவு போட்டிப் பரீட்சை மூலம் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்களை தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும். முழு நேரக்கற்கைகளுக்கான விணணப்ப முடிவு நாள் ஓகஸ்ட் 31, பகுதி நேரக்கற்கைக்கு ஒக்டோபர் 31. முழு நேரக் கற்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதியும் பகுதி நேரக் கற்கை நெறி எதிர்வரும் 2016 பங்குனியிலும் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இதன் விண்ணப்ப முடிவுத் திகதி செப்டெம்பர் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் சேமிப்புக்கண்க்கினை மேற்கொள்கின்ற 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுன்னாகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது 85 மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் உண்டியல்,புத்தகைப்பை உள்ளிட்ட பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.வங்கி முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். சின்மயமிஷன் வதிவிட ஆச்சாரியார் வண.ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார்.

## மஹோற்சவம்

(கரணவாய் மூத்த நயினார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திரு விழாவும் நடைபெறவுள்ளன. (இ-5-60)




## காம்யோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் காம்யோற்சவப் பெரு விழா நாளை மறுதினம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற்றும். (இ

# சுயதொழில் கடன் திட்டம் யாழில் அமுல்படுத்தப்படும்

## புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுய தொழில் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக புனர் வாழ்வு அதிகார சபை தலைவர் என். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புனர்வாழ்வு அதிகார சபையானது இலங்கை வங்கியின் ஊடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடனுதவித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் மாவட்டச் செயலர் ஊடாக பயனாளிகளை தெரிவு செய்து நேர்முகத் தேர்வின் ஊடாக அவர்களின் தகுதிகளை இனம்கண்டு இந்த கடன் திட்டத்தை வழங்குகின்றோம்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் நோக்கத்தையும் சுய தொழிலுக்கான கருத்திட்டத்தை எவ்வாறு அடையாளம் காணுதல், அவற்றை எவ்வாறு செயற்படுத்தல் தொடர்பான தூர நோக்குடைய திட்டமிடலையும் அவர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.



இக்கடன் திட்டத்தின் ஆகக் கூடிய தொகையாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சுயதொழிலை மேற்கொள்ள ஆர்வமுடையவர்கள் அரச அதிபரின் ஊடாக தமது விபரங்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

அதனூடாக பயனாளிகளுக்குரிய தொழிலை இனம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் எமது திட்டத்தினை தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா- 2015 நல்லூரில்

அகில இலங்கைக் கம்பன கழகத்தின் 2015ஆம் ஆண்டிற்கான "கம்பன் விழா" எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன கோட்ட மேல் மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்கை அம்மன மணிம ண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் நம்நாட்டு, தமிழ் நாட்டு அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கவுள்ளனர்.

வழமைபோல இவ்வாண்டும் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, விவாத அரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவை முன்னிட்டுக் கம்பன் கழகத்தினரால் நடத்தப்பட்ட கவிதை, பேச்சுப் போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் விழாவின் திருநாள் மங்கல நிகழ்வன்று வழங்கப்படவுள்ளது.

விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் தனிப்பட்ட அழைப்பிதழைப் பெற வேண்டின் கம்பன் கோட்டம், இல. 300 கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு தங்கள் முகவரியை அனுப்பி வைக்கலாம். அல்லது 077 293 5509 எனும் இலக்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது முகவரியை அறியத் தரலாம். கல்லூரிகள் தமது மாணவர்களை இவ்விழாவில் கலந்து கொள்ள வைக்க விரும்பின் மேற்படி தொலை பேசியில் பேசி முன் ஒழுங்கு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கம்ப காவியத்தினூடு தமிழ் இன்பம் பருகக் காத்திருக்கும் அன்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி கம்பன் கழகம் மேலும் அறிவித்துள்ளது. (இ-7)

# மது ஒழிப்பு வேலைத்திட்டம் குறித்து விசேட கலந்தாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய போதைப் பொருள், புகைத்தல், மது ஒழிப்பு வேலைத்திட்ட நடைமுறை தொடர்பான விசேட கலந்தாய்வுக் கூட்டம் நாளை மறுதினம் 21 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி வேலைத்திட்ட பிரகடனம் இம்மாதம் 9 ஆம் திகதியில் ஆரம்பமாகி எதிர்வரும் ஆவணி மாதம் 9 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இவ் விசேட கலந்தாய்வுக் கூட்டத்திற்கு மதகுருமார்கள் மற்றும் சமூகப் பொறுப்புள்ளோர் என அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புதிய கட்டடத்தில் பணிகள் தொடரும்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம் மற்றும் யாழ். பிராந்திய முகாமையாளர் காரியாலயம் என்பன நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பண்ணையில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளன.

நாளை திங்கட்கிழமை முதல் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்தியத்திற்கான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிராந்திய முகாமையாளர் ஈ.ஜெகதீசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் மேலதிக தகவல்களுக்கு 021 221 7830, 021 221 7831, 021 221 7832, 021 222 3742 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என மேலும் அறிவிக்கப்படடுள்ளது. (இ-3)

## சதுர்த்தி விரதம்

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி விரதம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5.15 மணிக்கு ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப் பூஜையுடன் விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறும்.(இ-3)

# சீர்கேடுகளிலிருந்து எமது சமுதாயத்தை நாம் பண்பாடுகள் ஊடாகவே மீட்கமுடியும்

(யாழ்ப்பாணம்)

கலாசார சீர்கேடுகளால் துவண்டு போயுள்ள எமது சமூகத்தை ,சமய,கலாசார பண்பாடுகள் ஊடாகவே மீட் டெடுக்க முடியும் என தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் தெரிவித்துளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலக ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமய நிகழ்வுகளை ஒரு விழாவாக மட்டும் கருதாது பண்பாடுகளை உணர்த்தும் சமூகத்தை மேம்படுத்த வேண்டும் விழாவாக கருத வேண்டும்.

அத்துடன் இவ்விழாக்கள் கொண்டாடிய தினத்தை தவிர இவ்விழா தொடர்பான மேம்பாடுகளை எந்தவொருவரும் உணர்ந்து கொண்டதில்லை. சமூகத்தில் உள்ள தற்பா[illegible] கலாசாரங்களையும் ஆடிப்பிறப்பு நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது.

கலாசாரம் தனியாக ஒவ்வொரு மனிதரின் நடவடிக்கைகளை எடுத்துக்கூறுவதில்லை என்பதும் அது மக்கள் கொண்டாடப்படும் விழாக்கள் என்பனவற்றிலும் அடங்கியுள்ளது.

எனவே இவ்விழா மூலம் சமூகத்தின் மேம்பாடுகளை கட்டியெழுப்பமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது வரணி கலாமன்றத்தின் பல்லிசை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-29)

## கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா

கோண்டாவில் மது எழுதிய முதல் முத்தம் உனக்குத்தான் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டுவிழாவில் இந்துசமய கலாசர அலுவல்கள் திணைக்கள ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.(இ-3)

# படத்திறப்பு விழாவும் நூல் வெளியீடும் இன்று

(நல்லூர்)

உரும்பிராயினைச் சேர்ந்த சமூக சேவகி திருமதி புவனேஸ்வரி கனகரத்தினத்தின் திருவுருவப் படத்திறப்பு விழாவும் அவர் எழுதிய சமூக மேம்பாடு தொடர்பான கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் மகளிர் சிக்கன கடன் வழக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது நூல்வெளியீட்டுரையினை சிவமகாலிங்கம் வழங்குவதுடன் மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் வழங்கவுள்ளார். (இ-5-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஹலிய, கிரியெல்லவுக்கு எதிராக பொலிஸ் வழக்கு

**முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு எதிராக கண்டி பொலிஸாரினால் வழக்கு தொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தேர்தல் ஆணையாளரின் அறிவுரைக்கமையவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி வேட்புமனு ஒப்படைத்த பின்னர் தேர்தல் சட்டத்தை மீறி பேரணிகள் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டதற்கமைய அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் வேட்பு மனு வழங்கிய பின்னர் பேரணி நடத்துவதற்கு தடை செய்யுமாறு தேர்தல்ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார்.

இவ் உத்தரவை மீறிய மேலும் பலருக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு பொலிஸார் தீர்மானத்துள்ளனர். (இ-7)


september 12 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்




**Speciality of our course**

- Special attention to Advanced Grammar
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

வகுப்புக்கள் 20-07-2015 ல் ஆரம்பம்

**COURSE SCHEDULE**

| | Saturday & Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 8 Week | 8 Week |
| Time | 8.00 - 11.00 | 8.30 - 11.00, 5.00 -7.00 |

வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

IELTS

**BRITISH COLLEGE OF ENGLISH**

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்கு சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: வைத்தியர்/ ஜேர்மனி
தொ.இ: B/4743

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 8
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4744

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 55 செவ் 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L/ பெல்ஜியம் PR
தொ.இ: B/4747

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 41
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4750

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 58
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4778

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 12 சூரிசெவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: chartered/ வங்கியாளர்
தொ.இ: G/4781

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 39
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: CIMA/ தனியார் தொழில்
தொ.இ: G/4788

பிறப்பு: 1983 RC
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 53 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: G/4793

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



**பாராளுமன்றத் தேர்தல் - 2015**
யாழ் தேர்தல் மாவட்டம்

# நேர்மை! எளிமை!! உறுதி!!!




# 7



எங்களில் ஒருவரான (முன்னாள் பா.உ
அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
அவர்களை ஆதரிப்போம்.
- மானிப்பாய் தொகுதி மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய முன்னணி 127 ஆசனங்களைப்பெறும்

## ராஜித நம்பிக்கை



(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் முன்னணி 127 ஆசனங்களை வெற்றி பெற்று தெளிவான பெரும்பான்மையை கைப்பற்றும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

பயாகல பகுதியில் கட்சி அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அரசாங்கத்தின் ஜனாதிபதியும் மைத்திரிபால சிறிசேன தான். பிரதமரும் ரணில் விக்கிரமசிங்க தான். அதில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தற்போதைய நிலைமைக்கமைய 127 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும். கூட்டணி 67 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 10 ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளும.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 14 ஆசனங்களையும், ஏனைய கட்சிகள் 10 ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளும்.

இது இன்றைய நிலை. இன்னமும் கடினமாக உழைத்தால் இதனை விட பெரிய அளவிலான வெற்றியினை பெற்றுக்கொள்ள முடியும்.

நாங்கள் எந்த அளவில் பலமான அரசாங்கத்தை உருவாக்குகின்றோம். அதற்கமைய தான் உலக நாடுகள் எங்களுக்கு உதவி செய்வதற்கு முன்வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமர் பதவியை ஜனாதிபதி தந்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத்தயார்

## அமைச்சர் பௌசி கூறுகிறார்



அடுத்த பிரதமர் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்குத் தந்தால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு 55 ஆண்டு கால அரசியல் அனுபவம் இருக்கிறது.

அவ்வாறு பிரதமர் பதவி அளிக்கப்பட்டால், மூப்புக்கு மரியாதை அளிக்கப்படுவதாகவும், இலங்கையில் சிறுபான்மையினருக்கு நீதி வழங்கப்படுவதாகவும் உலகத்துக்கு ஒரு செய்தி சொல்லப்படும்.

சிறுபான்மையினரால் பெரிதும் கவரப்பட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எனக்குப் பிரதமர் பதவியை அளிப்பதன் மூலம், நல்லதொரு முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றாலும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கப் போவதில்லை என்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவரைவிட அந்தப் பதவிக்குப் பொருத்தமான மூத்தவர்கள் இருப்பதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதன் பின்னணியிலேயே அமைச்சர் பௌசியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. (இ-7)

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பாதுகாப்புக் கோரத் தீர்மானம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பாதுகாப்பு கோரத் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் நீக்கப்பட்ட பாதுகாப்பை மீளவும் கோருவதென ஒரு தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதில்லை என தெரிவித்துள்ளனர்.

வேட்பாளர் தோல்வியைத் தழுவியதன் பின்னரே பாதுகாப்பு அகற்றப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு மிகவும் அவசியமான தருணம் தேர்தல் காலமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (இ-7)

# தென்னாபிரிக்காவில் புகையிரதங்கள் மோதல்

தென்னாபிரிக்காவில் ஜோகனஸ்பர்க் அருகே பூய்செனஸ் புகையிரத நிலையம் அருகே 2 பயணிகள் புகையிரதம் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் புகையிரத பெட்டிகள் தடம்புரண்டு நொறுங்கின.

இந்த விபத்தில் 150 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில சேர்க்கப்பட்டனர். இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. ஆனால் தடம்புரண்டு கிடந்த புகையிரதம் மீது மற்றொரு புகையிரதம் மோதி விபத்துக்குள்ளானதாக செய்தி வெளியாகி உள்ளது. (இ-7)

# குற்றவாளிகளை மகிந்த பாதுகாத்தார்

## விமல் வீரவன்ச பதில்

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த மோசடியாளர்களையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் பாதுகாத்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

திருடர்களை தாம் தமது ஆட்சிக்காலத்தில் பாதுகாத்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். அவர் பாதுகாத்த திருடர்கள் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அமைச்சர் ரோஷி சேனாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பாதுகாத்த திருடர்களும் மோசடியாளர்களுமே அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர முயற்சிப்பதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, தவறு நடந்த இடத்திலேயே தண்டனையை வழங்க வேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதி தற்போது நன்கு கற்றுணர்ந்துள்ளார். என்னிடமும் தவறு இருக்கின்றது. நான் தவறு செய்தவர்களை தண்டிக்கவில்லை என அவர் கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி அவரது அரசாங்கத்தில் இருந்தவர்களை பற்றி இவ்வாறு கூறவில்லை. போலி நாணயங்களுடன் சஜித் பிரேமதாசவின் சகோதரி பிடிப்பட்டார். பெண் என்பதால், அவருக்கு தண்டனை வழங்காது அவரை காப்பாற்றினார்.

இனிமேல் முன்னாள ஜனாதிபதி அப்படி செய்ய போவதில்லை. தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவார் என விமல வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




- 1545 - இங்கிலாந்தின் 'மேரி றோஸ்' என்ற போர்க் கப்பல் 'போர்ட்ஸ்மவுத்' என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.
- 1553 - 9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன் கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடி சூடினாள்.
- 1870 - பிரான்ஸ் புரூசியா மீது போரை ஆரம்பித்தது.
- 1900 - பாரிசில் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை ஆரம்பமாயிற்று.
- 1912 - அரிசோனா மாநிலத்தில் 190 கிகி எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து கிட்டத்தட்ட 16,000 துகள்களாகச் சிதறுண்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947 - பர்மிய தேசியவாதியான ஓங் சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.
- 1967 - வட கரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டினீஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.
- 1980 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாயின.
- 1985 - இத்தாலியில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாயின.
- 1996 - ஓயாத அலைகள் ஒன்று: முல்லைத்தீவில் இலங்கைக் கடற்படையின் ரணவிரு பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப் பட்டது. ஏழு கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

**பிறப்புகள்**

- 1827 - மங்கள் பாண்டே, சிப்பாய்க் கிளர்ச்சியை ஆரம்பித்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய் (இ. 1857)
- 1893 - விளாடிமீர் மயகோவ்ஸ்கி, ரஷ்யக் கவிஞர் (இ. 1930)
- 1938 - ஜெயந்த் விஷ்ணு நர்லிகர், இந்திய அறிவியலாளர்
- 1979 - தில்லார பர்னான்டோ, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சிறப்பு வேகப் பந்து வீச்சாளர்
- 1979 - மாளவிகா, தமிழ்த் திரைப்பட நடிகை

**இறப்புகள்**

- 1947 - சுவாமி விபுலாநந்தர், தமிழிசை ஆய்வாளர் (பி. 1892)
- 1947 - ஓங் சான், பர்மிய தேசியவாதி (பி. 1915)
- 1987 - ஆதவன், தமிழ் சிறுகதை எழுத்தாளர் (பி. 1942)
- 2013 - சைமன் பிமெந்தா, கர்தினால் (பி. 1920)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 300 |
| தக்காளி | 160 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 90 |
| கரட் | 140 | 140 | 240 | 130 |
| பூசணி | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 30 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 140 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 120 | 130 | 120 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 250 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 170 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | 140 | — | 120 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திய வங்கி மூலம் தேர்தலுக்கு பணம் திரட்டினார்

# பிரதமர் ரணில் மீது ரஜீவ குற்றச்சாட்டு



(கொழும்பு)

**மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல்- வாங்கல்கள் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத் தேர்தலுக்கு பணம் திரட்டினார் என முன்னாள் உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் செலவழிக்க பணம் இருக்கவில்லை. இதனால் மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல்- வாங்கல் மோசடியின் ஊடாக தேர்தலுக்கு பணம் திரட்டப்பட்டுள்ளது.

இந்த மோசடியுடன் ரணிலும் கட்சி உறுப்பினர்களும் தொடர்புபட்டமைக்கு ஆதாரங்கள் உண்டு.

"எனக்கு ரவி கருணாநாயக்கவை பிடிக்காது. எனினும் மத்திய வங்கி பிணை முறியுடன் நிதி அமைச்சருக்கு தொடர்பில்லை" என பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்திருந்தார். இதன்மூலம் மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல்- வாங்கலுடன் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேரடித் தொடர்பு காணப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின அழுத்தம் காரணமாகவே மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தீர்மானங்களை எடுத்துள்ளார். அதனை அவரே ஒரு தடவை எம்மிடம் தெரிவித்தார்.

இந்த உண்மை வெளிப்பட்டதன் காரணமாக எம்மை இது குறித்து பேச விடமால் இருக்க ரணில் முயற்சித்தார் என அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

### ஊழல் மோசடிகள் தொடர்பிலான

# சாட்சியங்களை திரட்டும் நடவடிக்கை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் சாட்சியங்களை திரட்டும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 20ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை நடத்தும் ஜனாபதிபதி ஆணைக்குழு நேற்று முன்தினம் முதல் சாட்சியங்களை திரட்டத் தீர்மானித்திருந்தது.

எனினும் இவ்வாறு சாட்சியங்களை திரட்டுவதனால் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட வேட்பாளர் ஒருவர், சாட்சியங்களை திரட்டுவதனால் தமக்கு பாதகத்தன்மை ஏற்படும் என சட்டத்தரணி ஊடாக தெரிவித்துள்ளார்.

சாட்சியம் திரட்டும் நடவடிககைகளை ஒத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் கோரியுள்ளார்.

இதன் அடிப்படையில் சாட்சியங்களை கோரும் நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கட்சியைப் பிளவுபடுத்தும் சதி நிறைவேறவேயில்லை

### நிமால் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் சதியை பலர் முன்னெடுத்து வந்தனர். ஆனால் அவை நிறைவேறவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல்கள் நடைபெறும் திகதியை வெளி நாட்டவர்கள் தீர்மானிக்கின்றனர். எமது நாட்டு மக்களுக்கு வேண்டிய திகதியில் தான் தேர்தல் நடைபெற வேண்டும். இதில் தலையிட வெளி நாட்டவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை.

ரவி கருணாநாயக்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

எமது கட்சியை பாதுகாக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்பு வாபஸ்!

2015 ஆம் ஆண்டுக்கான தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களின் பொலிஸ் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலின் கீழ் பொலிஸ்மா அதிபரினால் நேற்று முன்தினம் இரவு முதல் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் உறுதிப்படுத்தினர்.

தேர்தலில் போட்டியிடுவதன் காரணமாக வழங்கப்பட்ட பாதுகாப்புகள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென்று"

"இன்றைக்கு உங்களுடைய பிறந்தநாள் சேர்"

"ஓ... மறந்துவிட்டேன்"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர். சரித்திரக்கால சம்பவங்களையெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள், ஆனால் உங்களுடைய பிறந்தநாளை மறந்து விடுகிறீர்கள்"

"ஹி! அது இருக்கட்டும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?

"என்ன... சரித்திர விடயம் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?"

"ஆமாம். 1957 இல் நடந்த சம்பவம் செக்கோஸ்லா வாக்கியாவில் சாத்தான் ஏரி என்று ஒரு ஏரி உண்டு. அந்த ஏரியில் ஒரு பையன் தவறி விழுந்து விட்டான். அவனைத் தேடி நீச்சல் வீரர்கள் போனார்களாம். ஒரு ஆழமான இடத்தில் ஏரியின் தரைப் பகுதியில் குதிரைகள் பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்கு தயாராக காத்துக் கொண்டிருந்ததாம்"

"ஆச்சரியமாக இருக்கே... அது எப்படி?"

"நீச்சல் வீரர்கள் கரையேறி வந்து இந்த விடயத்தை கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்ததாம். ஆனால் அதன் பின்னர் பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டு பிடித்தார்களாம்"

"என்ன அது?"

"1945 இல் இரண்டாவது உலகப்போரின் இறுதிக் கட்டத்தை நாஜிப்படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின்வாங்கியதால் அல்லவா? அப்போது ஜேர்மன் படைப்பிரிவொன்று இந்த ஏரி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தபோது பனிப்பாறை பிளந்து உள்ளே போய்விட்டது. அப்படியே சமாதியாகி விட்டது. அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்"

"உங்களிடம் வந்துவிட்டால் பழையகால சமாச்சாரங்களுக்கு பஞ்சமேயில்லை சேர். செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள். உங்கள் பிறந்தநாள் அதுவுமாக வாய்க்கும் அதுமாதிரி ஏதாவது கொடுக்கக் கூடாதா"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு. எடுத்துச் சாப்பிடுங்க"

"தாங்ஸ் சேர். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... சென்ற வருடம் உங்கள் பிறந்தநாளுக்கும் லட்டுத்தான் கொடுத்தீர்கள். அதுவும் நன்றாக இருந்தது. அதேபோல் இதுவும் நன்றாக இருக்கிறது"

"அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை"

"ஏன்?"

"அதுவேதான் இதுவும். அப்பொழுது தயார் பண்ணியதுதான்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2015~17.08.2015



சந்தோஷங்கள் அதிகரிக்கும் நேரம்! சனியை இராசி நாதனாகப் பெற்றதால் பொறுமையோடு செயற்பட்டு பெருமைகளைக் குவிக்கும் கும்ப இராசி நேயர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் குரு பகவான் சம சப்தம பார்வையாக உங்கள் ராசியைப் பார்க்கிறார். பார்க்கும் குருவால் பலவித நன்மைகளைப் பெற இயலும்.

குறிப்பாக சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இம்மாதத்தில் விறுவிறுப்பாக நடைபெறும். தடைப் பட்ட தொழில் தானாக இயங்கத் தொடங்கும். பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டு தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள்.

தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். தன லாபாதிபதியான குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் இனி பணப்பற்றாக்குறை அகலும். பகல் இரவாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். எதிரிகள் விலகுவர். லாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். உதிரி வருமானங்களும் பெருகி உள்ளம் மகிழ்விக்கும். உடல் நலம் சீராகி உற்சாகப் படுத்தும்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். கூடுதல் சம்பளம் கேட்டு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு அது கைகூடும். சுய ஜாதகத்தில் குரு பலம் பெற்றிருப்பவர்களுக்கு நல்ல நிறுவனங்களிலிருந்து வேலை வாய்ப்பு அழைப்புகள் வந்து சேரும். மேலும் வளர்ச்சி

# சந்தோஷங்கள் அதிகரிக்கும் நேரம்!

ஏற்பட குருவிற்குரிய பரிகாரங்களை சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று செய்து வருவது நல்லது. நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக நெய் தீபம் ஏற்றுங்கள்.

எல்லையில்லா நற்பலன் கிடைக்க முல்லைப்பூ மாலை சூட்டுங்கள்.

அஞ்சும் வாழ்க்கை மாற மஞ்சள் வண்ணத்தில் வஸ்திரம் சாற்றுங்கள். காரிய வெற்றிக்கு குரு கவசம் பாடுங்கள்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் கூடுதலாக இருப்பதால் அதனுடைய பெயர்ச்சி காலத்திற்குப் பின்னால் மேலும் நற்பலன்களைக் காண்பீர்கள். இதற்கிடையில் சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 31 ஆம் திகதி கடகத்தில் செவ்வாய் நீச்சம் பெறப்போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. 3, 10 இறகு அதிபதி நீச்சம் பெறுவதால் முன்னேற்றத் தடை ஏற்படும். தொழிலில் சிறுசிறு ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உடலாரோக்கியத்திலும் தொல்லை ஏற்படலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம்தான். என்ன இருந்தாலும் குரு பார்வை இருப்பதால் நினைத்த காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயல்படுவது நல்லது. பகை பாராட்டாமல் உற்றார், உறவினர்களை




அனுசரித்துச் செல்வதன் மூலம் நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்ள இயலும்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் முதல் தகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது பிள்ளைகளால் பெருமை சேரும். முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். கல்விப் பணி தொடரவும் வழிவகுத்துக் கொடுப்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும்.

வேலை வாய்ப்புக்காக காத்திருந்தவர்களுக்கு புதிய உத்தியாகம் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் வடக்கு நோக்கிய அம்பிகை வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் அருகில் இருப்பவர்களால் ஆதாயம் அதிகரிக்கும். குரு பார்வையால் குழப்பங்கள் தீரும்.

குதூகலம் கூடும். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பூமி யோகம் உண்டு. கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். குழந்தைகளின் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

வியாழக்கிழமை குரு வழிபாடும், சனிக்கிழமை அனுமன் வழிபாடும் சஞ்சலம் தீர்க்கும். செவ்வாய் நீச்சம் பெறும் பொழுது உடன்பிறப்புகளை அனுசரித்துக் கொள்ளுங்கள். வாங்கிய சொத்துக்களை விற்க நேரிடலாம். திடீர் இடமாற்றங்கள், வீடுமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். அங்காரக வழிபாடு அவசியம் தேவை.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள வேண்டிய நேரம்! குருவை இராசிநாதனாகப் பெற்றதால் குணத்தில் சிறந்தவர்களாக விளங்கும் மீன இராசி நேயர்களே!

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே ராசிநாதன் குரு ஆறில் சஞ்சரிக்கின்றார்.. எனவே, 'ஆறில் குரு, ஊரில் பகை' என்பதற்கேற்ப உறவுகள் பகையாகும் விதத்தில் கிரக நிலைகளின் தாக்கம் உள்ளது.

உறவு பகையா காமல் இருக்க வேண்டுமானால் கோபத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முன்கோபத்தால் முன் னேற்றத்தில் தடைகள் ஏற்படலாம். எனவே யாராக இருந்தாலும் அன்பு காட்டி, அனுசரித்துச் செல்வதன் மூலமே உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

மாதத் தொடக்கத்தில் குரு 6 இல சஞ்சரித்தாலும், ஜென்ம ராசியில் கேதுவும், 7 இல் ராகுவும் அஷ்டமத்தில் சனி வக்ரமும் நிகழ்வதால் காரிய வெற்றிக்கு கடவுள் வழிபாடுகளே கைகொடுக்கும் என்று சொல்லலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். நாகரிகப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

என்ன இருந்தாலும் குருவின் பார்வைக்குப் பலன் உண்டு அல்லவா? எனவே குரு பார்க்கும் இடங்களான 2, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைவதைப் பொறுத்து சில மாற்றங்கள் ஏற்படலாம். மனநிம்மதி குறைவாக இருந்தாலும் பணப் புழக்கம் அதிகமாகவே இருக்கும். வீண் விரயங்கள் அதிகரிக்கும். அவற்றிலிருந்து விடுபட வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழுவது நல்லது.

உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம். மேலதிகாரிகளின் அனுசரிப்பு குறையும். எதிர்பாராத இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. செவ்வாய் 4 இல் இருப்பதால் குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

வாங்கிப் போட்ட இடத்தில் வேலி அடைத்து பாதுகாக்கும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகல சனிபகவான் வழிபாட்டையும், அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய குருபகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 31 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் சஞ்சரித்து நீச்சம்பெறப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் ராசிக்கு 2, 9 இற்கு அதிபதி யானவர் செவ்வாய். தனாதிபதியான செவ்வாய் நீச்சம் பெறுவதால் பணப் பற்றாக்குறை அதிகரித்து பணிகள் பாதியில் நிற்கும். உடன்பிறப்புகளின் பகை உருவாகும். கட்டிடப் பணி அரைகுறையாக நிற்கிறதே என்ற கவலை மேலோங்கும். பிறருக்கு பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வருவதிலும் தாமதம் ஏற்படலாம்.

இது போன்ற காலங்களில் முறையாக வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகள் திருப்தியான வாழ்க்கை அமைத்துக் கொடுக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.




# வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய நேரம்!

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

சிம்ம ராசியில் ஆகஸ்ட் முதல் திகதியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 4, 7 இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது யோகத்தையே கொடுக்கும்.

எனவே, வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வியாபார விருத்தி அதிகரிக்கும். விரோத மனப்பான்மை கொண்டவர்கள் விலகுவர். நிலபுலன்களால லாபம் உண்டு.

பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். உறவினர்கள் பகை அகலும். ஊர் மாற்றங்கள் உகந்ததாக அமையும். இம் மாதம் ராகு- கேதுக் களுக்கு பரிகாரம் செய்வது நல்லது. வடக்குப் பார்த்த விநாயகர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

குடும்ப உறுப்பினர்களையும், கூடயிருப்பவர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். அடிக்கடி வீண் விரயங்கள் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். வீடு மாற்றச் சிந்தனைகள் உருவாகும்.

கணவன்-மனைவிக்குள விட்டுக்கொடுத்துச் செல்வது தான் நல்லது. இனம்புரியாத கவலை மேலோங்கும். பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் உருவாகலாம்.

எதிர்பார்த்த வருகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தட்சிணாமூர்த்தி வழிபாடும், பிரதோஷ வழிபாடும் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கு குழி வெட்டியவர்களை கடவுள் பார்த்துக்கொள்வாராம்

## மேர்வின் சில்வா புலம்பல்

(கொழும்பு)

தனக்கு குழி வெட்டிய குழுவுக்கு கடவுள் 17ஆம் திகதி தகுந்த பதில் கொடுப்பார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் மக்களுக்கு செய்யும் சேவையை ஒரு போதும் இடைநிறுத்தப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் மக்களுக்கான சேவையை நிறைவேற்றவுள்ள நிலையில், கட்சிக்காக சிறைச்சாலைகளுக்கு சென்ற நிலை தனக்கு இன்னமும் கனவு போன்று உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ குடும்ப சக்கரத்தில் சிக்கிக்கொண்டதனால் தனக்கு வேட்பு மனு கிடைக்கவில்லை. எனினும் மக்களுக்காக செய்யும் சேவையை ஒரு போதும் இடை நிறுத்தப் போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)




## மகிந்த என்பவர் சந்தர்ப்பவாதி!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்படுத்துவது சந்தர்ப்பவாத அரசியல் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷவுக்கு அன்று அம்பாந்தோட்டை மக்கள் அரசியல் ரீதியில் எழும்புவதற்கு கைகொடுத்தார்கள். எனினும் இன்று அவர் அனைத்தையும் மறந்து விட்டு குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

இதன் ஊடாக அவரது சந்தர்ப்பவாதத்தை தெளிவாக காண முடிகின்றது.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ தன் குடும்பத்திற்காகவே அரசியலில் செயற்படுகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விபத்தில் பெண் பலி

## 7 பேர் படுகாயம்

(குருமன்காடு)

**வவுனியா பம்பைமடுப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் 7 பேர் காயம் அடைந்துள்ளனர்.**

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து பூவரசன் குளம் நோக்கி பயணித்த ஆட்டோ மீது மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த ஹயஸ் ரக வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதியது. இதில் ஆட்டோவில் பயணித்த பெண் சம்பவ இடத்தில் பலியானார். 7 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த இ.ஜனகி (வயது -52) என்பவரே உயிரிழந்தவராவார். காயமடைந்த 7 பேரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-2-250)


## சிறப்பானதொரு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம், நிரந்தர வேலைவாய்ப்பு. உடன் திருப்பதி வெங்கடேசன் நிறுவனத்தின் சைவ உணவகத்திற்கும், தேயிலை உப சேல்ஸ் வேலை வாய்ப்புக்குமாக கீழ்வரும் வேலைகளுக்கு அழைக்கின்றோம்.

1. கணக்குகள் பதிவாளர் (பெண்கள்)
2. பில்கிளாக்
3. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
4. மரக்கறி வெட்டுபவர்கள்
5. மேற்பார்வையாளர்
6. சமையல் அறை வேலையாட்கள்
7. சிறிய ரக வாகன சாரதிகள்
8. ரொட்டி, தேநீர் தயாரிப்பாளர்கள்
9. பகுதி நேர வேலையாட்கள்
10. கூலியாட்கள்

(1173)

சகலரும் நேர்முகத் தேர்வுக்கு தொடர்பு கொள்ளவும்.
இடம்பெயர்ந்து வாழ்பவர்கள், வன்னியில் அநாதரவற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: திருப்பதி வெங்கடேசன் என்ரபிறைசஸ்,
7/3, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 791 7753, 021 221 9191, 077 934 5804


# தேர்தலை உடன் நடத்துமாறு யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கிளிநொச்சி ஆட்டோ சங்கத் தேர்தல் தொடர்பான வழக்கொன்றில், அந்தத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி ஜனாப் வகாப்தீன் பிறப்பித்திருந்த உத்தரவுக்கு எதிராக செய்யப்பட்ட மேன் முறையீட்டு மனுவை நிராகரித்துள்ள யாழ்ப்பாணம் சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு சரியானது என உறுதிப்படுத்தி தீர்ப்பளித்துள்ளதுடன், அந்தத் தேர்தலை கிளிநொச்சி நீதிமன்றப் பதிவாளர் தலைமையில் உடனடியாக நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனு யாழ்ப்பாணம் சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதிகளான திருமதி கனகா சிவபாதசுந்தரம், மா.இளஞ்செழியன் ஆகிய இருவர் அடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று முன் தினம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என பரிசீலனை செய்த இரண்டு நீதிபதிகள் அடங்கிய குழாம், இதனை விசாரணைக்கு ஏற்பதற்கு வலிதான காரணங்கள் இல்லையென தீர்மானித்து, கிளிநொச்சி மாவட்ட நீதவான் வழங்கியுள்ள தீர்ப்பு சரியானது என உறுதிப்படுத்தி தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் கிளிநொச்சி ஆட்டோ சங்கத் தேர்தல் தொடர்பில் கிளிநொச்சி நீதவான் வஹாப்தீன் வழங்கியுள்ள தீர்ப்பில் சிவில் மேன் முறையீட்டு மேல்நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என அந்தத்தீர்ப்பில் நீதிபதிகள் குழாம் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும், கிளிநொச்சி ஆட்டோ சங்கத் தேர்தலை, கிளிநொச்சி நீதிமன்றப் பதிவாளர் தலைமையில், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோரின் குழு நிலையில் உடனடியாக நடத்தி, புதிய நிர்வாக சபையினரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று யாழ்ப்பாணம் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# பயணம் செய்தவர் மரணம்

கொழும்பிலிருந்து கல்முனையை நோக்கிச் சென்ற பேருந்தில் பயணித்த பிரயாணியொருவர் நேற்று அதிகாலை ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, நாவற்குடா பிரதேசத்தைச் சேர்ந்த சபரி செபமாலை (வயது-69) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிப் புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் இவர் ஏறியுள்ளார்.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் பேருந்து மட்டக்களப்பை நெருங்கும்போது இவர் ஆசனத்தில் அமர்ந்தவாறு இறந்து காணப்பட்டுள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## சி.க.நாகமணி (ஜோதிடர்)



தோற்றம்: 24.08.1937
மறைவு: 16.07.2015

காரைநகர் விளானை அழகாபுரியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் தற்போது நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகமணி அவர்கள் 16.07.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா- பொன்னு தம்பதியரின் மூத்த புதல்வனும் பொன்னையா- சிவகாமி (சுழிபுரம்) தம்பதியரின் மருமகனும் தவமணிதேவியின் (நியூசிலாந்து) அன்புக் கணவரும் குணதீசன் (நியூசிலாந்து), ஸ்ரீனிவாசன், விக்கினேஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜொய்சி (நியூசிலாந்து), லச்சனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினேஸ், சோனியா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற அம்பலம் (மலேசியா) மற்றும் பாலசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற சிவலிங்கம் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை 150, Central Park Drive, Henderson Auckland, Newzealand இல் 2 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நெல்லியான் வீதி,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
T.P: 021 205 1752
00649620940 1

தகவல்:
சிவலிங்கம்
மங்களாதேவி
(குடும்பம்)

(1180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய திருட்டு!

## 52 பவுண் நகை, 3,50,000 பணம், 40 சிகரெட் பெட்டிகள் 30,000 ரூபா பெறுமதியான மீள்நிரப்பு அட்டைகள்





(கிளிநொச்சி-1)

**கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் நிலையத்திற்கு முன் பாகவுள்ள உணவகம் ஒன்றின் கூரை வழியாக உள்நுழை ந்த திருடர்கள் கடையினுள் வைக்கப்பட்டிருந்த 52 பவுண் நகைகள், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம், 30ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள், 40 சிகரெட் பெட்டிகள் என்பவற்றை களவாடிச் சென்றுள்ளனர்.**

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

உரிமையாளர் நேற்றுமுன்தினமிரவு 7.30 மணியளவில் கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பியுள்ளார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் கடையைத் திறந்து பார்த்த வேளை திருடர்களின் கைவரிசை இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து உரிமையாளர் அக்கராயன் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டை பதிவு செய்ய சென்ற வேளை பதிவினை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளுமாறு பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் களவு தொடர்பான முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதாக உரிமையாளர் தெரிவித்தார்.

இத்திருட்டு தொடர்பாக உணவக உரிமையாளர் தெரிவிக்கையில்,

வீட்டில் பாதுகாப்பு இன்மையாலும் பெரும்பாலான நேரங்கள் கடையில் தங்கி நிற்பதாலும் 52 பவுண் நகைகளையும் பணத்தினையும் கடையில் வைத்திருந்ததாக கவலையுடன் தெரிவித்தார். (2-277)

## கண்டாவளை ஆவரசம் சாட்டி வீதியானது நீண்டகாலமாக செப்பனிடப்படவில்லை

### விபத்துக்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

(கிளிநொச்சி)

கண்டாவளை ஆவரசம் சாட்டி வீதியானது கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்பணிகள் நடைபெறாமையால் தேசமடைந்து காணப்படுவதாக பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சுமார் 3 கிலோ மீற்றர் தூரமு டைய குறித்த வீதியினை சுமார் 60 குடும்பங்கள் தமது தேவையின் நிமிர்த்தம் போக்கு வரத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

திருத்தம் மேற்கொள்ளாது காணப்படுகின்ற குறித்த வீதியினால் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற பேருந்துகள், துவிச்சக்கரவண்டி, முச்சக்கர வண்டி என பல தரப்பட்ட வாகனங்கள் பல்வேறு பிரச்சினைகளை தினமும் எதிர்நோக்குவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது வாகனங்களின் ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பழுதடைந்து காணப்படுவது அதிகரித்த நிலையில் உள்ளது.

இதனைவிட இக்கிராமத்தில் உள்ள நோயாளர்கள், வயது முதிர்ந்தோர் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் இவ் வீதியால் வாகனங்களில் போக்குவரத்தினை மேற்கொள்ளும் போது உயிராபத்துக்களை சந்திக்கும் அபாயங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் தத்தமது சிகிச்சைக்காக வைத்தியசாலை செல்ல வேண்டிய சமயத்தில் இவர்களது ஆபத்துக்கள் மற்றும ஆரோக்கியங்கள் என்பவற்றை கருத்தில் கொண்ட முச்சக்கரவண்டிச் சாரதிகள் முச்சக்கர வண்டியை அதிகுறைந்த வேகத்தில் செலுத்துகின்றனர்.

இதனால் வைத்தியசாலைக்கு செல்வோர் காலம் தாமதித்து செல்வதால் வைத்தியசாலை ஊழியர்களின் கண்டிப்புக்களுக்கும் ஆளாகி விடுகின்றனர். சிலவேளைகளில் வாய்த்தர்க்கங்கள் ஏற்பட்டு கைகலப்பு ஏற்படவும் வாய்ப்பு தோன்றுகின்றது.

எனவே கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட குறித்த வீதியினை விரைந்து திருத்தி தருமாறும் அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கண்டாவளை பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-64)

## வணிகக்கல்வியும் கணக்கீடும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடத்திட்ட செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10 , 11 இல் வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் தொடர்பான புதிய பாடத்திட்ட செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை துணுக்காய் கல்வி வலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தரம் 10, 11 இல் வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடத்தை கற்பிக்கின்ற அனைத்து ஆசிரியர்களும் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (2-15)




## துணுக்காய் பிரதேச சபையின் ஆயுட்காலம் முடிவடைகின்றது

### வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறாத நிலை காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட துணுக்காய் பிரதேச சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுறுகின்றது.

இப்பிரதேசசபையினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் நலன்சார்ந்த பணிகள் பூரணப்படுத்தப்படாத நிலை காணப்படுவதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேச சபையின் ஆட்சிக்காலப்பகுதியில் நெல்சிப் திட்டத்தின் நிதியனுசரணையுடன் மல்லாவி நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொதுச்சந்தையின் கட்டட வேலைகள் முடிவடைந்த நிலையில் அக்கட்டடம் திறந்து வைக்கப்படவில்லை.

அத்தோடு துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலனினால் வழங்கப்பட்ட நான்கு இலட்சம் ரூபா நிதியில் துணுக்காயிலிருந்து மல்லாவி வரையிலான வீதியிலும் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் வீதி மின்விளக்குகளை பொருத்துவதற்கும் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டும் பூரணப்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களின் சிறு சிறு குற்றங்கள் உட்பட நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டவர்களிடம் இருந்து அறவீடு செய்யப்பட்ட தண்டப்பணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியில் 91இலட்சம் ரூபா மீண்டும் இப்பிரதேச மக்களின் நலன் சார்ந்த பணிகளுக்காக துணுக்காய் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அப்பணத்தின் மூலம் 20கிராம வீதிகள் புனரமைப்பு செய்வதற்கு தலா 4இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆயினும்நான்குவீதிகளின்வேலைகள் மட்டுமே பூரணப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி 16 வீதிகளின் திட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இதேவேளை பொதுமக்கள் நலன் சார்ந்த பல்வேறுபட்ட பணிகளுக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியும் மக்களிடம் அறவிடப்பட்ட வரியுமாக மொத்தம் 2கோடியே 64இலட்சம் ரூபா வங்கியொன்றில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி பொது மக்கள் நலன்சார்ந்த வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் அவ்வேலைகள் முன்னெடுக்கப்படாது வங்கியில் வைப்பிலிட்டமை தொடர்பாக பிரதேசசபையின் மாதாந்த ஒன்றுகூடலின் போது ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களினால் தவிசாளரிடம் சுட்டிக்காட்டி தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் தனது சேவைக்காலத்தினை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன்நிறைவுக்கு கொண்டு வரவுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை கறுப்போ சிவப்போ எதுவானாலும் எலி பிடித்தால் சரி.

– சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஏமாற்றுகின்ற பிரசாரங்களை ஊடகங்கள் உடைக்க வேண்டும்

அரசியல் சதுராட்டம் மிக வேகமாக நடக்கிறது. செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்யமுடியும் என்று கூறி மக்களிடம் வாக்குக் கேட்கும் நாடகம் அரங்கேறிவிட்டது. நடிப்பு பிரமாதம்.

ரோசம் கெட்டவன் ராசாவிலும் பெரியவன் என்பதாக நிலைமை நகர்கிறது.

தேர்தல்; பிரசாரம் என்றால் இவை எல்லாம் இருக்கவே செய்யும் என்பதற்காக, எதையும் சொல்லலாம் என்று நினைப்பது அவ்வளவு நல்லதல்ல.

அதிலும் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவப் போவதாக– சிறைகளில் நீண்ட காலம் அடைப்பட்டுக் கிடக்கும் இளைஞர்களை விடுவிப்போம் என்பதாக பிரசாரம் செய்வதை தேர்தலில் போட்டியிடுபவர்கள் தவிர்க்க வேண்டும்.

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறியிருப்பது நகைப்புக்குரியது.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வை 2016ஆம் ஆண்டில் நிச்சயம் பெற்றுத்தருவோம் என்று இரா.சம்பந்தர் கூறுவதானது தமிழ் மக்களை முட்டாள்களாக்குவது.

இத்தகைய பிரசாரங்களை தமிழ் வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தயாராக வேண்டுமாயின் பலமான புற அழுத்தம் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து எழுந்தமானமாக 2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காண்போம் என இரா.சம்பந்தர் கூறுவது தனித்துப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெற வேண்டும் என்ற நோக்கிலாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடுமையாகப் பாடுபடுவோம் என்று சொல்லுங்கள். சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிக்க முயற்சிப்போம் என்று கூறுங்கள். இதைவிடுத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நம்ப வைத்து ஏமாற்றுகின்ற கபடத்தனத்தை ஒட்டுமொத்தத்தில் கைவிட்டுவிடுங்கள்.

தேர்தலில் வாக்களிப்பது மக்கள். அவர்கள் யாரைத்தெரிவு செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் திறன் கொண்டவர்கள். அதற்காக போலித்தனமாக பிரசாரங்களைச் செய்து மக்களின் மனங்களை மாற்ற நினைப்பது, தான் சார்ந்த இனத்திற்கு செய்யும் மிகப்பெரும் கொடுமையாகும்.

கடந்த காலங்களைப் போன்று சமகாலத்திலும் வெற்று உறுதிமொழிகளை வழங்கி–மக்களை உசுப்பேற்றி சுயலாபம் பெறுவதற்கு முயற்சிக்கின்ற பிரசாரங்களை உடைத்தெறிய ஊடகங்கள் முன்வர வேண்டும். நடைமுறைக்கு ஒவ்வாத பிரசாரங்களைக் கண்டும் ஊடகங்கள் மௌனமாக இருப்பது மகாபாவம்.

எனவே தேர்தல் பிரசாரம் என்பது நடைமுறைக்கு–யதார்த்தத்திற்கு அமைவானதாக இருக்கட்டும். வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றினால் வெட்டிப் பிடுங்குவோம் என்ற பிரசாரம் வெற்றியைத் தந்த போதிலும் இன்று ஒரு விசர் நாயைக் கூட பிடிப்பதற்கு வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளால் முடியாமல் உள்ளது. இதை மறந்து நிதர்சனமற்ற பிரசாரங்களை தயவுசெய்து செய்யாதீர்கள்.

இத்தகைய பிரசாரங்கள் எதிர்காலத்தில் அரசியலையும் தமிழ் மக்களையும் அந்நியப்படுத்திவிடும். ஆகையால் உள்ளதை–உண்மையை – யதார்த்தத்தை தமிழ் மக்களிடம் சொல்லுங்கள். மிகுதியை அவர்கள் தீர்மானிப்பார்கள்.

# வங்கிகளில் பதுக்கப்படும் பணம்; விசேட விசாரணைகள் முன்னெடுப்பு

## அமைச்சர் லக்ஷ்மன் தெரிவிப்பு

(கொழும்பு)

வங்கிகளில் பணத்தை பதுக்கி வைத்திருப்போர் குறித்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரும், கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆட்சியின் போது வங்கிகளில் பணத்தை பதுக்கி வைத்திருப்போர் தொடர்பாக விசேட நிதிக்குற்றப் பிரிவுக்கு கிடைத்த தகவல்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பாக வங்கிகளின் தகவல்களை பெற முடியாதுள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பான சட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படும். அதன் போது பலர் கைதாகலாம்.

இலங்கையில் முதலீடு செய்ய கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்வம் காட்டிய போதிலும், அதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் அனுமதி வழங்க வில்லை.

இலங்கையில் முதலீடு செய்யுமாறு நாங்கள் இன்று புலம்பெயர் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். இதன் மூலம் அவர்களின் பங்களிப்பை நாட்டின் அபிவிருத்திக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

இனங்களை ஐக்கியப்படுத்தி நாட்டை சுபீட்சம் நிறைந்த பாதையில் முன்னெடுத்துச் செல்வதே ஐக்கிய தேசியக் கட்சியின் இலக்காகும். சிங்கள பௌத்த மக்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது போன்று தமிழ், முஸ்லிம்



மற்றும் கிறிஸ்தவ மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு வாழும் உரிமை உறுதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## இராமேஸ்வரம் தலைமன்னார்

# தரைவழிப்பாதையை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் தரைவழிப் பாதையை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கத் தயாராக இருப்பதாக இந்திய மத்திய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

மதுரை மற்றும் சுசீந்திரத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் தரைவழிப்பாதையை அமைப்பது தொடர்பில் ஆய்வை மேற்கொள்ள இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அயல் நாடுகளுடன் தரைவழிப் போக்குவரத்து இணைப்பை மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் திட்டத்தின் ஒரு பகுதியான இந்தத் திட்டம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராகவுள்ளது என்று நிதின் கட்காரி மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# "பரிவுடைய மக்களாக மாறுவோமா?"

இயேசு திருத்தூதர்களிடம் "நீங்கள் பாலை நிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். பைபிளில் வரும் மாற்குவின் நற்செய்தி 6:31 இயேசுவின் உளவியல் பிரதிபலிப்பை நன்கு தெளிவாகவே அர்த்தப்படுத்திக் காட்டுகிறது.

திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து பணியிடைப் பயிற்சிக்கு அனுப்பிய இயேசு, நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்துவிட்டுத் திருத்தூதர்கள் திரும்பிவந்து, அவர்கள் கற்றுக்கொடுத்தவை, செய்த செயல்கள் அனைத்தையும் இயேசுவிடம் பகிர்ந்துகொண்டபோது அவர் கவனமுடன் கேட்கிறார். களைத்த திருத்தூதர்களை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்கிறார். இயேசுவின் பரிவும், ஞானமும் இந்த அழைப்பில் நன்கு

## பரமபிதா காட்டிய பாதை

வெளிப்படுகின்றன. இந்த நல் உபசரிப்பை பெற்றுக்கொள்ளும் உடன் இருப்போர் உறுதியான அன்போடும் ஆர்வத்தோடும் மிகுந்த அர்ப்பணத்தோடும் பணி செய்வார்கள். உயிரையும் கொடுப்பார்கள்.

இதுதான் இன்று நம் குடும்பங்களிலும் நிறுவனங்களிலும் கூட்டு வாழ்க்கையிலும் தலைவர்களிடம் இருக்க வேண்டிய பண்பு. கணவனும் மனைவியும், பெற்றோரும் பிள்ளைகளும், நிர்வாகியும் உடன் உழைப்பாளிகளும் அவ்வப்போது ஒரு கலந்துரையாடல், ஒரு சுற்றுலா, விளையாட்டு, கடற்கரைக்கு காற்று வாங்க ஒரு நாள் என்று வைத்துக்கொண்டால் அந்த குடும்பங்கள், நிறுவனங்கள் என்றும் வளரும், வாழும்.

இயேசுவின் இந்த மனிதாபிமானம் திருத்தூதர்கள் மீது மட்டுமல்ல. எம்மிடத்திலும் அதே மனிதாபிமானத்தை அவர் எப்பொழுதும் வைத்திருக்கிறார். அன்று மட்டுமல்ல இன்றும் நம்

இயேசு அதே மனிதாபம் உள்ளவர். நாம் நன்றாக உழைக்க வேண்டும். ஓய்வு எடுக்க வேண்டும், தனிமையில் சிந்திக்கவும், கூட உள்ளவரோடு கலந்து ஆலோசிக்கவும் வேண்டும் என விரும்புகிறார். இயேசுவோடு தனிமையில் கலந்து ஆலோசியுங்கள். எல்லாம் நன்றாக இருக்கும்.

நமது பல்வேறு பரபரப்பான பணிகளுக்கு இடையில் நமக்கு ஓய்வு தேவை. உடலுக்கும், உள்ளத்துக்கும், ஆன்மாவுக்கும். குறிப்பாக, இன்றைய விரைவுக் கலாசார உலகில் ஓய்வற்ற உழைப்பால் பலருக்கும் மன அழுத்தமும், பல்வேறு நோய்களும் வருகின்றன.

எனவே, நம்மை உடல், உள, ஆன்மா ஓய்வெடுக்க இயேசு அழைக்கிறார். ஞாயிறு தோறும் வழக்கமான வேலைகளை விட்டுவிட்டு, முதலில் ஆலயத்தை நோக்கி செல்வோம். வழிபாட்டில் பங்கெடுப்போம், இறைவார்த்தைக்கு செவிமடுப்போம். நற்செய்திப் பணியாற்றுவோம், இவைபோன்றவை ஓய்வையும் தரும். எனவே ஆலயத்தை எமக்கு முதல் வீடாக்குவோம், எமது வீடுகளை எமக்கு இரண்டாவது ஆலயமாக்குவோம். அப்போது ஓய்வு நிரம்ப மகிழ்ச்சி நிரம்பி வழிய ஆரம்பிக்கும்.

இன்றைய பைபிள் செய்தியின் இறுதிப்பகுதியின்படி அவர் கலிலியோ கடற்கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார்.

அவர் கள் ஆயரில்லா ஆடுகளைப் போல் இருந் ததால் அவர்கள்மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார். இப்பரிவு பற்றி பார்ப்போம்: பரிவு என்னும் பண்பைக் குறிக்கப் பயன்படும் சொல் ஓர் ஆழ்ந்த கருத்தை உள்ளடக்கியது. பிற மனிதர் துன்பப்படுவதைக் கண்டு அவர்களுடைய துன்பத்தில் நாமும் பங்கேற்று, நம் உள்ளத்தின் ஆழ த்தில் அவர்க ளோடு நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு, உணர்வு நிலையில் அவர்களோடு இணைவது பரிவு என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறது என்கிறார்கள் உளவியலாளர்கள்.



இயேசுவின் உள்ளம் மனித துன்பத்தைக் கண்டு உருகியது. கடவுளின் அன்பை நம்மோடு பகிர்ந்து கொள்ள வந்த இயேசு நம்மைப் போல மனித உணர்வுகளைத் தம் வாழ்வில் அனு பவித்தவர் என்கிறது பைபிள். எனவே அவர் நம் துன்பங்களிலும் இன்பங்களிலும் தம்மை ஒன்றுபடுத்தத் தெரிந்தவர்.

இவ்வாறு மனித உணர்வுகளோடு தம் உணர்வுகளை இணைக்கத் தெரிந்த இயேசு மக்கள் கூட்டத்திற்கும் அதுபற்றிய பலவற்றைக் கற்பித்தார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திரப் பத்திரிகையாளர்

இயேசு மனிதர் மீது எதையும் திணிக்க வரவில்லை. அவர் மனித சுதந்திரத்தை எப்போதும் மதிக்கிறவர். மக்கள் கடவுளிடமிருந்து வருகின்ற உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்துகொண்ட உண்மையை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் - இதுவே இயேசு மக்களிடமிருந்து எதிர்பார்த்தது.

ஆகவே, அவர் மக்களுக்குக் கற்பித்தார். இயேசுவிடமிருந்து கற்றதை நாம் வாழ்வில் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறோம். அவரைப் போல நாமும் பரிவுடைய மக்களாக மாறுவதே இறைவிருப்பமாகும்.

இறைவிருப்பத்தை நிறைவேற்ற தயராவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவானது



வட மாகாணப்பாடசாலை களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் முதல் பத்து இடங்களை தரவரிசைப்படுத்தலில் பெற்று 175 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தினைப்பெற்றுக் கொணடுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்கள் நான்கு புதிய மாகாண சாதனையை படைத்துள்ளார்கள். அத்துடன் 24 வயதுப்பிரிவு மெய்வன்மை சிறந்த வெற்றி வீரராக டி.யோய்ஆகாஷ் தெரிவு செய்யப்படார். இப்போட்டியில் மத்திய கல்லூரி மொத்தமாக 24 பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளது.

வடமாகாண புதிய சாதனைகளாக 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 21 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் ஜே.அபிமன் 21.5 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார்.

அத்துடன் ஜே.அபிமன் 400 மீற்றர் ஓட்டநிகழ்வில் 51.3 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார்

400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் 21. வயதின் கீழ் பிரிவில் டி.யோய்ஆகாஷ் 57 செக்கன்களில் முடித்து சாதனை படைத்துள்ளார் 4 - 400 மீற்றர் அஞ்சலோட்ட நிகழ்வில் 21 வயதின் கீழ்ப்பிரிவு அணியினர் 3 நிமிடம் 36.3 செக்கன்களில் ஓடிமுடித்தும் சாதனை படைத்துள்ளார்கள்.

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 175 புள்ளிகளுடன் முதலாமிடத்தினை பெற்றுள்ளது. பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 173 புள்ளிகளையும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி 156 புள்ளிகளையும் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி 95 புள்ளிகளையும் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி 80 புள்ளிகளையும் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் 64 புள்ளிகளையும் மன்னார் சென்ஆன்ஸ் மகாவித்தியாலயம் 60 புள்ளிகளையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 50 புள்ளிகளையும் மன்னார் அரிப்பு ஆர்.சி.ரி.எம்.எஸ் பாடசாலை 48 புள்ளிகளையும் அளவெட்டி அருணோதயாக்கல்லாரி 48 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-21)

# கரணவாய் கொலின்ஸ் வி.கழக மாவட்ட ரீதியான உதைபந்து

## நவஜீவன்ஸ் இறுதிப்போட்டிக்கு தகுதி





மின்னொளியில் நடைபெற்ற பரபரப்பான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை தோற்கடித்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் கடந்த வியாழக்கிழமை 8.30மணிக்கு நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் வடமராட்சியில் இரு பலம்பொருந்திய அணிகளான நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ்அணியின் முன்கள வீரர் அருந்தவராசா உஷானந் தனது அணிக்காக கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்து தனது அணியை முன்னிலைப்படுத்தினர்.

இறுதிவரை இருஅணியினரும் கோல்கள் போட முயற்சித்த போது பின்கள வீரர்களினால் அது முறியடிக்கப்பட்டது.

இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக உஷானந் தெரிவு செய்யப்பட்டார். (க-20)

# அமரர் ஜோன் கில்லறி ஞாபகார்த்த உதைபந்து

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் ஜோன் கில்லறி ஞாபகார்த்த விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள இவ் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்யூட் அணியை எதிர்த்து சுப்பர்ராஜ் அணி மோதவுள்ளது. (கு)

# சென்னை அணியின் தடை அதிர்ச்சியளிக்கிறது-பிளமிங்

ஐபிஎல் கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றம் நியமித்த லோதர் கமிட்டி குழு சென்னை சுப்பர் கிங்ஸ் ராஜஸ்தான் றோயல்ஸ் ஆகிய 2 அணிகளுக்கு 2 ஆண்டு தடை விதித்தது.

அந்த அணிகளின் நிர்வாகிகள் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சென்னை அணிக்கு தடை விதித்தது அதிர்ச்சி அளிக்கிறது என்று பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து முன்னாள் கப்டனான அவர் கூறியதாவது,

சென்னை அணிக்கு 2 ஆண்டுகள் தடை விதித்து இருப்பது கடும் அதிர்ச்சியளிக்கிறது. இது மிகப்பெரிய தண்டனை. அபராதம் மட்டும் விதிக்கப்படும் என்று நினைத்தனர்.

நான் இன்னும் பயிற்சியாளராகத்தான் இருக்கிறேன். ஆனால் அடுத்த சில நாட்களில் என்ன நடக்கும் என்பது தெரியாது.

அவர்கள் (அணி உரிமையாளர்) என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்று தெரியாது.

2 ஆண்டுகள் அவர்கள் காத்திருந்தால் நான் பயிற்சியாளராக இருப்பேனா அல்லது மாட்டேனா என்பது தெரியாது. வீரர்களுக்கு பிரச்சினை இல்லை.

அவர்கள் விருப்பப்பட்டால் ஏலத்தில் கலந்து கொண்டு வேறு அணியைக்கூட தேர்ந்தெடுக்கலாம். (கு)

# சிம்பாவேயை வீழ்த்தியது இந்தியா

சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரு நாள்தொடரை முழுமையாக வென்றது.

இதனையடுத்து இரு அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி நேற்று முன்தினம் ஹராரேயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் ரஹானே 33 ஓட்டங்களும், முரளி விஜய் 34 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய மனிஷ் பாண்டே 19 ஓட்டங்களிலும், கேதார் ஜாதவ் 9 ஓட்டங்களும், ஸ்டூவர்ட் பின்னி 11 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ராபின் உத்தப்பா ஆட்டமிழக் காமல் 39 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர் முடிவில் இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 178 ஓட்டங்கள் எடுத்தது. பந்துவீச்சில் சிம்பாவே அணியின் கிறிஸ் மபோபு 3 விக்கெட் வீழ்த்தினார்.

இதனையடுத்து 179 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 124 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

அதிகபட்சமாக மசகட்சா 28 ஓட்டங்களும், சிபாபா 23 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். - (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வன்முறை...

ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் அரச சொத்துக்களை தேர்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் காலங்களில் பொது வளங்களை பாதுகாப்பதற்காக நிறுவப்பட்டுள்ள வப்பட்டுள்ள டிரான்பேரன்ஸிஸ் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் கண்காணிப்பின் போது 61 தேர்தல் சட்ட மீறல் செயற்பாடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இம் முறைப்பாடுகளில் 80 வீதமான முறைப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் முழுமையான தகவல்களுடன் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்ய பொது மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. அது தொடர்பிலான அறிவித்தல்கள் நாளேடுகள் மூலம் அறிவிக்கப்படும்.

நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சி,சுதந்திர கட்சி,ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தேர்தல் சட்டங்களை மீறியுள்ளமைக்கான தேர்தல் புகைப்பட மற்றும் காணொளி ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதன் பிரகாரம் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அலரி மாளிகையில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டமை, சமுர்த்தி மற்றும் வீடமைப்பு திட்ட அமைச்சின் ஊடகச்செயலாளருக்கு வீடு வழங்கப்பட்டுள்ளமை, வடமேல் மாகாண முதலமைச்சரின் காரியாலய தொலைபேசி வாயிலாக தேர்தல் பிரசாரம் செய்யப்படுகின்றமை, முன்னாள் அமைச்சர் தொண்டமான் அரச வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாவித்துள்ளமை, அரச பஸ்களில் வேட்பாளர்களின் போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றமை போன்ற குற்றச்சாட்டுகள் எமது கண்காணிப்பு நிலையத்துக்கு பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும் கடந்த காலங்களை விடவும் பொலிஸாரின் சிறந்த பாதுகாப்பு செயற்பாடுகளின் காரணமாக இம்முறை தேர்தல் வன்முறைகள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச ஊழியர்களுக்கு பாதிப்புக்கள் ஏதும் ஏற்படும் பட்சத்தில் அவர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும் போது அவர்களுக்காக டிரான்பேரன்ஸி நிறுவனத்தின் வழக்கறிஞர்கள் முன்னிறுத்தப்படுவதுடன் இலவச சேவையும் பெற்றுக் கொடுக்கப்படும் என சான் விஜேதுங்க தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவுக்கு சேலைன்...

அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டுக்கு உயிரூட்டும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும் என கோஷம் எழுப்பியுள்ளனர். இது கேலிக்குரியது. 10 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்த மகிந்த தனது குடும்பத்திற்கு மாத்திரமே உயிரூட்டினார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் கலஞ் சீட்டுக்கு மக்கள் தடைவிதித்துள்ளனர். எனவே நாட்டுக்கு உயிரூட்டுவதற்கு பதிலாக மகிந்தவுக்கு சேலைன் ஏற்ற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தமது கோஷத்தை மாற்றி கொள்ள வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பொலிஸாருக்கு ரூ.40 கோடி...

தொலைத்தொடர்புகளுக்காக 50 லட்சம் ரூபாயும், நலன்புரி செயற்பாடுகளுக்காக மேலும் 18 கோடி செலவாகும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-11)

## மத்திய வங்கியுடன்...

படுத்த முடியும் என்று கருதப்படுகிறது.

சார்க் நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-11)

## பிரகீத் கடத்தப்பட்டு...

மல் போன நிலையில் நேற்றுடன் 2 ஆயிரம் நாட்கள் பூர்த்தியாகியுள்ளது.

இதனை முன்னிட்டு ஹெக்நேலியகொடவின் மனைவி சந்தியா ஹெக்நேலியகொட தலைமையில கொழும்பு முகத்துவாரம் காளி கோயிலில் விசேட விரதத்துடன் கூடிய பூஜை நடைபெற்றது.

ஹெக்நேலியகொட காணாமல் போய் 2 ஆயிரம் நாட்கள் கடந்துள்ள போதி லும் அவருக்கு என்ன நேர்ந்தது என்பது இது வரை தெரியவில்லை.

2 ஆயிரம் நாட்களுக்கு முன்னர் தன்னிடம் இருந்து பறிக்கப்பட்ட தனது கணவனை மீட்டு தருமாறும், அவரை காணாமல் போக செய்த ராஜபக்ஷவினருக்கு தண்டனை வழங்குமாறும் காளி அம்மனிடம் வேண்டியதாக சந்தியா ஹெக்நேலியகொட கூறியுள்ளார். (செ-11)

## சப்ரகமுவ முதல்வரின்...

கனக ஹேரத் இம்முறை பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அணி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் கேகாலை மாவட்டத்தில் போட்டியிடுகிறார். (செ-11)

## திருமணம் செய்வதாக...

கூறி நெல்லியடி இராஜ கிராமப் பகுதிக்கு அழைத்து வந்துள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் பெற்றோர் சிறமியை தேடி நெல்லியடி"இராஜகிராமப் பகுதிக்கு வந்த சமயத்தில்,

குறித்த இளைஞர் சிறுமியை அப்பகுதியிலேயே வேறொரு மறைமுகமான இடத்தில் கூட்டிச்சென்று மறைத்து வைத்திருந்துள்ளார்.

எங்கு தேடியும் சிறுமி கிடைக்காததால் பெற்றோர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர்.

முறைப்பாட்டினை அடுத்து குறித்த இளைஞரும் சிறுமியும் பொலிஸாரால் மீட்கப்பட்ட நிலையில் கடத்தல் குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரியவருகின்றது. (செ-5, 60)

## ஜனாதிபதி ஆணைக்குழு...

கடந்த 5 வருடங்களில் நடந்த பாரிய ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. சுமார் 800 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடம் கிடைத்துள்ளன.

இவற்றில் சுமார் 200 முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. கடந்த அரசாங்கத்தின் சில அரசியல்வாதிகள், நிறுவனங்களின அதிகாரிகள் உட்பட பலருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

முன்னாள் பிரதியமைச்சர் ஒருவர் தனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றிடம் 132 லட்சம் ரூபாயை பெற்று அதனை தனது அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியுள்ளதாக ஆணைக்குழு தனது அண்மைக்கால விசாரணைகளில் கண்டறிந்துள்ளதுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-11)

## திணறும் இங்கிலாந்து ஆஸி ஆதிக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி வலுவான முன்னிலை நோக்கி செல்கிறது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் மோதும் ஆஷஸ் தொடரின் 2-வது டெஸ்ட் லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட் இழப்புக்கு 566 ஓட்டங்கள் எடுத்து டிக்ளே செய்தது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 312 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இருப்பினும் அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்கு பாலோ ஆன் கொடுக்கவில்லை

பின் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர், கிறிஸ் ரோஜர்ஸ் ஜோடி சூப்பர் தொடக்கம் கொடுத்தது.

மூன்றாம் நாள் முடிவில், 2-வது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 108 ரன்கள் எடுத்திருந்தது. வோர்னர் (60), ரோஜர்ஸ் (44) அவுட்டாகாமல் இருந்தனர். (க)

---

## பண்ணோடு இசை பாடிய பாவலன் குரல் ஓய்ந்ததுவோ...



பிறப்பு 06 - 10 - 1927

இறப்பு 16 - 07 - 2015

நிமிர்ந்த நன்னடையும்
நேர் கொண்ட பார்வையும்
திண்தோள் புயத்தழகும்
திடமான நெஞ்சும் கொண்ட
வஞ்சமில்லா உள்ளமே!

தேவார திருவாசகம் தனை
ஞான வைரவர் தலம் தொழுது
பக்தியுடன் பாடிய அற்புத அறிவுளனே
பத்து வயதிலிருந்து இன்றுவரை இறைபணியில்
குறைவற தொடர்ந்திட்ட தொண்டனே!

தயவான தலைவனாய் தகுதியுடன் நின்றீர்
தக்க நற்செயலாளராய்
மிக்க நற்கடமை செய்தீர்
இறுதிவரை போசகராய்
உறுதியுடன் செயற்பட்டீர்
இந்து சமயந்தனில் இங்கிதமாய் மிளிரும்
கந்தபுராணம் முதல் எந்தவகை பாடலையும்
பரவசமாய் பாடி பக்குவமாய் பொருள் கூறும்
பரந்த பெரும் பொக்கிசமே!

ஈவரறித்துதவிடும் உத்தமசீலனே!
ஈடிணை இல்லா பெரும் இறை தொண்டனே
எண்பத்து ஏழாண்டுகள் ஏற்றமுடன் வாழ்ந்தீரய்யா
உருகாது உருகிடும் திருவாசகமதனை
மெருகிட இசைத்திடும் இன்குரலோனே
நின் இசைதனையே இறைவனும் விரும்பியே
அருகழைத்தனனே? அந்த
மருவார் கொன்றை மலர் சூடிய பெருமான்
நிறைவுற வாழ்ந்து இறைவடி வாகினீர்
நின் நாமம் என்றும் எம் நாவில் தவழும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

### “ சிவநெறிப் புரவலர் ”

**அமரர் இளையதம்பி பரராஜசிங்கம்**

(கௌரவ போசகர்,
ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்)

(1181)

பிரிவால் துயருறும் ஈச்சமோட்டை கலட்டிபுலம்
ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பிரதமகுரு. பா. பாலகிருஸ்ணகுருக்கள்
ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் :
திரு.சு.சிவநாதன், திரு.மு.சி[illegible], திரு.க.பாலசுப்பிரமணியம், திரு.கு.றமணன், திரு.வ.குமரதீபன்,
திரு.ந.சிவபாதசுந்தரம், திரு[illegible], திரு[illegible]ரவிந்தன், திரு.தி.சத்தியகுமார் இவர்களுடன்
திரு.ப.பகீரதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரண அறிவித்தல்

## முருகேசு சின்னராசா

வரணி இயற்றாலை வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னராசா நேற்று 18.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவரான சின்னத்தம்பி முருகேசு மற்றும் முருகேசு சிவகாமியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா தங்கம்மாவின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்பு கணவரும் ஆவார். அன்னார் காலஞ்சென்றவர்களான தேவராசா, நடராசா, அருளானந்தராசா, மற்றும் யோகராசா தவமணிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும், பரிக்சாந்தி, லலிக்சாந்தி(லண்டன்), காலஞ்சென்றவரான பார்த்திபன் மற்றும் கிருசாந்தி, ஜெகதீபன்(ஜெகன்), ஆகியோரின் அன்புத்தந்தையும் சர்வேஸ்வரன(பிரான்ஸ்), ஜெயக்குமார(லண்டன்), ஆகியோரின் மாமனாரும் ஆவார். சஜித்தா, அஜீஸ், அஜேய்(லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறற்ல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வரணி இயற்றாலை,வரணி.
தொ.இல- 077 160 23 76 (C-1619)

தகவல்
குடும்பத்தினர்


# மைத்திரியை பதவி நீக்க...

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பெரும்பான்மை உறுப்பினர்கள்பன்நாடாளுமன்ற தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டு கூட்டமைப்பின்தலைவர் பதவியில் இருந்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை நீக்கிவிட தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கட்சியின் பிரசார குழுத் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ களமிறக்கப்பட்ட நிலையில் தேர்தலில் மகிந்தவால் வெல்ல முடியாது என அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தே மகிந்த ஆதரவு தரப்பினரை இவ்விடயத்தில் மேலும் வலுக்கொள்ளச்செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னணிக் கட்சியான இடதுசாரிக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார நேற்றையதினம் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு தற்போது மகிந்த ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்தின் புத்தெழுச்சி பெற்றுள்ளது.

எனினும்அதனை நசுக்கும் முகமாக கட்சித் தலைமை பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருகின்றது.

எப்படியாயினும் தேர்தலில் மகிந்த அமோகவெற்றிபெற்று பிரதமராக நியமிக்கப்படுவது உறுதி.

பொறுப்பற்ற விதத்தில் கட்சியை சீரழிக்கும் தலைமைப் பதவியும் விரைவில் மாற்றப்படும் தேர்தல் காலத்தில் பதவிமாற்றத்தை மேற்கொள்ளகால அவகாசம் கிடைக்காது போனால் தேர்தலின் பின் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து மைத்திரியை நீக்குவோம்.

இதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் புதிய தலைவராக மீண்டும் மகிந்த நியமிக்கப்படுவார் என வாசுதேவ தெரிவித்தார்.

அதே வேளை மகிந்த ராஜபகஷ பிரதமராக பதவியேற்ற பின்னர் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை முற்றாக ஒழிக்கப்படும்என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை அகற்ற போவதாக அவர்நேற்று ஊடகங்களிடம் சூளுரைத்தார்.

இதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷவை முழுமையான அதிகாரங்களுடன் கூடிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக மாற்ற போவதாகவும் அவர் கூறியுள்ளார் எவ்வாறாயினும் திஸ்ஸ விதாரண மற்றும் வாசுதேவவின் இந்த கருத்தானது ராஜபக்ஷ வினரின் எதிர்கால திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளதாக அரசியல்அவதானிகள்தெரிவித்துள்ளனர். (செ-11)

# ஜனாதிபதி மைத்...

கொழும்பில்நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவ் அமைப்பின் ஏற்பாட்டாளர் தென் மாகாண சபை உறுப்பினர் மேஜர் அஜித் பிரசன்ன கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.ம.சு. கூட்டணியினால் வெற்றி பெற முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளமையினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உட்பட கூட்டணியில் தொடர்ந்து செயற்படுவதற்கு அவருக்கு உரிமை கிடையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெட்கம் என்ற நரம்பு வெட்டப்பட்டவில்லையென்றால்தயவு செய்து ஐக்கிய தேசிய கட்சிக்கு செல்லவும்.

ஜனாதிபதிக்கு தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் இருப்பதற்கான உரிமை கிடையாது.

அவ்வாறு ஐக்கிய தேசிய கட்சிக்கு செல்லவில்லை என்றால் பொதுத் தேர்தல் நிறைவடைவதற்கு முன்னர் நாங்கள் ஜனாதிபதியின் வீட்டை சுற்றி வளைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பு செய...

பாதுகாப்புச் செயலர் பி.எம்.யு.டி. பஸ்நாயக்க இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணமாக, முப்படைகளின் தளபதிகளுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்ட, பஸ்நாயக்க யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட முதல் அதிகாரபூர்வ பயணம் இதுவாகும்.

நேற்று காலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த பாதுகாப்புச் செயலருக்கு மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த வரவேற்றார்.

அதையடுத்து, அவருக்கு முதலாவது கவசப்படைப் பிரிவினரால் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இதையடுத்து. உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள நிலங்களை அவற்றின் உரிமையாளரிடம் ஒப்படைப்பது குறித்த தற்போதைய நிலைவரங்கள்குறித்து, பாதுகாப்புச் செயலருக்கு மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த விளக்கமளித்தார்.

கடற்படை மற்றும் விமானப்படையின் யாழ்ப்பாண தளபதிகளும், பாதுகாப்பு விவகாரங்களில் தமது பங்களிப்புக் குறித்து விளக்கமளித்தனர்.

நேற்று பிற்பகல் மீள் குடியமர்வு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீள்குடியமர்வு குறித்த கலந்துரை யாடலிலும், பாதுகாப்புச் செயலர் பங்குபற்றியிருந்தார்.

இன்றும் அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)


## இளந்தளிர் தேங்காய்எண்ணெய் ஊற்றுமிடம்

பெற்றுக் கொள்ளப்படும் கொப்பரா (தேங்காய்) இற்கு ஏற்பதேங்காய்எண்ணெய்யாகஊற்றிக்கொடுக்கப்படும்.
01kg கொப்பரா எண்ணெய் ஊற்றல் 30/-

தொடர்புகளுக்கு : 0772170615
சோமசுந்தரம் வீதி (மாட்டு ஒழுங்கை)
ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம். (1189)

## காணி விற்பனை

மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். 0778730129

## தேவை

பொதி செய்யும் பிரிவுக்கு 10 பெண் ஊழியர்கள் தேவை. சம்பளம் ரூபாய் 10,000/= (27 நாள்)
பவானி கச்சான் அலுவா
நீராவியடி, யாழ்
தொடர்பு : 0777716302 (1178)

## வேலைவாய்ப்பு

பயிற்சி பெற்ற பெண் உதவித் தாதியரும், பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். (1182)

0778730129

## SPEED

PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303. கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-1616)

## கிளுவங்கதியால் தேவை

௨000 கிளுவங்கதியால்கள் தேவை
வைத்திருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (இ)
(வியாபாரிகள் தவிர்க்கப்பட்டுள்ளனர்)
தொடர்பு 0773151326

## சோதிடர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கல்யாணமாலை நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு சோதிடர் தேவை.
தொடர்பு 0702202209
இல. 144 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (இ)
கல்யாணமாலை சர்வதேச திருமண சேவை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 19.07.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 24

# தமிழர்களுக்கு அரசியல் தலைமை இருக்கிறதா?





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு அரசியல் தலைமை இருக்கிறதா?




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தேர்தல் பிரசாரம் செய்யத் தலைப்பட்டுவிட்டார்.

எப்படியும் பாராளுமன்ற உறுப்பினராகுவது என்பதில் அவரின் இறுக்கமான கொள்கை இலங்கையின் எதிர்கால அரசியலில் சலசலப்புகளுக்குத் குறைவிருக்காதென்பதையே சுட்டி நிற்கிறது.











முன்னாள் ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டது இதுவே முதற்தடவையாயினும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றேனும் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என மகிந்த நினைப்பதும் தெரிகிறது.

இதற்கு அப்பால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதன் மூலம் பிரதமராக முடியா விட்டாலும் சபையில் அமைதியின்மையை ஏற்படுத்துதல், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடையே சர்ச்சையை உருவாக்குதல் என்ற குழப்பங்களையாவது செய்யலாம் என மகிந்த நினைக்கின்றார்.

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் இன்னொன்று நினைத்தால் எதுவும் செய்ய முடியாது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மகிந்த ராஜபக்ஷ செய்ததை மகிந்த ராஜபக்ஷவுக்கு வேறு யாராவது செய்ய நினைத்தால் நிலைமை வேறு விதமாக அமையும் என்பதும் தெரிந்த விடயம்.

எது எப்படியோ அரசியலில் எதெது நடக்கும் என்பதை எவராலும் சொல்லி விடமுடியாது. அதற்காக நடப்பதை இருந்து பாப்பது தான் நம் கடமை என்று நினைப்பதும் மடமை. எந்த மாற்றங்கள் நடப்பதாக இருந்தாலும் அதில் நாமும் பங்காளிகள் என்ற உண்மையை மறந்து விடக்கூடாது.

முன்பெல்லாம் வடபுலத்தில் விடுதலைப்போராட்ட அமைப்புக்களால் அடிக்கடி பேரணிகள் நடத்தப்படும். அந்தப் பேரணியில் செல்பவர்கள் பார்வையாளர்கள் வேண்டாம் பங்காளிகள் வேண்டும் என்று கோஷம் எழுப்புவார்கள்.

பார்வையாளர்களைப் பங்காளிகளாக ஆக்கும் முயற்சி தமிழ் மண்ணில் தோற்றுப்போனது என்ற

## வடக்கில் அதிகரித்த வேட்பாளர் சுமை

உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேநேரம் பங்காளிகள் வேண்டும் என்ற பேரணிக் கோஷம் இன்னமும் சாத்திய மாகவில்லை. அதற்கான முயற்சிகளில் எவரும் ஈடுபடவில்லை என்பது அடுத்த பெரும் குறைபாடாகும்.

இவற்றின் மத்தியில் விடுதலைப்போராட்டத்திற்குப் பின்பான தமிழர் தாயகத்தின் அரசியல் நிலைமை எங்ஙனம் உள்ளது என்பதை ஆராயும் போது, தவிர்க்க முடியாத நிலையில் தமிழர்கள் தமக்கான ஒரு அரசியலை ஞாபகப்படுத்திக் கொள்கின்றனரே தவிர மற்றும்படி இதயப்பற்றோடு- எனது தந்தை, தந்தையின் தந்தை இருந்த அரசியல் கட்சி என்ற உணர்வோடு அரசியல் ஈடுபாடு இல்லையென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அரசியல் தலைமை என்பது தமிழர்களிடம் இல்லையென்பதைச் சொல்லும் போது இது தொடர்பில் பலரும் வியாக்கியானம் செய்யலாம். அரசியல் தலைமைக்கு எங்கள் அரசியல்வாதிகள் கொடுத்துள்ள வரைவிலக்கணம் வேறுவிதமானது. அதேநேரம் தமிழ் அரசியல் தலைமைகள் எப்படி இருக்க வேண்டும் என்ற பொதுமையின் அடிப்படையில் பார்த்தால் எம் தமிழினத்திற்கு அரசியல் தலைமை இல்லையென்றே சொல்ல வேண்டும்.

இதைச் சொல்லும்போது எவரும் கவலைகொள்ளத் தேவையில்லை. தமிழகத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் முதல்வர் செல்வி ஜெயலலிதா போன்றவர்க ளின் அரசியல் வாழ்க்கைய எங்கள் அரசியல் தலைமைகள் உற்று அவதானிக்க வேண்டும்.

அந்த அவதானிப்பு இருந்தால் எங்கள் தமிழ் அரசியல் தலைமை என்பது [illegible] செலவிடுகின்ற மனநிலை கொண்டவர்களை கொண்டது என்பது தெரியவரும்.

தமிழகத்தில் அ.தி.மு.க. அல்லது தி.மு.க. ஆட்சி அமைக்கலாம். ஆனால் தேர்தலில் தி.மு.க. தலைவர் கருணாநிதியோ அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவோ தத்தம் தொகுதியில் தோற்பது என்ற பேச்சுக்கே இடமிராது. அந்தளவிற்கு அரசியல் தலைமைகள் தலைமைக்கான தேர்தல் வெற்றியையாவது உறுதிசெய்துள்ளன.

ஆனால், எங்கள் மண்ணில் தேர்தல் வெற்றி என்பது அரசியல் தலைமைகளுக்குக் கிடைப்பதே சந்தேகம் என்னும் அளவிலேயே நிலைமை இருக்கும்போது தமிழர்களுக்கு அரசியல் தலைமை உண்டா? என்ற கேள்வி எழுவதில் எந்தத் தவறும் இல்லை.

எதுவாயினும் எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் அதற்கு முன்பாக நடைபெறும் தேர்தல் பிரசாரத்தில் ஏகப்பட்ட உருட்டுப் புரட்டுகள் முன்வைக்கப்படும்.

தமிழ்மக்களை ஏமாற்றுகின்ற இந்த வார்த்தை ஜாலங்கள் இன்று நேற்று முன்வைக்கப்பட்டவையல்ல. காலாகாலமாக தேர்தல் வேளைகளில் சொல்லப்படுகின்ற சுத்துமாத்துக்கள் என்பது தெரிந்த உண்மை.

எது எப்படியாயினும் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் எப்படி அமையும் என்பதை தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களுமே தீர்மானிக்கப் போகின்றன. அதேசமயம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுவதென்பது மிகப்பெரியதொரு எண்ணிக்கை என்றே சொல்ல வேண்டும்.

இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டது ஏன்? என்பதைப் பார்க்கும்போது முழுநேர அரசியல்வாதிகளைக் கொண்ட அரசியல் தலைமை தமிழர்களிடம் இல்லாமையே காரணம் எனலாம்.

இவர்களை வெல்ல முடியாது. அந்தளவுக்கு அவர்கள் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றுகின்றனர் என்ற நிலைமை இருந்திருக்குமாயின் அநேகமான அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தேர்தலில் போட்டி யிடுவதில் இருந்து பின் வாங்கியிருப்பர்.

ஆனால் முழுநேர அரசியல்வாதிகளை எதிர்கொள்ளுதல் என்ற பிரச்சினை புதுமுகத்துடன் அரசியல் பிரவேசம் செய்வோருக்கு இருக்கவில்லை. இதனால் அட, அவர்கள் தொடர்ந்து தேர்தலில் கேட்கலாம் என்றால்; அவர்களே பாராளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர் என்றால், நாங்களும் தேர்தலில் நின்றால் என்ன? என்ற நிலைமையே இத்தகையதொரு சின்னாபின்னத்தை உருவாக்கியது. எது எப்படியோ போலிப் பிரசாரங்களை மக்கள் நம்பாமல் இருந்தால் அது போதும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடி பிள்ளையார் கோவிலில் கங்காணி கார்த்திகேயனின் தெய்வீக சொற்பொழிவு. காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே வழிக்கே என்ற பொருளில் அவ ரின் உரை இடம்பெறுகிறது. அடியார் பெருமக்களே இந்த உலகில் நாம் எவ்வளவு தான் பொருளை, பணத்தைச் சேர்த்தாலும் அருளைச் சேர்க்காவிட்டால் மனிதப் பிறப்பின் அர்த்தம் செயலிழந்து போய்விடும்.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை
அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை

என்ற நம் தமிழ் மொழியின் கருப்பொருள் எத்துணை அர்த்தமானது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

உயிர் பிரிந்து விட்டால் இந்த உடலை சுட்டெரித்து விடுவார்கள். அதன் பின் புண்ணிய பாவம் மட்டுமே பற்றிக் கொள்ளும். அமைச்சராக இருந்த சேர்.கந்தையா வைத்திய நாதன் மதோட்ட நன்னகர் சென்று திருக்கேதீச்சர நாதனின் கோயிலை கட்டி எழுப்பினார்.

சேர்.பொன். இராமநாதன் சைவப் பெரு வள்ளல் என்று போற்றப் பட்டார். இந்த உலகில் மனிதப் பிறப்பெடுத்த நாம் பாவம் செய்யாது புண்ணியம் செய்தாக வேண்டும். மக்களை ஏமாற்றுதல், நம்பிக்கைக்கு குந்தகம் செய்தல், மோசடி புரிதல் போன்றன மகாபாவம்.

எங்கள் நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றுகின்ற மா பாவம் நிறையவே நடந்தேறுகின்றது.

பதவி ஆசையின் பெரு மோகத்தால் கண்டபாட்டில் பொய் உரைக்க அரசியல்வாதிகள் தயாராகி விடுகின்றனர்.

அன்புக்குரியவர்களே!

காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்ற கூற்றை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

இப்படியாக கங்காணி கார்த்திகேயனின் உரை நீண்டு நிறைவுற்றது.

நேரம் மாலைப்பொழுது. ஆலடி மாநாட்டில் மூப்பரைத் தவிர பண்டிதர், வாத்தியார் , விதானையார், கங்காணியார் என அனைவரும் ஒன்றுகூடி விட்டனர்.

பண்டிதர் தலைமையில் மாநாடு ஆரம்பமாகியது.

**பண்டிதர்:** கங்காணியாற்ற சொற்பொழிவு வாக்கை குருநாகலில வாக்களிக்க அனுமதி கேட்டுத்தான் போயிருக்கிறார்.

**விதானையார்:** இதென்ன மூப்பருக்கு நடந்தது. இஞ்ச அளிக்க வேண்டிய வாக்கை குருநாகலில அளிக்கிறது ஏன்? எதற்கு?

**பண்டிதர்:** கங்காணியார் கேட்கிறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஆனால், ஒரு ஒழுங்கு முறை இருக்கிறதை நாம் மறந்து விட முடியாது.

**வாத்தியார்:** சரி சரி இது தேர்தல் காலம். அவரவர்



## அதிபரையும் பறிகொடுத்த புங்குடுதீவு மகா வித்தியாலயம்

காலத்தின் தேவை. தேர்தல் காலத்தில் ஏகப்பட்ட மோசடிகள் நடக்கும் இந்த நேரத்தில் தான் தர்மத்தை புண்ணியத்தைப் பற்றி நாம் எடுத்துரைக்க வேண்டும்..

**வாத்தியார்:** கங்காணியார் பெரியாஸ்பத்திரியிலல்லோ வேலை செய்தவர். அவருக்குத் தெரியும் தானே நோயாளிகள் படுகின்ற அவஸ்தை. அதால அவரிட்ட ஒரு பலமான அனுபவம் இருக்கும். அதுதான் காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே என்ற பொருளில் அவர் தன்ர உரையை ஆற்றியுள்ளார்.

**விதானையார்:** அதுசரி எங்க மூப்பரைக் காணவில்லை.

**பண்டிதர்:** மூப்பர் யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு போயிற்றார்.

**விதானையார்:** ஏனாம்?

**வாத்தியார்:** தன்ர

**கங்காணியார்:** நம்மட சிவாஜிலிங்கத்தார் குருநாகல் மாவட்டத்திலேயல்லோ இந்த முறை போட்டியிடுகிறார். அதுதான் சிவாஜிலிங்கத்துக்கு வாக்களிப்பதற்காக தன்ர வாக்கை குருநாகல் மாவட்டத்தில வாக்களிக்க அனுமதி கேட்டுத்தான் மூப்பர் யாழ்ப்பாண செயலகத்திற்கு போயிருக்கிறார்.

**விதானையார்:** இதென்ன கதை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாக்காளர் ஒருவர் குருநாகலில போய் வாக்களிக்க முடியுமோ என்ன? மூப்பற்ற கதையைக் கேட்டு கச்சேரியில சிரிக்கப்போகினம்.

**கங்காணி:** யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் குருநாகலில வேட்பாளராக போட்டியிடலாம் என்றால், யாழ்ப்பாணத்து வாக்காளர் குருநாகலில வாக்களித்தால் என்னவாம். தங்கட தங்கட ஆதரவுகள் வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்பச் செயற்படுவினம். நாம் ஏன் அது பற்றி அலட்டிக் கொள்ளுவான்.

**விதானையார்:** அதுசரி வாத்தியார் புங்குடுதீவு மாணவி வித்தியா படித்த புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் நேற்று முன்தினம் மாரடைப்பால இறந்து போனாராம்.

**பண்டிதர்:** என்ர பரம சிவனே. இதென்ன துன்பமா இருக்குது.

**விதானையார்:** மாணவி வித்தியாவின்ர கொலை புங்குடுதீவில பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திப் போட்டுது. அதிலும் குறிப்பாக புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில பெரும் அதிர்ச்சி.

வித்தியாவோட படித்த மாணவர்கள் வித்தியாவை நினைத்து இடைஇடையே அழுகிற சம்பவங்களும் நடக்குதாம்.

அதிபர் ஒரு நல்ல மனுசன். வித்தியாவின்ர கொலை அவரை பேரதிர்ச்சிக்கு ஆளாக்கிபோட்டுது.

நல்லவர்கள் என்ன செய்ய முடியும். தங்களுக்குள்ள வேதனையை வச்சிருக்க இதயம் தாங்குமோ.

**கங்காணியார்:** வாத்தியார் எனக்கொரு சந்தேகம். சிலவேளை புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபருக்கு ஏதாவது அழுத்தங்கள் இருந்திருக்குமோ?

**விதானையார்:** சொல்ல முடியாது. தொலைபேசிகளில வெருட்டினாலும் பயந்து போவினம். அந்த அழுத்தம் காரணமாகவும் புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் கணேஸ்வரன் மாரடைப்பால இறந்திருக்க முடியும்.

**பண்டிதர்:** என்னவா இருந்தாலும் மாணவி வித்தியா மே மாதம் 13 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட பின் ஜூலை 17 ஆம் திகதி அந்தப் பாடசாலை அதிபர் இறந்து போனார்.

இரண்டு மாதங்களுக்குள்ள புங்குடுதீவு மகா வித்தியாலயம் தன்ர அதிபரை பறிகொடுத்து நிற்கிறது. இதையெல்லாம் நினைக்க தலை சுற்றுது.

**வாத்தியார்:** மாணவி வித்தியாவின்ர ஆத்மா மிகப் பெரிய பலமான சக்தி கொண்டது என்று தான் நான் சொல்லுவன். புங்குடுதீவில நடந்த அந்தச் சம்பவம் நாடுமுழுவதிலும் அலை வீசுகிற அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நாடு முழுவதிலும் நடந்தன என்றால் வித்தியாவின் ஆத்மா பலமானது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஏதோ அந்தப்பிள்ளையின்ர ஆத்மா இறைவன்ர திருவடிகளில சாந்தியடைய வேணும் எண்டு நாங்கள் கடவுளை பிரார்த்திக்க வேணும். அதோட புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபருக்கு ஏதாவது அழுத்தம் இருந்ததா என்பதை ஆராய்வதும் அவசியம்.

இதுவிடயத்தில நீதிபரிபாலனம் நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறம். இப்படி வாத்தியார் கூறிய போது பிள்ளையார் கோவில் மணியும் ஒலித்தது. பிள்ளையாரின் கண்டாமணி ஒலிப்போடு ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வேலையை இழந்த சேவகன்

ஒரு நாள் காலை அக்பரும் பீர்பாலும் அரண்மனை முற்றத்தில் நின்றுகொண்டிருந்தனர். சூரியனுடைய பொன்னிறக்கதிர்கள் பட்டதால், யமுனை நதி தனி அழகுடன் விளங்கியது. தங்கத்தை உருக்கி வார்த்ததுபோல் யமுனை நதி ஓடிக்கொண்டிருந்தது. இந்த



அழகிய காட்சியைக் கண்டு களித்தவாறு, வெகு நேரம் தம்மை மறந்து நின்றுகொண்டிருந்தார் அக்பர்.

அப்போது திடீரென்று "மகாராஜா! மகாராஜா! திருடன் என் பொருட்களை கொள்ளையடித்துக் கொண்டு போகிறானே! உங்கள் கண்ணெதிரிலா இந்த அக்கிரமம் நடைபெறுவது?" என்ற ஒரு கூச்சல் கேட்டது.

சக்கரவர்த்தி திடுக்கிட்டவாறு குரல் வந்த திசையை நோக்கினார். அரண்மனைக்கு வெளியே திருடர்கள் நாலைந்துபேராகச் சேர்ந்து ஒருவனை அடித்து, அவனிடமிருந்து பொருட்களை அபகரித்துச் சென்றதைப் பார்த்தார்.

இதைப் பார்த்ததும் அவருக்கு ஆத்திரம் அதிகமாகியது.

"நம் எதிரிலேயே இந்த அக்கிரமம் நடைபெறுவதா?" என்று வருந்தினார். உடனே, சேவகர்களில் சிலரை அனுப்பி அந்தத் திருடர்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பிடித்து வருமாறு உத்தரவிட்டார் அக்பர்.

சிறிது நேரம் சென்றது. சேவகர்கள் வெறுங்கையுடன் திரும்பினர். "நாங்கள் செல்வதற்குள் திருடர்கள் ஓடிப்போய்விட்டனர்" என்று சக்கரவர்த்தியிடம் கூறினர் சேவகர்கள்.

இதைக்கேட்ட அக்பர் மேலும் கோபமடைந்தார். "ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லாதவர்கள். அரண்மனை எதிரிலேயே கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள், பார்த்துக்கொண்டு பேசாமல்தானே இருந்திருக்கிறீர்கள். இப்போது அந்தத் திருடர்களையும் விட்டுவிட்டு பொம்மைகளைப் போன்று நிற்கிறீர்கள். நீங்கள் சேவகர் வேலைக்கு அருகதையற்றவர்கள். மாடுமேய்ப்பதற்குத்தான் நீங்கள் லாயக்கு. என் முன்னே நிற்காதீர்கள். வெளியே செல்லுங்கள்" என்று அவர்களை அரண்மனையிலிருந்து விரட்டிவிட்டார். வேலையிழந்த சேவகர்கள் பட்டினியால் பெரிதும் வருந்தினர்.

பீர்பாலிடம் சென்று நமது துயரத்தைக் கூறினால், அவராவது அரசரின் மனதை மாற்றி நம்மை மீண்டும் வேலையில் சேர்த்துவிடுவார். என்ற நம்பிக்கையுடன் வேலை இழந்த சேவகர்கள் பீர்பாலிடம் சென்றனர்.

"ஐயா, நாங்கள் தவறு செய்யவில்லை. எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட செய்கைக்காக சக்கரவர்த்தி எங்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். வேலை கிடைக்காததால் நாம் பெரிதும் துன்பப்படுகிறோம். நீங்கள்தான் அரசரிடம் கூறி எங்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளுமாறு கூறவேண்டும்" என்றனர்.

"என்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறேன்" என்று கூறிவிட்டு அரண்மனைக்குச் சென்றார் பீர்பால்.

பீர்பால் சென்றபொழுதுகூட சக்கரவர்த்தி ஆழ்ந்த கவலையில் இருந்தார். வழக்கமாக பீர்பால் வரும்பொழுது புன்சிரிப்புடன் அவரை வரவேற்கும் சக்கரவர்த்தி, அன்று வழக்கத்துக்கு மாறாக மவுனமாக இருந்தார். சற்றுநேரம் சென்றதும், அவரே பேசத் தொடங்கினார்.

"அரண்மனை எதிரில் நம் கண்முன்னாலேயே திருட்டு நடைபெற்றிருக்கிறதே! இங்கேயே இவ்வாறு இருந்தால், மற்ற இடங்களில் இன்னும் எவ்வளவு மோசமாக இருக்கும்?" என்று பீர்பாலிடம் கூறினார் அக்பர்.

"அரண்மனை எதிரே திருட்டு நடந்துவிட்டதால், நாடுமுழுவதும் திருட்டும் கொள்ளையும் நிறைந்திருக்கும் என்று நினைக்கக் கூடாது. தங்கள் ஆட்சியில் திருட்டும் கொள்ளையும் இல்லாமல் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்று வெளிநாட்டிலிருந்து வந்தவர்களே பாராட்டியிருக்கின்றனர். அவ்வாறு இருக்கும் பொழுது இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து ஏன் கவலைகொள்கிறீர்கள்?" என்றார் பீர்பால்.

"வெளி நாட்டவனுக்கு நம் நாட்டைப்பற்றி என்ன தெரியும்? ஏதோ ஓரிடத்தில் பார்த்துவிட்டு நம் மனம் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதற்காக, அவர்கள் அவ்வாறாக கூறியிருக்க வேண்டும். அதையெல்லாம் நாம் உண்மையென்று எடுத்துக்கொள்ளலாமா?" என்றார் அக்பர்.

அப்போது மாலை மறைந்து இருள் பரவத் தொடங்கியது.

அரண்மனையிலுள்ள பணியாளர் ஒருவன், வந்து பேரரசன் அறையிலுள்ள விளக்குகளை எல்லாம் ஏற்றினான். அரசரின் பக்கத்தல் உயரமான மேடை ஒன்றின் மீது பெரிய விளக்கு இருந்தது. அதையும் ஏற்றினான் அந்தப் பணியாள். பணியாள் விளக்கேற்றியதும் அறை முழுவதும் ஒளி பரவியது.

"இதனைப் பார்த்த பீர்பால், அரசே இந்த விளக்குக் கம்பத்தின் கீழே பாருங்கள். இருளாக இருக்கிறது. ஆனால், இந்த விளக்கின் வெளிச்சம் அறைமுழுவதும் பரவியிருக்கிறது." என்றார்.

"எதற்காக இதைக் கூறுகிறாய்?" என்றார் அக்பர்.

அந்த விளக்கைப் போன்றதுதான் எமது அரண்மனை விவகாரமும். இங்கிருந்து பரவும் ஒளி, நாடு முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. விளக்கின் கீழே இருள் இருப்பதால் நாடு முழுவதும் இருளாக இருக்கும் என்று நினைக்கக் கூடாது" என்றார் பீர்பால்.

"இதற்காகத்தான் இவ்வளவு தூரம் சுற்றி வளைத்து விஷயத்துக்கு வந்தாயா? நாளை முதல் மறுபடியும் அவர்கள் வேலைக்கு வரலாம்" என்றார் அக்பர். பீர்பால் அவருக்கு நன்றி கூறிவிட்டு, சேவகர்களிடம் சென்று "நாளை முதல் நீங்கள் எப்போதும் வேலைக்கு வரலாம்!" என்றார்.

இதைக் கேட்டதும், சேவகர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அதே சமயம். பீர்பாலுக்கும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர்.

## தாய்



கலைஞன்..!
வரைந்த ஓவியத்துக்கு
வர்ணம் தீட்டுகிறான்
சுவரில்.

தாய்..!
தீட்டிய ஓவியத்துக்கு
வர்ணம் தீட்டுகிறாள்
உயிரில்.

கலைஞன், தீட்டியது
சுவரோவியம்.
தாய், தீட்டியது
உயிரோவியம்.

-முருகன்

## பைங்குடில் வாயுக்களால் பெரும் பிரச்சினை!

ஆயிரக்கணக்கான மின்னிலையங்கள் உலகம் முழுதும் இயங்குகின்றன. இவை நிலக் கரி, பெற்றோலியம், எரிவாயுக்களை எரித்து மின்னை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குகின்றன.

இந்த சக்தி மூலங்கள், எரிகிற பொழுது வெப்பம், காபநீரொட்சைட்டு வெளிவிடப்படுகிறது.

அத்துடன் இவை எரிகிறபொழுது நேரடியாக உருவாக்கப்படும் வெப்பமானது கதிர்வீச்சு மூலம் விண்வெளிக்கு வெளியேற்றப்படவேண்டியதே இயல்பு. ஆனால், வளிமண்டலத்தில் காணப்படும் அதிகரித்த வீதத்திலான காபநீரொட்சைட்டு, மெதேன் மாசுகள் காரணமாக, அவ்வாறு வெப்பம் வெளியேறாமல் தடுக்கப்படுகிறது. அதாவது இவை இலட்சம் தடவைகள் இந்த வெப்பம் கதிர்வீச்சு மூலம் தப்பித்துப்போவதைத் தடுக்கின்றன. எமது பூமி ஆயிரம் ஆண்டுகளுக்கு வெப்பமாகவே இருப்பதற்கான அளவு வளிமண்டல மாசு காணப்படுகிறது என காலநிலை ஆய்வாளர்களான விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அதுமட்டுமல்ல, அவர்களது கணக்கெடுப்பில்



பின்வரும் செய்திகளும் பெறப்பட்டுள்ளது.

குறித்தளவு நிலக்கரி எரிக்கப்படுவதால் நேரடியாக வெளிவிடப்படும் வெப்பத்தை- வளிமண்டலத்தில் சேரும் அளவுக்கதிகமான காபநீரொட்சைட்டு, அடுத்த 34 நாட்களுக்கு தொடர்ந்து பிடித்து வைத்திருக்கிறது. அதாவது கதிர்வீச்சு மூலம் விண்வெளிக்கு தப்பிச்செல்லவிடாமல் தடுக்கிறது. இதேபோன்று பெற்றோலிய எரிபொருளில் இருந்து நேரடியாக உருவாக்கப்படும் வெப்பமானது, அடுத்த 45 நாட்களுக்கு பூமியை வெப்பமாக்கிக் கொண்டிருந்தது. அதுபோன்று எரிவாயுவின் நேரடி வெப்பமானது 58 நாட்களுக்கு பூமியை வெப்பமாக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது. அதாவது காபநீரொட்சைட், மெதேன் போன்ற பைங்குடில் விளைவு (பச்சை வீட்டு விளைவு) வாயுக்களால் இந்த நிலை தோற்றுவிக்கப்படுகிறது.

உண்மையில் பைங்குடில் வாயுக்கள், பூமி வெப்பமடைவதில் மேற்சொன்னவாறு பெரியளவில் பங்கெடுப்பதால், இது மிகப்பெரிய சூழலியல் பிரச்சினை என்பதை யாவரும் உணர்ந்து கொண்டு மாற்றுவழிகளைத் தேடவேண்டியது மிகமிக அவசியம் என காலநிலை விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தமிழில், பாமா



இணையத்தில், மாதேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## நடிகர் சிவகார்த்திகேயன் பற்றி?

## நீங்கள் எந்த சின்னத்தில் போட்டி யிடுகிறீர்கள்?

## மாறு வேடத்திற்கு சிறந்தவர்கள் கமலா? விக்ரமா?

**நரேன் — வல்வெட்டித்துறை**

**இன்றைய கால இளைஞர், யுவதிகள் பற்றி உங்கள் கருத்து?**

பெரியவர்கள் கூறும் அறிவுரைகளை பொறுமையாக இருந்து கேட்கமாட்டார்கள். அப்படி கேட்கும் மனநிலை அவர்களுக்கு வரும்போது பெரியவர்கள் அறிவுரை கூறும் நிலையில் இருக்கமாட்டார்கள் அவ்வளவுதான்.

**நரேன் — வல்வெட்டித்துறை**

**மாறு வேடத்திற்கு சிறந்தவர்கள் கமலா? விக்ரமா?**

எம் அரசியல்வாதிகள் சிலரிடம் கமல், விக்கிரமே தோற்றுவிடுவார்கள். உங்கள் கற்பனையில் அவர்களையும் நினைத்துப் பாருங்களேன். பிளீஸ்.

**விமல் — இணுவில்**

**ஒரு தத்துவம் சொல்லுங்கள்?**

ஒருவனுக்கு சமைக்கும் போது தான் அம்மாவின் அருமையும் சம்பாதிக்கும் போது தான் அப்பாவின் அருமையும் தெரிகிறது.

**ரஞ்சித் — மானிப்பாய்**

**வளர்ந்தவர்களை குழந்தை போல நடக்காதே என்று கூறுவார்களே?**

அடிகள் வலிப்பதை விட எப்போது ஒருவர் திட்டும் திட்டு வலிக்கிறதோ அப்போதே நாம் பெரியவர்கள் ஆகிவிட்டோம் என்பது முடிவாகி விடுகிறது.

**கௌரீசன் — கரணவாய்**

**தமிழர்களின் தாயக கனவு நினைவாகுமா?**

கனவுகளின் பலன் எனக்குத் தெரியாது கௌரீசன். இதற்குப்பதிலை தற்போதைய அரசியல் பிரசாரக் கூட்டங்களில் பார்க்கலாம். **(வெறும் பேச்சளவில் மட்டும்)**

**மதி — சுழிபுரம்**

**கனவுகள் பலிக்குமா அங்கிள்?**

கனவுகள் பலிக்குமா? பலிக்காதா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கனவு என்பது ஒன்று இருப்பதனால்தான் பலருக்கு பைத்தியம் பிடிக்காமல் இருக்கின்றது என்பது எமது கருத்து.



**கோபி — மந்திகை**

**நடிகர் சிவகார்த்திகேயன் பற்றி?**

சினிமா என்று எந்த பின்னணியும் இன்றி விஜய் ரிவி “கலக்கப் போவது யாரு” நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றிபெற்று அதே நிகழ்ச்சியில் தொகுப்பாளராய் பணியாற்றி தன் யதார்த்தமான நகைச்சுவையால் ரசிகர்களைக் கவர்ந்து தனுசின் 3 படத்தில் தனுசின் நண்பராக அறிமுகமாகி எதிர் நீச்சலில் கதாநாயகனாகி இன்று வெற்றியின் நாயகன் என்ற பெரும் உச்சியில் இருக்கிறார்.



“எனக்குதான் உடம்பு குணமாயிடுச்சே அப்புறமும் ஏன் இன்னும் ரெண்டு மூணு நாள் ஆஸ்பத்திரியிலயே இருக்கச் சொல்றீங்க?”

“நீ வீட்டுக்கு வந்துட்டா, உன் தங்கச்சி ஊருக்குப் போயிடுவாளே...!”

**தர்சி — வயாவிளான்**

**நீங்கள் எந்த சின்னத்தில் போட்டியிடுகிறீர்கள்?**

ஐயையோ அரசியல் நமக்கு வேண்டாமுங்க. அது ரம்பக் கஷ்டம். எனக்கு பொய் சொல்ல வராது. என் மனைவியைத் தவிர வேறு யாரிடமும் இதுவரை நான் பொய் சொன்னதில்லை என என்னை வேட்பாளராக்க வந்தவர்களிடம் தெளிவாகக் கூறிவிட்டேன்.

**தனு — அல்வாய்**

**மாப்பிள்ளை எப்படி இருந்தாலும் பரவாயில்லை வெளிநாட்டு மாப்பிளைதான் வேண்டும் என்று நம்மவர்கள் அடம் பிடிக்கின்றார்களே?**

இங்கே மெக்கானிக் வேலை செய்யும் ஒருவனின் குறிப்புப் பொருந்திவர என் மகளின் கணவன் மெக்கானிக்கா? என அருவருத்துவிட்டு வெளிநாட்டு ஹோட்டலில் கோப்பை கழுவும் ஒருவனுக்கு மகள் பறப்பாள். அப்புறம் அவள் நான்கு சுவருக்குள் அகப்பட்டு கிடப்பாள்.

**சிறி — வவுனியா**

**இன்றைய இளைஞர் மது குடிப்பதை நாகரிகம் என்று நினைக்கிறார்களே?**

நாகரிகத்திற்காக குடித்துவிட்டு நாகரிகம் இன்றி வீதியில் ஆடை கழன்று கிடக்கிறார்களே அது நாகரிகமா? அநாகரிகமா?

**சுஜி — உரும்பிராய்**

**நீங்கள் தனி ஆளா? பலபேரா?**

பண்ணிங்கதான் கூட்டமாகவரும் சிங்கம் சிங்கிளாதான் வரும்!

**தர்சி — மடத்தடி**

**பெண்களின் கஷ்டத்தில் குளிர்காயும் ஆண்கள் பற்றி?**

மற்றவர்களின் துன்பத்தில் இன்பக்காணும் ஈன குணம் இந்த மனிதனுக்கு மட்டும்தான் உண்டு. மிருகங்கள் போக காலத்தில் கூட தன் துணையை கஷ்டப்படுத்துவதில்லை இது தான் உண்மை.

**மயூரதன் — யாழ்ப்பாணம்**

**தேர்தல் வருகின்றது. எவ்வாறு வாக்களிப்பது என்பதை விளக்குவர்களா? ஒருவர் எத்தனை X இடலாம். எவ்வாறு இடல் வேண்டும் என்பது போன்ற தெளிவான விளக்கம் தேவை?**

முதலில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கப் போகிறீர்களோ அந்தக் கட்சியின் சின்னத்திற்கு அருகில் இருக்கும் அடைப்பு கூட்டின் விளிம்புகளில் படாதவாறு புள்ளடி (X) இடவேண்டும். பின்பு அந்தக்கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களில் எமக்கு பிடித்த வேட்பாளர்களில் மூவருடைய விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு மேல் இலக்கக் கூட்டின் விளிம்புகளில் படாதவாறு புள்ளடியிடல் (X) வேண்டும்.

**றொசான்**

**இன்றைய தகவல் தொடர்பாடல்கள் இளைஞர், யுவதிகளால் பாதிக்கின்றனவா?**

“அறுபது வயது இளைஞன் பதினான்கு வயது சிறுமியைச் சீரழித்தார்” இதைத்தான் ஊடகங்களும் போடுகிறது அதைத்தான் அவர்கள் விழுந்து விழுந்து வாசிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இமயம் தொட

உன்னால் எடுக்கப்பட்ட எதையும்
மற்றவருக்கு கொடுக்க நினை
கொடுக்கப்பட்ட எதிலும்
பற்றற்று வாழ்
உன்னில் பற்றற்று
பிறரில் பற்று வை
சுற்றம் உன்னைச் சூழ்ந்திருக்கும்

மாவை. நா.கஜேந்திரன்

## கடவுளின் சந்நிதி

காமம் கொண்ட
நான்காவது தமிழை
நானடைந்தபோது
என் நா மரத்துவிட்டிருந்தது
அமைதியும்
அந்தகாரமும் சூழ்ந்த
விடிகாலையில்
நொந்து போனது
கற்பனை ஐந்து
மார்போடு ஸ்நேகம்
தோள்களில் ச்ரணம்
ஆச்சரியக் குறிகளை
தொட்டுப்பார்த்து
இரவு வேர்வை
உலர்த்தியது
இடைவெளியற்ற
இறுக்கத்தில்
ஆயிரம் போதிமரங்கள்
சரிந்து வீழ்ந்தன
நீவி விடும் விரலும்
கோதும் தலைமுடியும்
கொட்டட்டும் சங்கீதத்தை

நெடுந்தீவு கே.யோகேஸ்

## உறங்காத விழிகள்

உறங்காத விழிகளே
கலங்கரை உறவுகளே
நீங்காத நினைவுச் சின்னங்களே
உயிர்த் தியாகங்களை உலகிற்கு
காட்டிய உன்னத இருப்பிடங்களே
சூரியக் கதிர்களாக- இன்று
பிரகாசிக்கும் ஒளி விளக்குகளே
சருகாகி தேகத்தை ஆகுதியாக்கி
உயிரிலும் மேலாக...
உயிர்த்தியாகம் புரிந்து
எம்மண்ணில் குருதியாறு
கொப்புளிக்க சங்கமமாகிய
எம் உறவுகளுக்கு
கண்ணீரை காணிக்கையாக்கி
அஞ்சலிக்கின்றோம் நாமும்

பி.சீதாராம்
பருத்தித்துறை

## காலனே நீ உடனே வந்துவிடு

பாழ்பட்ட சமூகத்தினுள்ளே
பல் இளிக்கும் பொய் வாழ்வு
மனம் மறந்து போகின்றது
உண்மை எனும் ஒரு சொல்லை
தினம் தினம் மாறுபடும்
சாக்கடை அரசியல்கள்
புத்தம் புதிய வெளியீடுகள்
புதுமைப்பட படைப்புக்கள்
நாடறிய தூங்கி எழும்
படிக்கப்பட்ட அரசாங்கம்
இறைவனையே ஏமாற்றுகின்ற
இன்றைய பாதிரிகள்
இளவுகள் எல்லாம் கண்ட பின்னும்
கடவுள் இன்னும் எழவில்லை
காலனது விண்ணப்பப்படிவங்களும்
எமக்கு இன்றும் கிடைக்கவில்லை

அ.அன்ரன் ரோய்
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி

## இனிய காலைப்பொழுது

இனிய காலைப்பொழுதினிலே
கதிரவன் அவன் தனது
பொற்கதிர்களைக் காட்டி
இப்பரந்த உலகை
வெளிப்புறச் செய்கின்றான்
வாடிக்கிடந்த கமலமக்கா
மெல்லென விரிய
மாலையில் மணம் வீசிய
மல்லிகைகள் மணம் குறைய
புத்தம் புதுப்பொலிவுடன்
பூக்குதையா எங்கள்
காலை மஞ்சரிகள்
புதுமணம் வீசி இப்புதிய
காலையை வரவேற்கின்றனவே
தமது இனிய மொழியிலே
மலரட்டும் இனிய காலைப்பொழுது

சி.அபிலாஷினி
யா/வ.ம.ம.க



## கல்யாண (சுகமான) ஊர்வலமோ

பழையதை மறக்காது நினைவுறுத்தி
பாசப்பிணைப்பினைக் காட்ட
இளைய தலைமுறையினருக்கு
இனிமை இதுதானென எடுத்துக்காட்ட
ஜோடி காளைபூட்டி ஜோடி சேர்ந்து
ஜோலியாக போவது தானெங்கே!
ஆடிமுடிக்கு முன்னர் அறுபதாம்
அகவை கல்யாண ஊர்வலமோ!
மாட்டுவண்டிதனில்
மனம் மகிழ்ந்து செல்லும் பாணி
மோட்டார்வண்டி தனில்
மோகனசுகம் தருமா?

பொ.புனிதன்
வரியப்புலம்

## நினைவு

வளர்ந்து வரும் உலகில்
பலரக வாகனம்
வீதியிலே பறந்தாலும்
தமிழர் தம் பண்பாட்டை
கண்முன் காட்டி
நிற்கும் மாட்டு வண்டியில்
அறுபது வயதானாலும்
அன்பு மாறாத
தம்பதியர் இவர்கள்
ஒய்யாரமாய் செல்லும் நிலை
நினைவுபடுத்துகிறது
எமக்கிங்கு
மீண்டும் ஒரு
வெள்ளிப் பாதரசத்தை

த.தனுஜா
அல்வாய்

# மௌனத்தின் தேடல்- 257

## மாட்டுவண்டிப் பயணம்

பழமைவாய்ந்த
மாட்டுவண்டியில்
நாம் பயணிக்கும்போது
கிடைக்கும் சுகமே தனியடா
அது காதில் கடுக்கணும்
கையில் செல்போனுமாய்
திரியும் இன்றைய
இளசுகளுக்குத்
தெரியுமா?

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மனநிறைவு

ஏதிலிகள் ஆனாலும்
எரிபொருளை மறித்தாலும்
பாரினிலே எங்களுக்கு
பாரமேற்றி பயணிக்க
தொல்லையில்லை
தொகையுமில்லை
எல்லை சொல்ல
எவருமில்லை
அல்லல் இன்றி
அவசரம் தானுமின்றி
அன்பு கொண்ட
உயிர்ப்பயணம்

புவபாலன்
அணிஞ்சில்

## குதூகலம்

நம்ம வீட்டுக் குடும்ப வண்டி
ஒற்றை வழிப்பாதையில்
ஒய்யாரமான பயணம்
குன்றுகுழி காப்பற் வீதி
சந்து பொந்து
அத்தனையையும்
சாதகமாய்த் தாண்டி
சல்லடை போடும் வண்டி
குடும்பமாய் குதூகலமாய்
ஊர் பார்த்து
வீடு சேரும் வண்டி

யு.சோபியா
விசுவமடு

## அந்தநாள்

இரண்டு மாடு பூட்டி வீதி சென்ற
மச்சான் எப்ப வருவான்
என்ற காலம் போய்
இன்று நெடும் சாலையிலே
வீதியிலே விதியை நினைத்து
போனதும் மீண்டும் வருமோ
மாட்டுவண்டி சோடியாகச் செல்வோமோ

ஜெ.ராருக்ஷி, ஜெ.சாருக்சி,
பருத்தித்துறை

## பயணமெது

போகுமிடம் தெரியாது- ஆனாலும்
பொறுமையுடன் பொதிசுமக்கும்
கடும் வலி இருந்தாலும்
கள்ளமில்லாமல் வேலை செய்யும்
எஜமானின் ஒரு சொல்லுக்கு
எப்போதும் கீழ்ப்படியும்
உடம்பில் உயிரிருக்கும்வரை
உண்மையாக உழைத்துப்போடும்

யோ.காண்டீபன், மானிப்பாய்

## தொடரட்டும் பயணம்

உழவிற்கோ தொழிலுக்கோ
பயன்படுத்தாமல்
காளைகளை
கோழைகளாக்கி
கிராமமும் நகரமாகும்
விந்தை உலகிலே
ஊன் வேண்டாம்
உன் உறவு வேண்டும்
என்று கூறும்
நல்ல உள்ளங்களால்
தொடரட்டும் பயணம்
பாதுகாக்கப்படட்டும்
காளைகள்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# மௌனத்தின் தேடல் -258



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.07.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சென்ற 28.06.2015 ஞாயிறு வலம்புரியில் “சிதைக்கப்பட்டாள்” என்ற உண்மைச் சம்பவவிபரிப்பு வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து சென்றவாரம், நவரஞ்சினிநடராஜா (சுரேகா) -(சிவில் சமூக ஆலோசகர் மனித உரிமைகள்/ பெண்ணுரிமைகள்) அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. கடந்த பத்து வருடங்களாக பெண்கள் உரிமைகள் மற்றும் மனிதஉரிமைகள் தொடர்பில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சுரேகா அவர்களின் நேர்காணலின் தொடர்ச்சி இவ்வாரம் வெளிவருகின்றது.**

# மனவெளி

**கேள்வி: நடந்து முடிந்த யுத்தத்தின் பின்னர் பாலியல் ரீதியான பிரச்சினைகள் பெண்கள் நிறையவே எதிர் கொள்கின்றார்கள். உங்கள் வேலை அனுபவத்தின் அடிப்படையில் சில உதாரணங்களையும், அவை நடக்காமல் இருப்பதற்கு என்ன முற்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் குறிப்பிடுங்கள்?**

பதில்: வன்னியில் நான் பணியாற்றிய அடிப்படையில் சில உதாரணங்களைமுன்வைக கிறேன். மீள் குடியேற்றத்தின் பின்னர் குடியேறிய அந்தக் குடும்பத்தில் இருந்த 14வயது சிறுமிபாலியல் தொழிலுக்காக பயன்படுத்தப்பட்டார். தொடர்ச்சியாக கடந்த 5வருடங்களாக குறித்தசிறுமி இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். சமூகத்தவர்களால் விபச்சாரியாக பார்க்கப்படும் குறித்த சிறுமி எந்தத் தவறும் செய்யவில்லை. 14 வயதில் தான் செய்வது விபச்சாரமா? என்பது கூட தெரியாமல் அநியாயமாக சீரழிக்கப்பட்டுள்ளார். நோய் வாய்ப்பட்ட சிறுமிபோல அவர் காணப்படுகின்றார். குடும்பநிலையும் அதற்கு ஒருகாரணம். வீட்டின் வறுமை நிலையும்,தந்தையின் குடிக்கு அடிமையான நிலையும் சிறுமியின் வாழ்வை நரகத்திற்கு தள்ளிவிட்டது.சிறிய குடிசை வீட்டில் பெற்றோர் இருக்கும் போதே பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்ற பரிதாபமான நிலை ஒன்றல்ல இரண்டல்ல.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து பெண்களை பாதுகாக்கவென முன்னைய காலங்களில் வாழ்ந்த பெண்கள் பல பாதுகாப்பு கலைகளை கற்றிருந்தனர். களரி, கராத்தே போன்ற தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ளவேண்டும், ஆபத்து நிலைமைகளை முன்னறிந்து நடந்துகொள்ள வேண்டும். குளரி கலையில் பெண்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய இலகுவான தற்பாதுகாப்பு முறைகள் இருக்கின்றன. இவ்வாறான கலைகள் மனதிற்கு ஒரு தைரியத்தையும் உடலுக்கு உற்சாகத்தையும் ஏற்படுத்தும். களரி போன்ற மரபுசார்ந்த கலைகளின் நுணுக்கமான விடயங்களைத் தெரிந்திருக்காவிட்டாலும் அடிப்படை விடயங்களை அறிந்து வைத்திருப்பது நன்று. முற்காலப் பெண்கள் தற்காப்புக் கலைகள் பலவற்றைத் தெரிந்து வைத்திருந்ததுடன் புதிய புதிய விடயங்களை நடைமுறைப்படுத்தியும் இருக்கின்றனர். எங்கள் புராணக் கதைகளிலும் இவ்வாறான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இந்துக் கடவுளர்களிலும் பெண் தெய்வங்கள்சித்தரிக்கப்பட்டுள்ளனர்.



எந்தவொரு விடயமும் நடந்து முடிந்த பின்னர்,முடிந்த தவறுகளைப் பற்றியும் பிரச்சினைக்கு கிடைக்காத தீர்வுகளைப் பற்றியும் பேசுவதை விடுத்து, “வருமுன் காப்போம்” என்ற நம்மூர் வாசகத்தைப் போன்று இருக்குமாயின் நிறையப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக் கொள்ளமுடியும்.

யோகா போன்ற கலைகளும் பெண்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையும். தற்காலத்தில் நடக்கின்ற முக்கியமான பிரச்சினைகளுக்கெல்லாம் பெண்களிடம் காணப்படுகின்ற இயலாமை, நம்பிக்கையற்ற தன்மை போன்றனவும் காரணமாக இருக்கின்றன. அந்த இயலாமைக்கு போர், வறுமை போன்றனவும் [illegible] வாகத் செலுத்துகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்வதற்கு வேண்டிய மனத்தைரியத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். யோகாபோன்ற கலைகள் நிறைந்த தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்குநம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறைமைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எத்தனையோ பெண்களுக்கெதிரான வன்முறைகள் அனைத்துமே இறுதியில் பெண்களுக்கு மாத்திரமே பெரியளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆண்கள் இந்த விடயத்தில் தப்பித்து விடுகின்றனர். அவர்கள் தப்பிக்கும் விதத்திலேயே விழுமியங்களும், தமிழ் கட்டமைப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளன. எமது சமூகத்தின் கலாசார சீர்கேடுகளுக்கு தாங்கள் காரணமாக இருக்கக்கூடாது என்பதை பாலியல் சுரண்டல் செய்கின்ற ஆண்கள் தங்களுடைய வீட்டிலிருக்கும் பெண்கள் அவ்வாறு யாராலும் சுரண்டப்படுவதில்லை என்ற தவறான எண்ணத்தை மாற்ற வேண்டும். பெண்களுக்கு செய்யப்படும் வன்முறைகள் ஒவ்வொரு ஆண்களாலும் [illegible] பாதுகாப்பு தன்மையே ஒருகட்டமைப்பினால் மாத்திரம் ஏற்படுத்த முடியாது.

நடந்து முடிந்த யுத்தத்தின் போது பல பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குட்படுத்தப்பட்டனர் என்பது எங்களுக்கு தெரிந்திருந்தாலும், பல பெண்கள் அவற்றை வெளியில் சொல்வதற்கு இன்றும் பயந்த வண்ணமேயுள்ளனர். பயத்துக்கான காரணங்களும் எங்களுக்கு தெரிந்த விடயங்கள் தான். கிழக்குத் தீமோர் போன்ற நாடுகளிலும் இவ்வாறு யுத்தம் நடந்து பலவருடங்களின் பின்னர், வயது முதிர்ந்த பெண்கள் தங்களுக்கு “இனிபயமில்லை” என்று தெரிந்த பின்னர், வாயைத் திறக்கின்றனர். தங்கள் மனதிற்குள்ளேயே பலவருடங்களாக அந்த வன்முறைச் சம்பவத்தை அடக்கிவைத்துக் கொண்டு வாழுவது மிகவும் கடினமான விடயம். அதுவும் அந்தப் பெண்களால் சாதாரண வாழ்க்கையை வாழமுடியாது. அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை மனதுக்குள் அடக்கி வைத்திருப்பது என்பது உளவியல்ரீதியாக பல வெளிப்பாடுகளை காட்டுவதுடன், பிரச்சினையை சகித்துக் கொண்டே வாழுவதும் பிரச்சினையே.

வன்முறைச் சம்பவம் ஒன்று நடந்து முடிந்தபின்னர், அப்பிரச்சினையின் தன்மையையும் அதனால் பெற்றுக் கொள்ள வேண்டிய தீர்வுகளையும், சுற்றி நடக்கின்ற அனைத்து விடயங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவமும் நம்பிக்கை முறைமைகளும (Coping Mechanism) வளர்த்தெடுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தவேண்டும். அதே நேரம் பயிற்சி முறைகள் மூலமும் பெண்களுக்கு புத்துருவாக்கங்கள் கற்றுக் கொடுக்கப்படவேண்டும். போரின் எந்தக் காரணிவன்முறையைக் கூட்டியிருக்கின்றது? என்பதைப் பற்றியும் நாம் சிறந்த ஆய்வுகளைச் செய்யவேண்டும்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:
Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றில் கலந்துவிட்ட இசை..!

## வாழ்க்கை...

மனயங்கத் சுப்பிரமணியன் விஸ்வநாதன் என்ற இயற்பெயரைக் கொண்ட மெல்லிசை மன்னர், சுருக்கமாக எம்.எஸ்.வி என்று அழைக்கப்பட்டார். இசை வெள்ளத்தில் இவ்வுலகை மூழ்கடிப்பதற்காக இப்பூவுலகுக்கு இவர், உதித்த நாள், 24.06.1928. எம்.எஸ்.வி தமிழ்த் திரையுலகில் புகழ்பெற்று விளங்கினாலும், கேரளாவின் பாலக்காட்டுக்கு அருகே எலப்புள்ளி என்ற கிராமத்தில் மலையாளக் குடும்பத்தில்தான் பிறந்தார். தந்தை சுப்பிரமணியன். தாய் நாராயணக்குட்டியமாள்.

தனது நான்காவது வயதில் தந்தையை இழந்த இவர், கண்ணூரில் இருந்த தனது பேரனாராகிய கிருஷ்ணராயர் வீட்டில் வளர்ந்தார். சிறுவயதில் தனது பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாத இவர், யுப்பிற்றர் பிக்சர்ஸ் இல் அலுவலக வேலை செய்து வந்தது, இவர், இசையில் நாட்டம் கொள்வதற்கு மிகவும் வாய்ப்பானது. இதனால், அரங்க நாடக இசையை (ஆமோர்னியம்) நீலகண்ட பாகவதரிடம் பயின்றார். இதன் பயனாக தனது 13மூன்றாவது வயதிலேயே மேடைக் கச்சேரி நிகழ்த்தினார் என்பதை நம்ப முடிகிறதா? அனால், அது தான் உண்மை. எம்.எஸ்.வி, சி.ஆர். சுப்பராமன் இசைக்குழுவில் ஆர்மோனியம் வாசிப்பவராகவும் ரி.கே. ராமமூர்த்தி குழுவில் வயலின் வாசிப்பவராகவும் பணிபுரிந்தார். இவர் தனியாக முதன் முதலில் இசையமைத்த திரைப்படம் எம்.ஜி. ஆரின் *ஜெனோவா.*

தமிழில் மட்டுமல்ல விஸ்வநாதன் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என பல மொழிகளிலுமாக 1200 இற்கு மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார். இசையமைப்பாளர் மட்டுமல்ல அவர் ஒரு பாடகரும் நடிகரும்கூட.

இந்தியநாட்டின் பிரதமர் மோடி, தமிழக முதல்வர் ஜெயா ஆகியோர் அன்னாரின் மறைவுக்கு இரங்கல் செய்தியை வெளியிட்டிருந்ததுடன் திரையுலக பிரபலங்கள் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

எம்.எஸ்.வி இறுதியாக வைத்தியசாலையில் இருந்தபொழுதும் பாடினார் என்பது வியப்பளிக்கிறது. அப்பாடலை, சுற்றியிருந்தவர்கள் மொபைல் போன்களில் பதிவு செய்து முகநூலின் மூலம் வெளியிட்டிருக்கின்றார்கள். அது அவர் பாடிய இறுதிப்பாட்டு. இசைக்காய் சிறுவயதிலிருந்து இறுதி வரைக்கும் தன்னை அர்ப்பணித்த அந்த வித்தகரை எண்ணுகையில் யாருக்கும் நெஞ்சம் நெகிழாமல் இல்லை.

## திரையுலகில்..

இந்த இசைச் சக்கரவர்த்தி "மெல்லிசை மன்னர்"எம்.எஸ்.விஸவநாதன் மறைந்துவிட்டார் என்கிற செய்தி கேட்டு அவரது குடும்பத்தினர், ரசிகர்கள், தரையுலகினர் மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழகமே கண்ணீரில் முழ்கியது.

பிரபல இசையமைப்பாளராக இருந்த எஸ்.எம்.சுப்பையா நாயுடுவின் ஹார்மோனியப் பெட்டியைத் துடைத்து சுத்தம் செய்து வைக்கும் பணியைச் செய்து கொண்டிருந்த விஸ்வநாதன் என்கிற சிறுவன், வருங்காலத்தில் ஹார்மோனியத்திலிருந்து ஆயிரக்கணக்கான மெட்டுகளை வெளிக்கொணர்ந்து இசை சாகசம் நடத்தப் போகிறான் என்பது இசைத் தெய்வம் அவருக்கு அளித்திருந்த வரம்.

பிரபல இசையமைப்பாளர் சி.ஆர். சுப்பராமனின் குழுவில் இருந்த விஸ்வநாதனையும், ராமமூர்த்தியையும் இணைத்து வைத்த பெருமை "கலைவாணர" என்.எஸ். கிருஷ்ணனைச் சேரும்.

சி.ஆர்.சுப்பராமனின் மரணத்தைத் தொடர்ந்து, பாதியில் நின்றிருந்த "தேவதாஸ்" படத்தின் பின்னணி இசையை முடித்துக்கொடுக்க இணைந்தனர் என்றாலும், என்.எஸ். கிருஷ்ணனின் இயக்கத்தில் உருவான "பணம" திரைப்படம்தான் மெலலிசை இரட்டையர்களை முறையாகத் தொழில்ரீதியாக இணைத்த திரைப்படம். அடுத்த 13 ஆண்டுகள் மெல்லிசை இரட்டையர்கள் உருவாக்கி அளித்த இசைக்காவியங்கள், தமிழ்த் திரையுலக வரலாற்றில் அழிக்க முடியாத பதிவுகள்.

மும்மூர்த்திகளும், ஏனைய சாகித்யகர்த்தாக்களும் மெட்டமைத்துப் பல்வேறு ராகங்களில் உருவாக்கிய பாடல்களை மேடையில் இசைக்கும் பாடகர்களை நாம் மேதைகள் என்கிறோம்.

ஆனால், "மெல்லிசை மன்னர" எம்.எஸ். விஸ்வநாதனால், ஒரு கல்யாணியையோ, காம்போதியையோ, ஆரபியையோ, ஆபோகியையோ அதன் அடிப்படை ஸ்வரங்களைப் பயன்படுத்தி, மெட்டமைத்து மூன்று நிமிடங்கள் இசைக்கின்ற பாடலாக்கிவிட முடியும். இது மாபெரும் இசை மேதைகள் என்று போற்றப்படும் கர்நாடக இசையுலக ஜாம்பவான்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வித்வத்தின் உச்சகட்டம் அல்லவா!

தமிழ்த் திரையிசையின் பொற்காலத்தைக் கண்ணதாசனுடன் இணைந்து ஆட்சி செய்த மாமன்னர் எம்.எஸ். விஸ்வநாதன்.

1950-களின் தொடக்கத்திலிருந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தென்னிந்தியத் திரையிசையில் கோலோச்சியவர் எம்.எஸ்.வி. உண்மையில், பழைய பாடல்கள் என்ற பொதுப் பெயரில் அடங்கியிருப்பவற்றில் பெரும்பாலானவை அவரது ஆயிரக் கணக்கான பாடல்கள்தானே!

தொடக்கத்தில் நாடகங்களின் திரைவடிவமாக இருந்த தமிழ்த் திரைப்படங்களில் நிரம்பித் ததும்பிய பாடல்கள், சாஸ்திரிய இசையின் அடிப்படையில் அமைந்தவையாகவே இருந்தன.

1950-களில்தான் ஜனரஞ்சகமான இசையில் அமைந்த பாடல்களுக்கு தமிழ்த் திரையிசையில் இடம் கிடைக்கத் தொடங்கியது. காலம் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள புதுப்புது திறமைசாலிகளைத் தன் பிரதிநிதிகளாக அறிமுகப்படுத்துவது உண்டு. அப்படி, 1950-களில் தமிழ்த் திரையிசையின் போக்கை மாற்றியமைத்த இசைக் கலைஞராகக் காலத்தால் முன்னிறுத்தப்பட்டவர் எம்.எஸ்.வி.

1950-ல் வெளியான 'மந்திரிகுமாரி' படத்தின் மூலம் திருப்புமுனையைக் கண்ட எம்.ஜி.ஆர்., 1952-ல் வெளியான பராசக்தி படத்தில் அறிமுகமான சிவாஜி கணேசன் ஆகியோர் தமிழ்த் திரையின் வணிக வளர்ச்சிக்கும் தரத்துக்கும் தந்த பங்களிப்பைப் போல், தமிழ்த் திரையிசையின் வளர்ச்சியில் எம்.எஸ்.வி-யின் பங்கு அளவீடுகளுக்கு அப்பாற்பட்டது. அதே காலகட்டத்தில்தான், அவரது ஆஸ்தான பாடகர்களான டி.எம். சவுந்தரராஜன், பி.சுசீலாவின் சகாப்தமும் தொடங்குகிறது.

'ஆறோடும் மண்ணில் எங்கும்' (பழனி-1965) என்று கிராமியக் காட்சிகளைக் கண்முன் நிறுத்தும் பாடல்கள், 'கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே' (கர்ணன்), 'இசை கேட்டால் புவி அசைந்தாடும்' (தவப்புதல்வன்) தந்தவர் எம்.எஸ்.வி.

"பிருந்தாவன சாரங்கா" ராகத்தைப் பயன்படுத்தி, "பொன்னொன்று கண்டேன், பெண்ணங்கு இல்லை" என்றும், "கீரவாணி"யைக் கையாண்டு "நெஞ்சம் மறப்பதில்லை, அது நினைவை இழப்பதில்லை" என்றும்,

"நடபைரவி"யை அடிப்படையாகக் கொண்டு, "நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா" என்றும், "பெஹாக" ராகத்தில் "ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன" என்றும்,

"ஆபேரி"யில் "மலர்ந்தும் மலராத பாதி மலர் போல", "ஆபோகி"யில் "தங்கரதம் வந்தது வீதியிலே", "மத்யமாவதி"யில் "முத்துக்களோ கண்கள், தித்திப்பதோ கன்னம" என்று எண்ணிலடங்காத தனித்துவமான கற்பனைகளை அள்ளி வழங்கி இருக்கிறார் எம்.எஸ்.வி. காதல், சோகம், நகைச்சுவை, கிண்டல், சவால் என்று எத்தனையோ வகையான சூழல்களுக்கும் இசையமைக்கும் அளவுக்கு இசை வளமும், படைப்பாற்றலும், வேகமும் அவருக்குள் சுரந்து கொண்டே இருந்தன.

அவரது சமகாலத்தில் ஜி. ராமநாதன், கே.வி. மகாதேவன், வி. குமார் என்று புகழ்பெற்ற இசையமைப் பாளர்கள் இயங்கிக்கொண்டிருந்தாலும் பெருவாரியான படங்கள் எம்.எஸ்.வி-யிடமே குவிந்தன.

'மன்னாதி மன்னன்', 'பாசமலர்',




சக இசையமைப்பாளர் டி.கே. ராமமூர்த்தியுடன் இணைந்து அவர் வழங்கத் தொடங்கிய பாடல்கள் பல தலைமுறைகளின் வாழ்வுடன் கலந்துவிட்டவை. 1950-களில் 'பணம்', 'ஜெனோவா', 'குலேபகாவலி', 'மாலையிட்ட மங்கை' போன்ற படங்களின் மூலம் சாம்ராஜ்ஜியத்தை விரிக்கத் தொடங்கிய 'விஸ்வநாதன் - ராமமூர்த்தி' ஜோடியின் இசை, 1960-களில் தனது படைப்பாற்றலின் உச்சத்தை அடைந்தது. பின்னாட்களில் டி.கே. ராமமூர்த்தியைப் பிரியும் சூழல் ஏற்பட்டாலும் அவரது பாடல்களின் வெற்றி பாதிக்கப்படவில்லை.

டி.எம்.எஸ். பாடிய 'யார் அந்த நிலவு' (சாந்தி-1965), பி. சுசீலா பாடிய 'பார்த்த ஞாபகம் இல்லையோ' (புதிய பறவை) என்று [illegible] இசையின் அடிப்படையிலான பாடல்கள்,




'நெஞ்சில் ஓர் ஆலயம்', 'ஆயிரத்தில் ஒருவன்', 'ராமு', 'தெய்வ மகன்' என்று அந்தக் காலகட்டத்தில் அவர் இசையமைத்த வெற்றிப்படங்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருந்தது.

தனது வாழ்நாளில் 1,200-க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்தவர் அவர். சிவாஜி படங்களுக்கு உணர்ச்சிகரமான இசை, எம்.ஜி.ஆர். படங்களுக்கு உற்சாகமான சவால் இசை, பீம்சிங், பாலசந்தர் போன்ற இயக்குநர்களின் படங்களுக்குப் பரீட்சார்த்தமான இசை என்று அவர் தொடாத இசை வகைமையே இல்லை. பாலியல் பலாத்காரக் காட்சிக்குக் கூடத் தன்னிடம் பாடல் கேட்ட கே. பாலசந்தரின் சவாலையும் ஏற்றுப் பாடல் தந்தவர் அவர்.

1970-களின் மத்தியில் கால மாற்றத்தின் தாக்கத்தில் அவரது இசையும் வேறு பரிமாணம் எடுத்தது. 1960-களில் டி.எம்.எஸ், பி. சுசீலா போன்ற கலைஞர்களின் கூட்டணியுடன் பாடல்களைத் தந்துவந்த எம்.எஸ்.வி.,

70-களில் எஸ்.பி.பி-யுடன் இணைந்து அளித்த பாடல்கள் தனிரகம். 'அவர்கள்', 'அபூர்வ ராகங்கள்', 'நினைத்தாலே இனிக்கும்', 'பட்டினப் பிரவேசம்' போன்ற படங்களில் இந்த ஜோடியின் பாடல்கள் ரசிகர்களின் சேமிப்புகளில் உயர்ந்த இடத்தை வகிப்பவை.

எம்.எஸ். விஸ்வநாதன் நினைத்திருந்தால், அப்பொழுது முதல்வர்களாக இருந்த கருணாநிதி, எம்.ஜி.ஆர். இருவரையும் சந்தித்துத் தனக்கு "பத்ம" விருது பெற்றுத்தரப் பரிந்துரைக்கச் சொல்லியிருப்பார். ஆனால் அவர் அதை செய்யவில்லை.

அதுதான் மெல்லிசை மன்னரை மாமேருபோல உயரச் செய்து நம்மை மரியாதையுடன் நிமிர்ந்து பார்க்க வைக்கிறது. அவருக்கு தரப்படாததால் "பத்ம" விருதுகள் மரியாதை இழக்கின்றன என்பது தான் உண்மை.

எம்.எஸ். விஸ்வநாதன் என்கிற இசைக் கலைஞனின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று ஏறத்தாழ 1,200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்திருக்கும், மூன்று தலைமுறைகளைக் கடந்து தொடர்ந்து இசையமைப்பாளராக கோலோச்சியிருக்கும் எம்.எஸ். விஸ்வநாதன் என்கிற இறவாப் புகழ்பெற்ற இசைக் கலைஞன் தனது 88-ஆவது வயதில் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார் என்பதைவிட இசையாய் காற்றில் கலந்திருக்கிறார் என்பதுதான் நிஜம்.

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும" என்கிற அவர் இசையமைத்த தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்படும் காலம் வரை, எம்.எஸ். விஸ்வநாதன் என்கிற இசை மேதையின் நினைவும், புகழும் நிலைபெற்றிருக்கும்.

எத்தனையோ விருதுகளைப் பெற்றபோதும் பத்மபூஜன் விருது, அவர் இறந்ததன் பின்பு வழங்கப் பட இருப்பது பற்றி, *கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்* என பலரும் குறைகூறியுள்ளனர்.

தொகுப்பு-பாமா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறுதிக்கடன்...

"பாங் ... பாங்.. பாங்" என ஞான வைரவர் ஆலயத்தின் ஆயத்த மணி, நேரம் அதிகாலை 4.00 மணி ஆகிவிட்டதை பறைசாற்றிக் கொண்டிருந்தது.

"இஞ்சாரப்பா எழும்புங்கோ 4.00 மணியாகிவிட்டுது... " என்றவாறு கணவனின் தோள்களை தட்டினாள் ராதிகா.

"ம்..ம்.. நான் வேளைக்கே கண்முழிச்சிட்டன் பொறும் எழும்புவம்." என்றவாறு மறுபுறம் சரிந்துகொண்டான் அரவிந்.

இப்போது லண்டனில் பனிப்பருவம். பனியானது சிறுசிறு கட்டிகளாக வீட்டின் மேல் கொட்டிக்கொண்டிருக்கும். வீதிகள் எங்கும் பனிப்படலம் உறைந்துபோய்... அதிகாலையிலே பாரிய இயந்திரங்களைக் கொண்டு வீதிகளை நிறைத்துள்ள பனிகளை அகற்றுவார்கள்.

என்றாலும் முற்றாக அகற்றிவிட முடியாது. ஒருபுறம் அகற்ற மறுபுறம் பனிக்கட்டி வீழ்ந்தபடியேதானிருக்கும். ஏறத்தாழ ஆறு மாதங்கள் பெரிய பிரச்சினைதான்.

ஒன்றுக்குமேல் ஒன்றாகக் குளிருடைகளை அணிந்து, வெப்ப வெளியேற்றிகளை பயன்படுத்தினாலும கூட குளிரின் பிடியிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது.

காலையில் நடைபெறவிருக்கும் ஞான வைரவர் ஆலய இரதோற்சவத்திற்கு செல்வதற்கு ஏற்கனவே முடிவெடுத்திருந்தனர்.

"இஞ்சரப்பா வாற புதன்கிழமை ஞான வைரவர் தேர். இரண்டு நாளுக்கு லீவு எழுதிக் குடுத்திடுங்க. கட்டாயம் போகவேணும்" என்று ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ராதிகா அரவிந்திற்கு நினைவூட்டியிருந்தாள்.

ஆனால், அவன் நிலையோ வேறு. அவனோ இப்போது நடைப்பிணம்...அது அவளுக்கு எப்படி விளங்கப்போகுது...

நேற்று மத்தியானம் அவன் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது திடீரென ஒரு தொலைபேசி அழைப்பு. வேலைப்பளு காரணமாக உடனடியாக அந்த அழைப்பை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் தொடர்ச்சியாக வெவ்வேறு இலக்கத்தலிருந்து அவனுக்கு அழைப்பு.

"ஹலோ... ஹலோ... யாரு?"

சின்னக்கேள்விகள்.

..............................

"எப்ப நடந்தது?"

..............................

எதிரிலிருந்து வந்த அழைப்புக்குரல்..., கூறப்பட்ட செய்தி.. அனைத்துமே அவனைத் தூக்கிவாரிப்போட்டது.

இதுவரை நடந்தவை... இப்போது நடப்பவை.. இனி நடக்கப்போகிறவை என ஒவ்வொரு விடயங்கள்பற்றியும் தனிதனியாக சிந்திக்க முனைந்தாலும் அவனுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. தொடர்ச்சியாக அவனுக்கு வேலையிலும் ஈடுபட முடியவில்லை.

அரைநேரத்துடன் லீவு எடுத்துக்கொண்டு வீடு செல்ல நினைத்தாலும் அவ்வாறு செய்வது மனைவிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்பதால் அதனையும் கைவிட்டான்.

உயிர் அற்றுப்போன வெறுங்கூடாக சுழல் கதிரையில் இருந்த அவன், எண்ணங்கள் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளாக...

மறுநாள் லீவு எடுப்பதற்காக கொண்டுவந்த லீவுக்கடிதம்... காலையில் திருவிழா செல்வதற்கான மனைவியின் அழைப்பு இவையாவும் அவன் கண்முன் நிழலாடின.

அடிக்கடி கடிகார முட்களை அவன் நோக்கிக் கொண்டிருந்தான். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கும் நோயாளியாக அவையும் அமைதியாய் கிடந்தன.

"அண்ணா..! அப்பா எங்களை விட்டிட்டுப் போயிட்டார்..... இனி எங்களுக்கு யாரு துணை? நீயாவது வாடா....."

கண்கலக்கத்துடன் வெளிவர மறுத்த வார்த்தைகள் ஒவ்வொன்றையும் வலுக்கட்டாயமாக கோர்த்தெடுத்து கண்ணீர் மல்கிய தங்கையின் அந்தக் குரல் அரவிந்தின் செவிப்பறையில் தொடர்ந்தும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

மாலையில் வீட்டுக்கு வந்தவன் சாய்மனையில் கிடந்தவாறு கண்ணயர்ந்துவிட்டான்.

"என்னப்பா... இண்டைக்கு வேளைக்கு தூங்கீட்டியள். எழும்புங்கோ. கீற்றரிலே கொஞ்சம் தண்ணி சுடவையுங்கோ. தம்பிக்கு மேல்கழுவ வேணும்"

மகன் திலக்ஷை இடுப்பில் ஏந்தியவாறு அருகில் வந்து ரோள்களில் ராதிகா மெல்லத் தட்டியதும் அரவிந் விழித்துக்கொள்ளலானான். நித்திரையிலிருந்து விழித்தானேயொழிய வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்தும் இருளிலேயே மூழ்கிக் கிடக்கலானான்.

இரவு அவனால் சாப்பிட முடியவில்லை. ஏதோ மனைவிக்கு சந்தேகம் ஏற்படாதவகையில் ஓரிரு பிடி உணவை வலுக்கட்டாயமாக வாய்க்குள் திணித்துக்கொண்டான்.

இஞ்சரப்பா காலமை நீங்கள் எந்த ஜீன்ஸ் போடப்போறியள்? என்றவாறு நான்கைந்து ஜீன்ஸ்களை கைகளில் ஏந்தியவாறு அவன் முன் ராதிகா...

அவன் உள்ள நிலையில் அவளது இத்தகைய வார்த்தைகள்... அவளை ஏதோ.. செய்துவிடவேண்டும் போலிருந்தாலும்... முடியாது.

"நான் வந்தவுடனேயே உமக்குச் சொல்ல வேண்டுமெண்டிருந்தனான். நாளைக்கு பெரிய மனேஜர் வரமாட்டாராம். அதால அவரிட வேலையும் சேர்த்து நான்தான் பார்க்கவேணும். அது தான் லீவை *கான்சல்* பண்ணிட்டினம்."

தயங்கியவாறே கூறிமுடித்த அரவிந்தை ராதிகாவின் கண்கள் ஏறெடுத்துப்பார்த்தன. அவள் கண்களிலிருந்து பாய்ந்த ஒவ்வொரு கணைகளும் ... அவனை ஆட அசையாமல் கட்டிப்போட்டது.

"இஞ்ச பாரும் உமக்கு நான் போன கிழமையே என்ன சொன்னான். நீர் சொல்லியிருக்கலாம்தானே?

மனேஜர் லீவு எடுக்கிறார் எண்டால், அப்ப நாங்கள் கோயிலுக்குப் போறேல்லையே...?"

இதை ஏற்கனவே அரவிந் எதிர்பார்த்தான்.

"நான் என்னப்பா செய்யிறது? லெற்றர் குடுத்தனான். கடைசியில லீவு கான்சல் பண்ணியிருக்கு எண்டினம் நான் என்ன செய்யிறது.

நீங்கள் திலக்ஷையும் கூட்டிட்டுப் போய்வாங்கோவன் என்னப்பா..."

என்று மனைவியை நோக்கி உதிர்த்த அரவிந்தனின் வார்த்தைகள் அவளை உஷ்ணப்படுத்வதாய் அமைந்தன போலும்.

மௌனமாகிவிட்டாள்.

"ஓ நான் போறன் நீர் எங்கேயாச்சும் போம் வருஷம் ஒருநாளைக்கு கோயில்குளம் போறதுக்கு லீவு எடுக்கேலாட்டி பிறகென்ன?"

திலக்ஷையும் அணைத்தபடி மூவரும் தூங்கிவிட்டனர்.

அரவிந்துதான் குடும்பத்தில் மூத்தபிள்ளை. அவனுக்கு பின்னால் இரண்டு தங்கைமார். முதலில் நல்ல வசதியாய் வாழ்ந்த குடும்பம். தந்தை பாரிசவாத நோயினால் படுக்கயாய் போனபின்னர், மெல்ல மெல்ல வறுமையிருள் சூழ்ந்துகொண்டது.

பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியை தொடர்ந்து கொண்டிருந்த அரவிந்திற்கும் ராதிகாவிற்கும் இடையில் காதல் மலர்ந்தது.

ராதிகாவின் குடும்பத்திற்கு அரவிந்தை நல்லாகவே பிடித்திருந்தது. அரவிந்தின் வீட்டிற்கு தெரியாமலே, அவனையும் ராதிகாவையும் வெளிநாட்டிற்கு அனுப்பும் ஏற்பாடு ராதகாவின் வீட்டாரால் சூட்சுமமாக மேற்கொள்ளப்பட்டது.

ராதிகாவாயிலாக அறிந்த அரவிந், தன் வீட்டாருக்கு அதனைக் கூறவில்லை. தனக்குக் கீழ் இரண்டு தங்கைமார் இருக்கும் நிலையில் தான் இப்படியொரு முடிவைவீட்டிற்குத் தெரியப் படுத்தும்போது நிச்சயம் அதை வீட்டார் ஏற்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான்.

திடீரென ஒருநாள் அவசர அவசரமாக கொழும்பு செல்லவேண்டியுள்ளது எனக்கூறி



புறப்பட்ட அரவிந், மீண்டும் வீடு திரும்பவில்லை.

அரவிந் அவள் மீது கொண்ட காதலின் பிரதிபல்னாக, அவன் லண்டனை அடைந்துவிட்டான். சென்ற பிற்பாடுதான் தொலைபேசிவாயிலாக வீட்டாருக்கு தெரியப்படுத்தினான் தமக்கு கலியாண எழுத்து முடிந்து, லண்டனில் இருக்கும் விடயத்தை.

தந்தை நோய்வாய்ப்பட்ட நிலையில் தாய் அழகம்மாவின் உழைப்பில் அந்தக்குடும்பத்தின் சீவியம் நடந்துகொண்டிருந்ததை அவன் மறந்துவிட்டான்.

தோட்டக்கூலியாளாக வேலைசெய்து, நாளொன்றுக்கு ஐந்நூறு கொண்டுவந்து அழகம்மா, குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தாள். நித்தம் பனி, மழை, வெயில் பாராமல் உழைத்து உழைத்து அவள் நுலாய்ப்போன விடயத்தை அவன் மனங்கொள்ளவில்லை.

"அண்ணா! அண்ணா..!" என்று குழையும் துங்கைகள், அவனை ஆளாக்கிய தந்தை, தாய் யாவரும் அவனின் மனவோட்டத்திலிருந்து காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டனர்.

அவன் வெளிநாடு வந்து சேர்ந்து இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆசையாய் செல்லம் கொண்டாட மகன் திலக்ஷை இருவரும் பெற்றெடுத்தனர்.

*நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டுவதாய்*, ராதிகாவின் காதல் வலையில் வீழ்ந்த அரவிந் இப்போது அவளது நடத்தைகளில் மாற்றங்கைள படிப்படியாக உணரத் தொடங்கினான்.

ராதிகாவின் குடும்பத்தில் ஐந்து பெண் பிள்ளைகள். அதில் முத்தவள் ராதிகாதான். தந்தையும் கயரோக நோயாளி. அரவிந் மீது அவள் கொண்ட காதல் உண்மையில், அவன் மீது ஏற்பட்டதாக இருக்கவில்லை. ஆனால், இப்போது படிப்படியாக உணரத் தொடங்கிவிட்டான்.

"இஞ்சரப்பா..உழைக்கிற காசை *பாங்கில* போடுங்க அநாவசியமாய் செலவழிக்காதீங்க. சும்மா வீட்டுக்காரருக்கு போனை எடுத்து அலட்ட வேண்டாம். எவ்வளவு காசு போன் பில்லில போகுது.

படிப்படியாக அரவிந்திற்கு தடைக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது.

அவனும் அப்போ, புரியாமல் அவள் கூறுவன எல்லாம் மந்திர வார்த்தைகளாய் நம்பி இசைந்துகொண்டான்.

இஞ்சையுங்கோ வாறமாதம் என்ர இரண்டாவது தங்கைச்சிக்கு கலியாணமாம். மாப்பிள்ளை முப்பது லட்சம் சீதனம் கேட்கிறாராம். நாங்களும் எங்களால இயன்டதை அவளுக்கு செய்யத்தானே வேணும்..."

ராதிகாவின் உதடுகளில் இருந்து வந்த ஒவ்வொரு வாத்தைகளும் அரவிந்தின் இதயத்தைக் கீறிக் கிழிப்பதாய் இருந்தது. தனது உறவுகளோடு கதைக்கவிட்டால், இரண்டு தங்கைகளுக்கும் சீதணம் கொடுக்க வேண்டி வந்துவிடும் என்பதால், அவனது குடும்பத்தினருடனே கதைக்கவிடாமல் தடுக்கும் அவள், தன் தங்கைக்கு சீதனம் தேடும் படலத்தில்...

எப்படித்தான் இவளுக்கு மனசு வருதோ...

தங்தையின் இறுதிச் சடங்குக்கு வருவதாக எடுத்த எடுப்பில் கூறிவிட்ட அவன், நாட்கள் இரண்டு கடந்தும் அது தொடர்பான எந்த ஏற்பாட்டிலும் இறங்கவில்லை.

தந்தை இறந்த செய்தியை மனைவிக்கு கூறுவதற்குக்கூட அவனுக்கு பயமாகவிருந்தது... ராதிகா வைரவருக்கு ஆயிரம் வடை கோர்த்து மாலைசாத்தியோ அல்லது பிள்ளையாருக்கு ஆயிரம் தேங்காய் உடைத்தோ சந்தோசப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அங்கு மரணவீட்டில்.., "பிள்ளை அண்ணா என்ன சொல்லுறான்..." அழுதழுது அடைத்துவிட்ட தொண்டையிலிருந்து சத்தமே வெளிவரவில்லை அழகம்மாவிற்கு.

"வாற ஒழுங்கு செய்யிறனாம்... மூன்று நாளைக்குள்ள வந்திடலாமாம்"

அவள் காதில் மெதுவாக "இப்பவே மணம் தாவிவிடும்போல கிடக்கு... முடிவாச் சொல்லச் சொல்லு..."

"நான் சொன்னனானம்மா. அலுவல் பார்க்கிறனாம்..." என்று கூறியவாறே கிடுகுச்செத்தையுடன்சாய்ந்து கொண்டாள் தங்கைகளில் ஒருத்தி. "உயிரோட இருக்கேக்க இந்த மனுசன் எத்தனை தடவை கேட்டிருக்கும் தம்பி வருவானோ... தம்பி வருவானோ...? ஒருக்கா வரச்சொல்லு... அப்ப வந்து பார்கேல்லை.. இப்ப என்னத்துக்கு"

காய்ந்து கிடந்த அவள் கன்னங்களில் மீண்டும் தாரைதாரையாகக் கண்ணீர்.

அரவிந்துக்கு மீண்டும் தங்கையின் அழைப்பு.

"என்னண்ணா முடிவைச்சொல்லு..."

"வீசா இன்னும் தரேல்ல... இவங்கள் இழுத்தடிக்கிறாங்கள்.. நான் என்னசெய்ய?"

தான் சொன்னது அனைத்தும் பொய் என்பது அவனுக்குத் தெரிந்தும் உண்மையை வெளியில் சொல்ல முடியவில்லை அவனால்.

அழைப்பு நிறுத்தப்படுகிறது. அரவிந்தும் அமைதியானான். தன்னை பாராட்டி சீராட்டி வளர்த்த தந்தையை இறுதிநாட்களில் பராமரிக்கும் பாக்கியம் கிட்டாமலும் இறுதிச் சடங்கில் கூட கலந்துகொள்ள இயலாமலும் பெற்ற கடனை அடைத்துக்கொள்ள முடியாதவனாய் மனைவியின் கட்டுக்குள் கிடந்தான் அவன்.

நாலாவது நாளாகிவிட்டது. அழுது புரண்டு கண்ணில் நீர் வற்றிப்போய்விட்டது. ஆனாலும் எவராலும் கண்கலங்காமல் இருக்க முடியவில்லை. உடலம் பாடையில் ஏற்றப்பட்டது. அயலவர் துணையுடன் சுற்றம் சூழ பாடை, சுடலைக்கு நகர்ந்தது. முன்னால், மூத்த மகள் அபர்ணா, தந்தையின் இறுதிக்கடனை நிறைவேற்றுவதற்காக...

**மல்லாவிக்கஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவைப் பயமுறுத்தும் ஜனாதிபதியின் கடிவாளம்

நாம் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவில்லை என்றும், அவரைப் பிரதமராக்க மாட்டேன் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள அறிவிப்பு, இலங்கை அரசியலில் மற்றொரு சூறாவளியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கெனவே மஹிந்த ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்தினால் இலங்கையின் அரசியல் களம் படுசூடாகவும் பரபரப்பாகவும் தான் இருந்து வந்தது.

இந்தநிலையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருப்பது, அரசியல் களத்தைக் கொதிநிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக அதன் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த அறிவித்த நாள் தொடக்கம், நீடித்து வந்த தனது மௌனத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு கட்டியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மஹிந்த ராஜபக்ஷவின் வேட்புமனு விடயத்தில் அவர் காண்பித்த நீண்ட மௌனத்தின் பின்னால் ஓர் இயலாமை இருந்த போதிலும், அதை ஓர் இராஜதந்திரமாக எடுத்துக் காட்ட முயன்றிருக்கிறார்.

கடந்த வாரம் அந்த மௌனத்தை உடைத்துக் கொண்டு தனது மனதில் இருந்தவற்றையெல்லாம் கொட்டித் தீர்த்தமைக்கு முற்றிலும் இராஜதந்திரமே காரணம் என்று கூற முடியாது. அவரை வேதனைப்படுத்திய உள்க்காயங்களும் அதற்கு ஒரு காரணம்.

தான் ஊடகங்களாலும் பல்வேறு தரப்பினராலும் இரண்டு வாரங்களாக கடுமையாக விமர்சிக்கப்பட்டதை மிக வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

துரோகி, காட்டிக் கொடுத்தவன், வில்லன் என்றெல்லாம் விமர்சிக்கப் பட்டதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் எவரும் இதுபோன்ற விமர்சனங்களை எதிர்கொள்ளவில்லை என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இவ்வாறு தன்னையும் விமர்சிக்கத்தக்க உரிமையைக் கொண்ட ஜனநாயகத்தை தனது ஆட்சி ஏற்படுத்தியுள்ளதையும் பெருமையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார். எவ்வாறாயினும் விமர்சனங்கள் அவரைக் காயப்படுத்தியிருக்கின்றன என்பதை அவரது உரை தெளிவாகவே காண்பித்திருக்கிறது.

இந்த காயப்படுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரேவழி, தனது மனதில் உள்ளவற்றை வெளியே கொட்டிவிடுவதுதான் என்று அவர் தீர்மானித்திருக்கிறார்.

அதேவேளை, தான் கடைப்பிடித்து வந்த மௌனத்துக்கான காரணத்தை இத்தகைய சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தத் தவறினால் அந்த மௌனத்தினால் பயனோ, அதற்கான அர்த்தமோ இல்லாது போய்விடும் என்பதையும் மைத்திரிபால சிறிசேன உணர்ந்திருந்தார்.

அதனால் தான், வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர், தனது மௌனத்தைக் கலைத்திருக்கிறார். இதன்மூலம் அவர், தனது செயல்களை நியாயப்படுத்த முற்பட்டிருக்கிறார்.

நல்லாட்சிக்கான தனது உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு கொடுக்க முனைந்திருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவைப் பலவீனப் படுத்த முயன்றிருக்கிறார். சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தாலும், தான் ஓர் அரசியல் சார்பற்றவராகவே செயற்படவுள்ளேன் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இவற்றை வெளிப்படுத்துவதற்காகத் தான், மைத்திரிபால சிறிசேனவின் ஊடகச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தேர்தலில் தாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை - அவர் மீண்டும் தோற்கடிக்கப் படுவார்- அவர் நாடாளுமன்றத்துக்கு வந்தாலும், பிரதமராக முடியாது ஆகிய மூன்று முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இது மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த கட்ட அரசியல் நகர்வில் ஏற்படுத்தப் போகும் பாதிப்பு என்னவாக இருக்கும் என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

மைத்திரிபால சிறிசேனவின் மீது, மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான கோபமும் எரிச்சலும் இருந்தாலும், அவரைப் பகைத்துக் கொள்ளாமல் அதிகாரத்துக்கு வருவதே மஹிந்த ராஜபக்ஷவின் இலக்காக இருந்தது.

மீண்டும் அரசியலுக்கு வருவதாயின், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஊடாகவே வருவேன் என்ற பிடிவாதத்தில் மஹிந்த ராஜபக்ஷ இருந்தமைக்கு, மைத்திரிபால சிறிசேனவினால் கிடைத்துள்ள பெயரைப் பயன்படுத்திக் கொள்வது தான் முக்கிய காரணம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக உள்நுழைவதற்கு பல்வேறு திருகுதாளங்களை மேற்கொண்டிருந்தாலும், மைத்திரிபால சிறிசேனவுடன் தனக்கு எந்த முரண்பாடும் இல்லை, இருவருக்கும் இடையில் நல்லுறவே உள்ளது என்று காட்டிக்கொள்ள முனைந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

அதற்கு உதாரணம், இந்தியாவின் ரெடிப் இணையத்தளத்துக்காக நிதின் கோகலே என்ற செய்தியாளருக்கு அளித்த பேட்டி. இந்தப் பேட்டியில் அவர் தனக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நல்லுறவு இருப்பதாக கூறியிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், அப்படியான எந்த நல்லுறவும் அவர்களுக்கிடையில் இருந்திருக்கவில்லை என்பதை, வெளிச்சமாக்கியிருக்கிறது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை. மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகைக்கு கட்சிக்குள் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வந்த மைத்திரிபால சிறிசேனவை, மஹிந்த ராஜபக்ஷ எந்த வகையில் நட்புக்குரிய ஒருவராக நோக்கியிருக்க முடியும்?

ஆனாலும், அவர் ஊடகங்கள் மத்தியில் மைத்திரிபால சிறிசேனவுடன் நல்லுறவு இருப்பதாக காட்டிக் கொண்டதன் மூலம், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானவர்களின் வாக்குகளைத் தனக்குச் சாதகமாக திருப்பிப் கொள்ள முனைந்தார். அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட, தனக்கு இடமளிக்கப்படும் என்ற விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு முழுமையான நம்பிக்கை இருந்திருக்கவில்லை.

கடைசி நேரத்தில் கூட ஏதாவது நடந்துவிடலாம் என்ற சந்தேகம் அவரை அரித்துக் கொண்டேயிருந்தது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முதல்நாள், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, பிலியந்தலயில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்தபோது, தினேஸ் குணவர்த்தனவிடம் இருந்து அலைபேசி அழைப்பு வந்தது.

உடனடியாக, மஹிந்த ராஜபக்ஷவிடம் அலைபேசியை காமினி லொக்குகே கொடுக்க, அவர் அதனை வாங்கி மேடையிலேயே உரையாடுகிறார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதான தகவல் அது. பதற்றத்துடன் உடனடியாகவே மேடையில் இருந்து இறங்கிச் சென்றுவிடுகிறார் மஹிந்த. கடைசி நேரத்தில் ஏதாவது நாடகம் நடத்தப்படுகிறதா என்ற ஆழ்மனச் சந்தேகத்தின் விளைவுதான், மஹிந்தராஜபக்ஷ அவ்வாறு நடந்துகொள்ளக் காரணமாகியது.



அதுபோலவே, மஹிந்த ராஜபக்ஷவை போட்டியிட விடாமல் தடுக்க மைத்திரிபால சிறிசேன எதையாவது செய்வார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம், ஊடகங்களிடம், ஏன், ராஜித சேனாரத்ன போன்ற அவருக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் கூட இருந்தது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிடவிடாமல் தடுப்பதற் காக மைத்திரிபால சிறிசேன, குறுக்குவழி முயற்சிகள் எதையும் மேற்கொண்டிருக்கவில்லை.

அவ்வாறு செய்தால், அது கட்சியை உடைத்து விடும் என்ற கவலையும், அதனால் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கவலையும், தனது பெயர் கெட்டுவிடும் என்ற கவலையும் மட்டும் ஏற்பட்டிருக்கவில்லை.

அவ்வாறு வேட்புமனுக் கொடுக்காது போனாலும் கூட, தனித்துப் போட்டியிட்டு மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வந்து விடுவார் என்பது உறுதி. எனவே, பொறுத்திருந்து - மஹிந்தவை வைத்தே, தனது ஆதரவாளர்களையும் வெற்றி பெற வைத்து விடுவதே மைத்திரிபால சிறிசேனவின் நோக்கமாக இருந்திருக்கிறது. தனது முதற்கட்டத் திட்டம் நிறைவேறியதும், மௌனத்தைக் கலைத்தார் மைத்திரிபால சிறிசேன.

இப்போது, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானவர்களின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது, அவர் தனது கட்சியின் நலன் பாதிக்கப்படும் என்று தெரிந்து கொண்டே, தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்தநிலையில், இதுவரையில் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவுடனேயே இயங்குவதாக காட்டிக் கொண்டு வந்த மஹிந்த ஆதரவு அணியினருக்கு, குழப்பம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் அடுத்த அரசியல் நகர்வு கேள்விக் குறியாகியிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்ற பகிரங்க வாக்குறுதியைக் கொடுத்திருக்கும் மைத்திரிபால சிறிசேன விடயத்தில், அவர்கள் அலட்சியமாக இருக்க முடியாது.

ஏனென்றால், வெறும் 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்து, இன்று வரை அவரைப் பதவியில் வைத்திருப்பவர் அவர்.

அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. எனவே, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்றாலும், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக வருவது என்பது எளிதான காரியமாக இருக்கப்போவதில்லை.

மஹிந்தவை விடவும் மூத்த தலைவர்களை பிரதமர் பதவிக்கு நியமிக்கலாம் என்று மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அத்தகைய கட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷ தரப்பு எதிர்ப்புத் தெரிவித்தால் மீண்டும் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு வரும். அதேவேளை, ஐதேகவுடன் இணைந்து தேசிய அரசை அமைக்கலாம் என்ற தெரிவும் மைத்திரிபால சிறிசேனவுக்கு இருப்பதை மறந்துவிடக்கூடாது. இத்தகைய நிலையில், மைத்திரிபால சிறிசேனவின் கடிவாளம் எப்போதும், மஹிந்த ராஜபக்ஷவை பயமுறுத்திக்கொண்டு தான் இருக்கும்.

*-கே.சஞ்சயன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் மீள் வருகை



பெர்லின் சுவரின் வீழ்ச்சியின் பின்னர் "புதிய உலக ஒழுங்கு" என அழைக்கப்பட்ட அமெரிக்கத் தலைமையிலான ஒருமைய உலகம் தனது மரணத்தை மெது மெதுவாக எட்டுகிறது. எந்த விளையாட்டிலும் சிறந்ததொரு வீரரின் காலம் முடிதலும் அடுத்தவரின் மேலெழுச்சியும் இயல்பானதே. அரசியல் விளையாட்டும் அவ்வாறானதே. அதிலும் குறிப்பாக சர்வதேச அரசியல் அரங்கு காலங்காலமாக அவ்வாறே இருந்துள்ளது. சோவியத் ரஷ்யாவின் தோல்வியுடனும் உடைவுடனும் தோன்றிய "புதிய உலக ஒழுங்கு", விளாடிமிர் புட்டின் தலைமையிலான ரஷ்யா உலக அரங்கில் தன்னை ஒரு பிரதான அரங்காடியாகத் தனது மீள்வருகையை அறிவிக்கும் போது அதிர்வது தற்செயலல்ல. ஒருவகையில் சர்வதேச அரசியலை விளங்குதற்கான முரண்நகை என்றும் இதை அழைக்கலாம்.

பொருளா தார வல்லரசாகும் வாய்ப்புள்ள வளரும் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகியவற்றின் கூட்டமைப்பான பிரிக்ஸ் (BRICS) கடந்த வாரம் ரஷ்யாவில் நடத்திய மாநாடு உலக அரங்கில் ரஷ்யாவின் வகிபாகத்தின் முக்கியத்தை மீள வலி யுறுத்தியது. பிரிக்ஸ் மாநாட்டின் முடிவில் சாத்தியமாகிய இரு விடயங்கள் ரஷ்யா உலக அரங்கில் தன்னைத் திடமாக நிலைநிறுத்துவதற்கான அடிப்படைகள் அமைய உதவியிருக்கிறது. முதலா வதாகப், புதிய அபிவிருத்தி வங்கியின் உருவாக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் நீடித்த இப் பேச்சுக் களின் முடிவில் 50 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தொடக்க முதலீடாகக் கொண்டு இவ் வங்கி தோன்றுகிறது. அது குறித்துப் பேசிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின், "நாங்கள் எமது வளங்களை எமக்குள் பகிர்வதனூடு பிறரில் தங்கி யிராத அபிவிருத்தியை நோக்கி நகர இவ் வங்கி உதவும். குறிப்பாகப் போக்குவரத்து, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வலுவைப் பெறுவதற்கான கட்டமைப்புகளை உருவாக்க இவ் வங்கி பங்களிக்கும்" என்று தெரிவித்தார்.

இரண்டாவ தாக, 100 பில்லியன் அமெரிக்க டொலர் கள் பெறுமதியான வெளிநாட்டு நாணய மாற்று நிதியம் ஒன்றை அமைக்க பிரிக்ஸ் நாடுகள் உடன்பட்டமை. இது, இந் நாடுகளில் ஒரு நாட்டுக்கு நிதி நெருக்கடி ஏற்படும்போது ஏனைய நாடுகள் தங்கள் மத்திய வங்கியின் ஊடாக நிதி உதவி யைச் செய்யும் உடன்பாடாகும். சர்வதேச நாணய நிதியம் (BRICS) இவ்வாறான கடன்களினூடு நாடுகளைச் சுரண்டிவரும் நிலையில், இந் நிதியத்தின் வரவு முக்கியமாகிறது. உக்ரேன் நெருக் கடியைத் தொடர்ந்து ரஷ்யாவைத் தண்டிக் கும் நோக்குடன் அமெரிக்காவும் ஐரோப் பிய ஒன்றியமும் கடந்தாண்டு ரஷ்யாமீது விதித்த பொருளாதாரத் தடைகள் நடைமுறையில் இருக்கையில் இவ்வாறான ஒரு நிதியத்தின் தோற்றம் ரஷ்யாவுக்குப் பயனுள்ளது. அப் பொருளாதாரத் தடைகள் உக்ரேன் விடயத்தில் ரஷ்யாவைப் பணியவைக்கும் நோக்குடையவை. ஆனால், இக்காலத்தில் தனது பொருட்களுக்கான புதிய சந்தைகளையும் தனது தேவைகளுக்கான புதிய நாடுகளையும் உருவாக்குவதன் மூலம் ரஷ்யா இப்பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்கிறது.

இந்நிலையில் அமெரிக்காவிலும் ஐரோப்பியச் சந்தைகளி லும் அவற்றின் பொருளாதாரத்திலும் தங்கியிராமையை நிறுவுவதில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் முன்னிற்கிறார். இன்று உலகில் 60 சதவீதமான மத்திய வங்கிகள் அமெரிக்க டொலர்-மைய நாணய-நிதிய வர்த்தகத்தில் ஈடுபடுவதால் தவிர்க்கவியலாமல் அமெரிக்காவில் தங்கியிருக்க நேருகிறது. முதற்கட்டமாக, அதை மாற்றியமைப்பது அவசியம் என ரஷ்யா கருதுகிறது. இதனடிப்படையில் அது சீனாவுடன் பொருளாதார ரீதியில் ஒத்து ழைப்பை அதிகரித்ததோடு சீனாவுடனான வர்த்தகத்தைச் சீன யுவான் (ரென்மின்பி) நாணயத்தில் நடத்த இணங்கியுள்ளது. சீனா பொருளாதார வல்லரசாக வளர்ந் துள்ள நிலையில், உலக வர்த்தகத்தின் மைய நாணயமாக அமெரிக்க டொலரின் நிலைப்புக்கு முடிவுகட்ட முயல்கிறது. இதன முதற்கட்டமாக கடந்தாண்டு ரஷ்யாவும் சீனாவும் முப்பது ஆண்டுகட்கான எண ்ணெய், எரிவாயு உடன்படிக்கையிற் கைச்சாத்திட்டன. அதன் கொடுக்கல் - வாங்கல் அமெரிக்க டொலர்களில் அல்லாமல் உள்நாட்டு நாணயத்தில் இடம்பெறுவது முக்கிய அம்சமாகும். அதேவேளை 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சீன-ரஷ்ய வர்த்தகம் 2014இல் ஒன்பது மடங்கால் அதிகரித்துள்ளது. ரஷ்ய வங்கிகள் அயல் வர்த்தகத்தை சீனாவின் நாணயமான யுவானில் செய்யும் வசதிகளைச் செய்துள்ளன.

ரஷ்யாவின் மிகப் பெரிய வங்கியா கிய செபர் வங்கி நாணயக் கடிதங்களைச் சீன யுவானில் வழங்கும் நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை நீண்ட காலத்தில் அமெரிக்க டொலரில் தங்கியிராத நிலையை உருவாக்கும் ஏற்பாடுகளே. பொருளாதாரத் தடை களை விதிப்பதன் மூலம் அழுத்தங்களைப் பிரயோகிக்க அமெரிக்காவுக்கு இயலுமாவதற்கு அமெரிக்க டொலரில் தங்கியிருத்தல் முக்கியம். அதனாலேயே அதை "டொலர் பயங்கரவாதம்" என ஒருசாரர் அழைக்கின்றனர். இம்முறை, பிரிக்ஸ் மாநாடு ரஷ்யாவின் வளரும் செல்வாக்கை கோடிட்டு நிற்கிறது. குறிப்பாக இம் மாநாட்டில் ரஷ்யாவும் சீனாவும் இணைந்து முன்னெடுக்கும் முனைப்புகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் அமெரிக்காவை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளும் அதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தன்னை உலக அரசியலில் தவிர்க்கவியலாத சக்தியாக்குகிறார். அதற்குப் பொருளாதார வல்லரசான சீனா துணையாகும் போது ரஷ்யாவின் மீள்வருகை கவனிப்புக்குரியதாகிறது.

அமெரிக்காவுடனும் ஐரோப்பா வுடனும் உறவுகள் சீர்குலைந்துள்ளதால், ஆசியாவுடன், குறிப்பாகச் சீனாவுடன், வலுவான ஓர் உறவை விருத்தி செய்ய ரஷ்யா விரும்புகிறது. கடந்த வருடம், சீனா, ஜேர்மனியின் இடத்தில், ரஷ்யாவின் மிக முக்கிய வர்த்தகக் கூட்டாளியானது. இவ்வளவு காலமும் ரஷ்ய பொருளாதாரம் அதிகஞ் சார்ந்திருந்த எரிபொருள் ஏற்றுமதிகளிற் கணிசமான அளவு ஐரோப்பிய ஒன்றியத துக்கானது. இதனாலேயே ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரத் தடை ரஷ்யாவைப் பெரிதும் பாதித்தது. ஆனால், ரஷ்ய-சீன எரிசக்தி உடன்படிக்கை இந் நெருக்கடிக்குத் தீர்வை வழங்கியிருக்கிறது. இது நீண்டகாலத்தில் ரஷ்யாவுக்குப் பயனுள்ளது. ரஷ்ய எரிசக்தி வளங்களைச் சீனா சார்ந்திருக்கிறது. உலகின் மிகப் பெரிய கச்சா எண்ணெயினதும் திரவமாக்கிய புதைபடிவ எரிபொருள் இறக்குமதியாளராக இருந்த அமெரிக்காவை, 2013இல் சீனா முந்தியது. இவ்விரு நாடுகளுக்கிடையிலான எரிசக்தி உடன்படிக்கைக்கு இன்னொரு பரிமாணமும் உண்டு. எரிபொருள் இறக்குமதிக்குச் சீனா பயன்படுத்தும் கடல் வழிப் பாதைகளைக் கட்டுப்படுத்தி அமெரிக்கா தன்னைச் சுற்றிவளைக்கும் அபாயத்தைத் தவிர்க்கும் நோக்குடனும் ரஷ்யாவிலிருக்கும் எரிபொருள் வளங்களை பெறச் சீனா விரும்புகிறது.

இவ்வகை யில் அமெரிக்காவுக்கெதிரான மூலோபாயக் கூட்டாளிகளாக ரஷ்யாவும் சீனாவும் இணைகின்றன. இதன் காரணமாக ரஷ்யாவும் சீனாவும் தமது நிதி ஒத்துழைப்பை விரிவுபடுத்துகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கத்திய முதலீட்டுச் சந்தைகளில் தமது பங்கேற்பைக் கட்டுப்படுத்தும் தடைகள் காரணமாக ரஷ்ய வங்கிகள் சீனாவுக்குள் விரிவுபட முயல்கின்றன. ரஷ்யாவின் இரண்டாவது பெரிய வங்கி லண்டன் பங்குச் சந்தையிலிருந்து சிங்கப்பூருக்கு மாறிவிட்டது. இதற்கிடையில் அமெரிக்க டொலரில் வர்த்தகத்தை நிறுத்தும் திட்டத்தை ரஷ்யாவும் சீனாவும் மெதுமெதுவாக நடைமுறைப் படுத்துவதானது ஏற்கெனவே பலவீனப்பட்ட அமெரிக்க டொலரை மேலும் வலுவிழக்கச் செய்யும். இது உலகப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

உலகில் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக சீனாவும் ஒன்பதாவதாக ரஷ்யாவும் உள்ளன என்பது இதன் தாக்கத்தை விளங்கப் போதுமானது. ரஷ்யா முன்னிற்கும் இச் செயற்பாடுகள் பொருளாதார ரீதியில் அமெரிக்காவுக்கு மிகக் பெரிய சவாலை உருவாக்கியுள்ளன. அதற்கப்பால் ரஷ்யாவினுடைய வெளி யுறவுக் கொள்கையும் அமெரிக்காவுக்குச் சவால் விடுகிறது. ரஷ்யா, உலக அரங்கில் தனது மீள்வருகையை 2008இல் ஜோர்ஜிய யுத்தத்தின் போது வெளிப்படுத்தியது. தனது கொல்லைப் புறத்தில் அமெரிக்காவின் சீண்டல்களை அனுமதிக்கப் போவதில்லை எனச் சர்வதேச அரங்குக்குக் காட்டுமுகமாக ஜோர்ஜிய யுத்தத்தில் ரஷ்யப் படைகள் செயற்பட்டன. அதைத் தொடர்ந்த கடந்த ஏழு ஆண்டுகளில் ரஷ்யா தொடர்ச்சி யாக அமெரிக்காவுக்கு எதிரான வெளி யுறவுக் கொள்கை நிலைப்பாடுகளை எடுத்துள்ளது. ஈரானுக்கு அதன் ஆதரவு குறிப்பிடத்தக்கது. உக்ரேனில் ரஷ்ய சார்பு ஜனாதிபதியின் ஆட்சிக் கவிழ்ப்பு அமெரிக்க ஆதரவுடன் நடந்தேறியதும் அதைத் தொடர்ந்து சோவியத் ஒன்றியம் 1950களின் பிற்பகுதியில் உக்ரேனின் பகுதியாக்கிய கிரிமியா ரஷ்யாவுடன் இணைந்ததும் அமெரிக்க-ரஷ்ய மோதலை நேரடி யாக்கியதோடு கெடுபிடிப்போரின் நினைவுகளை மீட்டன.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடைகள் மூலம் உக்ரேன் தொடர்பான ரஷ்யாவின் நிலைப்பாட்டை மாற்ற முயன்றன. ஆனால், அது இன்றுவரை வெற்றியளிக்கவில்லை. இப் பின்ன ணியில் அமெரிக்கா தனது படைகளை மெதுமெதுவாக ரஷ்யாவை அண்டிய பகுதியை நோக்கி நகர்த்துகிறது. அமெரிக்க ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் மிகப்பெரிய எதிரியாக ரஷ்யாவை அறிவிக்கிறார்கள். இச் சூழலில் பிரிக்ஸ் மாநாட்டைத் தொடர்ந்து ஷங்ஹாய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டை ரஷ்யா கடந்த வாரம் நடாத்தியதன் பூகோள முக்கியம் கவனிப்புக்குரியது. ஆசியாவில் தனது இருப்பை மீள உறுதிசெய்யும் நோக்குடன் ரஷ்யா இவ்வமைப்பை அணுகுகிறது.

ரஷ்யா அதன் உறுப்புநாடுகளான கஸகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய வற்றுடனும் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றுள்ள பெலாரஸ், ஈரான், மங்கோலியா ஆகியவற்றுடனும் நெருங்கிய உறவுகளைப் பேணுகிறது. இதன் மூலம் தனது எல்லைகளைக் கொண்ட கிழக்கு ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுடன் பொருளாதார-அரசியல் ரீதியில் கூட்டிணைவுக்குத் தலைமையேற்க ரஷ்யா முன்னிற்கிறது. "புதிய உலக ஒழுங்குக்கு" இது நல்லதல்ல. அதை அமெரிக்கா நன்கறியும்.

இப் பின்புலத்திற் கடந்த வாரம் நடந்த இவ்விரு மாநாடுகளும் விளாடிமிர் புட்டின் என்ற போர் வீரனை முன்னுக்குக் கொண்டுவந் துள்ளதுடன் பூகோள, மூலோபாய ரீதிகளில் ரஷ்யாவின் தவிர்க்கவியலாமையை வெளிப்படுத்தியுள்ளன. கிரேக்கத்தை மையப்படுத்திய ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடிகள் ஒரு புறமும் டொலர் வலுவிழப்புடன் இணைந்த அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி மறுபுறமும் நிகழ்கையில், ரஷ்யாவின் மீளெழுச்சி இன்னொரு திசைவழியைக் காட்டுகிறது. ஒரு முரண்நகையாக, பிரான்சிஸ் புக்குயாமா அறிவித்த "வரலாற்றின் முடிவை" இப்படியும் நோக்கலாம்: கீரைக் கடைக்கே எதிர்க்கடை தேவை எனும் போது அமெரிக்காவுக்கு இருக்கக் கூடாதா?

- *தமிழ் மிரர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: இரண்டு மனம் வேண்டும்
பாடகர்: ரி. எம். சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
திரைப்படம்: வசந்த மாளிகை




குடிப்பதற்கு ஒரு மனம் இருந்தால்
அவளை மறந்து விடலாம் - அவளை
மறப்பதற்கு ஒரு மனம் இருந்தால்
குடித்து விடலாம் - ஆனால்
இருப்பதோ ஒரு மனம்-
நான் என்ன செய்வேன்?
இரண்டு மனம் வேண்டும்
இறைவனிடம் கேட்டேன்
நினைத்து வாழ ஒன்று மறந்து வாழ
ஒன்று
(இரண்டு)

இரவும் பகலும் இரண்டானால்
இன்பம் துன்பம் இரண்டானால் (2)
உறவும் பிரிவும் இரண்டானால்
உள்ளம் ஒன்று போதாதே!
(இரண்டு)

கண்களின் தண்டனை காட்சி வழி
காட்சியின் தண்டனை காதல் வழி (2)
காதலின் தண்டனை கடவுள் வழி
கடவுளைத் தண்டிக்க என்ன வழி?
(இரண்டு)

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

S.S.P. கயாணன்- சுழிபுரம், கலையரசி- வட்டுக்கோட்டை, குணநாதசீலன் குடும்பம்- யாழ்ப்பாணம், தர்சன், பிரதி, விஷ்வா, ரிசி, ஸ்ரீநாத், விது, ரவி, கிருசாந்-வதிரி, நெல்லியடி. S.பத்மநாதன்-வவுனிக்குளம் S.மாலினி-கரவெட்டி, ஆ.சதன் கரவெட்டி, இ.ராசரத்தினம், கதிரவன்- ஊரெழு, இராசகோபாலு, பகீரதன்- சாவகச்சேரி, நிருஷியா, ஜிலுக்சன், உதயா குடும்பத்தினர்- மீசாலை, சிவகுமார், மகிந்தன்- மானிப்பாய், பரமசிவம், குமரேசன்- சுன்னாகம், குலதா, லலிதா, செல்வம் உதயகுமார்- சாவகச்சேரி, செ.ஜெயலட்சுமி.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

### வச்சாக்குடும்பி குறும்பட விமர்சனம்




கொமெடிகளில் ப்ளாக் கொமடி (Black comedy) மற்றும் டார்க் கொமடி (Dark comedy) என்று இரண்டு உபபிரிவுகள் உண்டு. மென்போக்காக பார்த்தால் இரண்டும் ஒன்றுபோல் தோன்றும். ஆனால் இரண்டுக்கும் இடையில் மிக நுண்ணிய வேறுபாடுகள் உண்டு. அந்த வேறுபாடுகளை புரிந்துகொள்வது சில சமயம் குழப்பத்தையும் தெளிவின்மையையும் ஏற்படுத்தும். ப்ளாக் கொமடி தனிமனித பார்வையில் படம் நெடுகிலும் சொல்லப்படும். டார்க் கொமடி இதிலிருந்து கொஞ்சம் வேறுபட்டது, குழுநிலையின் பார்வையே நகைச்சுவை பார்வையாக இருக்கும். திரைப்படம் முழுவதும் ஒரு காட்சியில் காட்டப்படும் அனைத்து பாத்திரங்களும் பகிடியை முன்னிறுத்தும் பாத்திரமாகவே இருக்கும், தங்களை தாங்களே பகிடியாக்கிக் கொண்டிருக்கும்.

வச்சாக் குடுமி வலிமையான PRISM குழாமி னால் 2014- 48 Hours Film Competition க்காக உருவாக்கப்பட்டது. ப்ளாக் கொமெடி பிரிவில் குறும்படம் உருவாகும் வாய்ப்பை பெற்றார்கள். சில நிமிட பின்னடைவால் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பை இழந்தது.

தலைமுடி குறைந்து வழுக்கையாகிக் கொண்டு வரும் வாலிபன் மன்தளவிலும், வெளியிலும் மிகவும் அவதிப்படுகின்றான், முடிப் பிரச்சினை இயல்பு வாழ்வில் மிகப்பெரும் இயலாமையை தோற்றுவித்துக் கொண்டு வருகின்றது, அவனின் தந்தை பார்மசி வைத்துள்ளார். அந்த சுதந்திரத்தில் அனைத்து வகையான ஷம்போக்கள், கிரீம்கள் அனைத்தையும் லாவகம் செய்கின்றார், பார்மசியில் வேலைபார்க்கும் பெண்களும் நக்கல் செய்கின்றார்கள், அவர்களை முறைக்கவோ, கவனத்தில் எடுக்கவோ அவன் முற்படவில்லை. அனைத்தையும் ஒருவித தாழ்வு மனப்பான்மையோடு தவிர்க்கின்றான். எத்தனை கிரீம் தடவியும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் தொடர்ந்தும் அவதிப்படுகின்றான்.

பால்ய கால சிநேகிதி அவனையும் குடும்பத்தாரையும் சந்திக்க வருவதாக தொலைபேசியில் சொல்கின்றாள். அதைக் கேட்டு மிகவும் தடுமாறுகின்றான். சிநேகிதியை இருக்கும் சொற்பமுடியோடு சந்திக்கும் மனோதைரியத்தை அவன் கொண்டில்லை. விதம் விதமாக சமாளிக்க முயன்றும் அவனால் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியவில்லை. கடைசியில் சிநேகிதியும் வீட்டுக்கு வர அவளை எதிர்கொள்ள முடியாமல் தலைக்கு விக் மாட்டிக்கொண்டு அவளை எதிர்கொள்கின்றான். தலைக்கு விக் மாட்டிக்கொண்டு தனது தலையை மறைத்தாலும் அவனால் சிநேகிதியை தைரியமாக எதிர்கொள்ள முடியவில்லை, அதே மன் இயலாமையில் தடுமாறுகின்றான். அதே நேரத்தில் சிநேகிதியின் ஆண் நண்பரை அறிமுகப்படுத்த சிநேகிதி கூப்பிடுகின்றாள், வந்தவரை பார்த்தவுடன் அதிர்சி, அது ஏனென்று உங்கள் ஊகத்துக்கே விட்டு விடுகின்றேன்.

ஈழத்தில் ப்ளாக் கொமடிவகையில் உருவாக்க முயன்ற குறும்படங்களில் வச்சாக்குடுமிக்கு முதல் இடம் கொடுக்கமுடியும். ஆனால் முற்றிலும் ப்ளாக் கொமடி வகையில் அடங்கியதா என்றால் முற்றிலும் ஆமோதிக்க முடியாதுதான். அதன் வரையறைகளை ஓரளவுக்குத்தொட்டுள்ளது.

படத்தின் மிகப்பெரிய பலம் முடிகுறைந்த இளைஞராக நடித்தவரின் நடிப்பு. முறைப்பெண்ணாக நடித்துள்ளவர் செயற்கைத்தனமாக நடிப்பினை பிரதிபலித்திருந்தார். பின்னணி இசை அதிகமாக ஒலித்து வசனங்களை செவிமடுக்க முடியாமலுள்ளது.

நாற்பத்தியெட்டு மணித்தியாலத்தில் முற்றிலும் பரீட்சயம் இல்லாத ப்ளாக் கொமடி பிரிவில் கதை எழுதி திரைக்கதை அமைத்து படம்பிடித்து உருவாக்கப்பட்டுள்ளது. வடிவம் சார்ந்த அபத்தங்கள் இருந்தாலும் உள்ளடக்கம் அட்டகாசமாகவுள்ளது.

**அனோஜன் பாலகிருஷ்ணன்**

# ஈழத்துக் கவிதைகள்

### சொந்தம் பற்றிய கவிதை

இன்னா செய்தவர்க்கு ஒருபொழுதும்
இறப் பெண்ணா என் உம்மா!
கண்ணீர்க் கன வெடுத்து
ஒரு முலைப்பாலை ஓரவஞ்சனையறியாநீ
ஸ்நேகிதனுக்கு மீந்தாயும்மா!
பாடுபட்ட நிலவிடுக்கில்
பனையோலைப் பாய்விரித்து
வெறுந்தரைமண்ணில் முந்தானையுதறி
ஒரு நிம்மதிச் சயனம் செய்தது
நேற்றுப் போலுள்ளது
வணக்கத்துக்குரிய உன்பூமி,உன்னுரிமை
உன்னது எல்லாம் உனக்கானதானும்மா.
ஒரே பகலில் ஒரே இரவில் எப்படியும்மா
உதறிடமுடியும்?
நீர் தெளித்து பசுமுலைபிதுக்கி
கறந்தபால் நுரை தெளிய முன்னம்
ஊரறுந்து போனாயே தாயே!
வழமை மாறாக் காதல் கொண்ட
ஒரு தாய் மக்கள்.
ஒன்றாய் உண்டு ஒன்றாய் உறங்கி
ஒன்றாய் ஒரு தேசம் மீட்க ஆனோமே!
ஆனாலும் உம்மா
உயிர்த்தெழுந்த போதே தானோ
சிறகு பறித்து ஏகினோம்.
பத்துவருடங்கள் அந்நியரானோம்
கனவென்றறியா பத்து வருடங்கள்.
மனிசருடைய தப்பி தங்களை நீங்கள்
அவர்களுக்கு மன்னித்தால் உங்கள்
பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்
(வேதகாமம்)

ஓங்கியுயர்ந்த உன் பனைமரம்
ஓரவழிந்த உன் கிராமம்
அந்தராட்டண இரண்டடுக்கு உன்வீடு
எல்லாம் இழந்தாயினும்
சாபமிட்டறியா உன் சாந்தம் மேலானதும்மா!
மண்ணிலுள்ளவர் மீது இரக்கங்காட்டுங்கள்
விண்ணிலுள்ளவன் உம்மீது இரக்கங்காட்டுவான்
(ஹதீஸ்)

உம்மா
உன் கபுறு கூட உன்மண்ணில்லையென்றிடினும்
இப்போதைக்குள் சாபமிடா உன் சபுறு
பெரிதானதும்மா
ஒருமுறை தானுமம்மா ஒரு சுவர் வீழ்ந்தது
சுவருடைக்க ஒரு மலக்கேனும் வரவில்லை ஏன்?
மக்கத்துக் கதையாய் ஏவிவிரட்டியபோதும்
மற்றொரு மதீனாவாய்
கடல் சூழ் புத்தளத்துக் கரையோரம்
ஒதுங்கி ஓய்ந்தோம்
ஓலை,ஓட்டைகள் எல்லாம் பழகி
வழுக்கி வாழ்விடம் என்றெதனைச் சொல்லி ஆற?
பத்து ஈச்சம் பழமுண்டு பகல் முழுக்கப்
போர் செய்த் நபியினரோடெம்மை
ஒப்பிட்டுக் கூப்பிடவா முடியும்?
தோல் சுருங்கி மனம் வெந்து
எப்போதெல்லாம் அழைப்பரென்று
அன்னக் காவடி சுமந்து சுமந்து
மீண்டும் மீண்டும் வருவோர் வந்தவழிபோவோர்
பலர் பலர்.
பேராசை கொள்வதிலிருந்து உங்களைப்
பாதுகாத்திடுங்கள் ஏனெனில் பேராசை உங்களுக்கு
முன் தோன்றிய
மக்களை நாசமாக்கியிருக்கிறது
(முஹம்மதுநபி)

முடிவிலியாய் நீளுமெம்பத்து வருடம்
எத்தனை இன்னும்?

**இளைய அப்துல்லாஹ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு எல்லாமே நல்ல மாரி நடக்குது





தியேட்டர் வட்டாரங்களில் மாரி ஜுரம் எகிறிக்கொண்டிருக்கும் போது, அந்த கெட்டப்கலைத்து, இயக்குநர் பிரபு சாலமன் படத்துக்காக வேற மாரி இருந்தார் தனுஷ்.

ஆக்ச்சுவலா மாரிக்காக வேற கெட்டப்தான் ஐடியா. ஆனா, அதுக்குத் தேவைப்பட்ட தாடி, மீசையோடு குறிப்பிட்ட நேரத்துக்குள் தயாராக முடியலை. அதான் இருக்கிறதுல என்ன பண்ணலாம்னு யோசிச்சு இந்த கெட்டப் பிடிச்சோம். நாங்க எதிர்பார்த்ததைவிட சுப்பர் ஸ்பெஷலா அமைஞ்சிருச்சு.

ஒரு புராஜெக்ட் நல்லா வரணும்னா, எல்லாமும் நல்லா அமையணும்னு சொல்வாங்க. அப்படி மாரிக்கு எல்லாமே அமைஞ்சிருக்கு நெஞ்சில் கைவைத்துச் சொல்கிறார் தனுஷ்.

**அவரிடம் ஒரு தடதட பேட்டி...**

**எட்டு வருஷத்துக்கு முன்ன நடந்ததாச் சொல்றாங்க சார்... அப்ப அவன் அயிட்டங்காரன் கூட கிடையாதுனு மாரியில் வர்ற வசனம் புதுப்பேட்டையைக் ஞாபகப்படுத்துதே. அதான் உங்க நோக்கமா?**

சொந்த வாழ்க்கையில் இருந்து எதையும் நான் படத்துல வசனமா வைக்க மாட்டேன். அந்த கரக்டருக்கு என்ன தேவையோ அதான் வசனமா வந்திருக்கு.

அது என்னைப் புகழ்ந்து எழுதின வசனமும் கிடையாது. மாரி கரக்டர்ல யார் நடிச்சாலும் அந்த டயலொக் வந்திருக்கும். அதுவும் போக, மாரி ஸ்க்ரிப்ட் என்னை மட்டுமே மனசுல வெச்சு எழுதினேன்னு சொன்னார் பாலாஜி மோகன்.

அதனால இது முழுக்க முழுக்க ஃப்ரெஷ்ஷான படம். புதுப்பேட்டையோ என் மத்த படங்களோ அதோட எந்தப் பாதிப்பும் இருக்காது. மாரி உங்களை செமத்தியா என்டர்டெய்ன் பண்ணவைப்பான்!

**நீங்க நடிக்கிற படமோ, தயாரிக்கிற படமோ... அனிருத் சொல்லியடிக்கிறாரே... அது என்ன கெமிஸ்ட்ரி?**

நானும் அனிருத்தும் பிரதர்ஸ். அண்ணன்-தம்பி மாதிரிதான். அவர் மேல எனக்கு அதிகமான அக்கறையும் பாசமும் உண்டு. ரொம்ப நெருக்கமாப் பழகுறதால, இது நல்லா இருக்கு.

இது நல்லா இல்லைனு வெளிப்படையாப் பேசி, வேணும்கிற விஷயத்தை வாங்கிக்க முடியுது. நானும் அனிருத்தும் பாட்டு கம்போஸிங் பண்ண உட்கார்ந்தா, வேலை செய்ற மாதிரியே இருக்காது.

அரட்டை அடிச்சுட்டே கலாட்டாவா வேலைபார்ப்போம். அந்த எனர்ஜி கூட பாடல்கள்ல வந்துடும்னு தோணும். இன்னைக்கு டிரெண்டுக்கு அனிருத் மியூசிக் பண்றது விஷயமே இல்லை. ஆனா, வி.ஐ.பிக்காக அம்மா... அம்மா... நீ எங்க அம்மா...னு மியூசிக் பண்ணது தான் க்ளாசிக். அப்படி ஒரு பாட்டு பண்ண ஒரு மெச்சூரிட்டி வேணும்.

அனுபவம் உள்ளவங்களால தான் அப்படிப் பண்ண முடியும். அனிருத் மியூசிக்ல அந்தப் பாட்டுத் தான் என் இஷ்டம். மத்த ஹீரோக்கள் நடிச்ச படங்கள்னா, கத்தி சாங்ஸ் எல்லாமே பிடிக்கும்!

**காக்கா முட்டை வெற்றியை எதிர்பார்த்தீங்களா?**

சத்தியமா இல்லை! அது குவாலிட்டியான சினிமா, நம்ம கம்பனி மூலமா அதை சினிமா ரசிகர்களுக்குக் கொண்டுபோகணும்னு ஆர்வமா, சந்தோஷமா எடுத்தோம்.

ஆனா, ரசிகர்கள் அதை இந்த அளவுக்குக் கொண்டாடி ஏத்துக்குவாங்கனு நாங்க நினைக்கலை. படம் இவ்வளவு வசூல் பண்ணும்னு எதிர்பார்க்கலை.

இனி அஞ்சு படங்கள் தயாரிச்சா, அதுல ஒண்ணு காக்கா முட்டையா இருக்கணும்னு நினைக்கிறேன். ஆனா, அந்தப் பொக்கிஷத்தைத் தேடிக் கண்டுபிடிக்கிறது தான் கஷ்டம். அப்படிக் கிடைச்சா நிச்சயமா லாபம் - நஷ்டம் கணக்கு பார்க்காம, படத்தைத் தயாரிச்சுருவேன்!

**அடுத்த இந்தி சினிமாவில் எப்போ நடிப்பீங்க?**

ஒரு மாசத்துக்குக் குறைஞ்சது நாலு கதைகளாவது வருது. ரொம்ப சந்தோஷமாவும் பெருமையாவும் இருக்கு.

ஏன்னா, நாமெல்லாம் இந்த சுமாரான மூஞ்சியை வெச்சுக்கிட்டு இவ்வளவு தூரம் வந்ததே பெரிய விஷயம். இதுல இன்னொரு மொழியிலயும் நாம நடிக்கிறதை ஒப்புக்கிறாங்க, நமக்காக கதை எழுதுறாங்கனு நினைச்சா பெருமையாவும்சந்தோஷமாவும்இருக்கு. ஏன்னா, என்னைவிட திறமையான வங்க, அழகானவங்க எவ்வளவோபேர்இங்கே இருக்காங்க.

அவங்களையும் மீறி இதெல்லாம் எனக்குக் கிடைக்குதுன்னா, என் அப்பா-அம்மாவின் பிரார்த்தனைகளும் புண்ணியங்களும் தான் காரணம். கடவுளுக்கும், என்னை ஏத்துக்கிட்ட ரசிகர்களுக்கும் எப்பவும் என் நன்றி !








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தலையீடு அவசியமே





நடைபெறவுள்ள நாடாளுமன்றபொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று யார் ஆட்சியமைக்கப்போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ள நிலையில் தமது ஆசனங்களைத் தக்க வைப்பதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழு மூச்சுடன் களத்தில் இறங்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ள நிலையில் இனி பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்பதனையும் ஆணித்தரமாக கூறிவைக்க முடியும்.

தென்னிலங்கையில் இத்தகைய நிலையென்றால் வடக்கிலும் தேர்தல் தொடர்பான பரபரப்புக்கு பஞ்சம் இருக்க வாய்ப்பில்லை.

வடக்கு மாகாண சபையை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களுடன் கைப்பற்றிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆட்சி செய்து வரும் நிலை பாராளுமன்ற ஆசனங்களையும் அதிகளவில் கைப்பற்ற முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதில் ஐயத்திற்கு இடமிருக்க முடியாது.

அதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி இம்முறை தனித்து தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளமையும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளமையும் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்பதை பறை சாற்றுகின்றன.

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பரபரப்புக்கள் அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச ரீதியாக அரசிற்கு எதிரான அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இறுதிப்போரில் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் தொட ர்பான நேரடிச் சாட்சியப் பதிவுகள் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் வெளியாகி அழுத்தத்தை கொடுத்திருந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இன விடுதலைப் போராட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு நோக்கியிருந்தனர், போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்கு எத்தகைய கொடுமைகளை அரங்கேற்றியிருந்தனர் என்பதை இந்தச் சாட்சியப்பதிவுகள் வெளிக்காட்டியிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறையில் இடம்பெற்ற இந்த நேரடிச் சாட்சியப் பதிவில் பங்கேற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனின் மகன், சமாதானச் செயலாளரான புலித்தேவனின் மனைவி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் மலரவனின் மனைவி ஆகிய மூவரும் இறுதிப்போரில் நடந்தனவற்றை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதுமட்டுமின்றி வெள்ளைக்கொடி விவகாரத்தை இலங்கையில் மீண்டும் பேசு பொருளாக மாற்றவும் செய்தனர்.




இந்தப் பரபரப்பு அடங் குவதற்கு முன்பாகவே ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரி மைகள் ஆணையாளர் செயிட் அல்ஹுசேன் இலங்கையில் இடம் பெற்ற போரின் போது பல்லா யிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்க ஐ.நா. தவறி விட்டது என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

ஐ.நா. மீதான குற்றச்சாட்டு குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற மனோநிலையில் உள்ள ஆட்சியாளர்களுக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வின் போது காத்திருக்கும் அபாயத்திற்கான ஆரம்ப அச்சுறுத்தல் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கை அரசின் மீது தொடர்ந்துவரும் அழுத்தங்களுக்கு மத்தியில் அமெரிக்காவில் வைத்து அந்நாட்டு அரசிடம் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்திருக்கும் கோரிக்கை செப்டெம்பர் மாத அமர்வின் போது எதிரொலிக்கும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

யுத்தக்குற்றச்செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்செயல்களுக்கு பொறுப்புக்கூறுதல் தொடர்பில் அமெரிக்கா தலையீடு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை குறித்து தீர்மானம் கொண்டு வந்து அதனை ஏகமனதாக நிறைவேற்றி சர்வதேச ரீதியாக பரபரப்பை ஏற்படுத்தி முதல்வர் விக்னேஸ்வரன் தீர்மானத்திற்கு வலுச்சேர்க்கும் வகை யில் இந்தக் கோரிக்கையினை அமெரிக்காவிடம் முன்வைத்திருந்தார்.

இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணையை நடத்தி இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களை தண்டிக்க வேண்டும். இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்று போராட்டங்களை முன்னெடுத்த, முன்னெடுத்துவரும் புலம்பெயர் தமிழர்களுக்கும் அவர்களின் கோரிக்கைகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் விக்னேஸ்வரனின் கருத்து அமைந்திருந்தது.

இறுதிப்போரில் தமிழினம் எதிர்கொண்ட படுகொலைகள் குறித்து சனல்-4 மற்றும் சர்வதேச ஊடகங்களில் வெளியான போர்க்குற்றம் குறித்த ஆவணங்களை வைத்து இலங்கை மீது விசாரணை நடத்த வேண்டும். தமிழீழ அழிப்பு இடம்பெற்றதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழகத்தில் மாணவர்களினாலும் ஈழ உணர்வாளர்களினாலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் இலங்கை அரசிற்கு எதிராக ஐ.நாவில் தீர்மானங்களைக் கொண்டு வர வழிசமைத்தது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானங்கள் கொண்டு வரப்பட்ட போதும் தமிழர்கள் எதிர்பார்த்த சர்வதேச விசாரணை நடத்தப்படுமா? என்ற எதிர்பார்ப்பும் தமிழர்களும் இந்த நாட்டில் நிம்மதி யாக வாழ முடியுமா? அத்தகைய சூழ்நிலை இனியாவது ஏற்படுமா? என்ற கேள்விகளே மீதமாகவுள்ளன.

காணாமற்போனவர்கள் விவகாரம், முன்னாள் போராளிகளின் எதிர்காலவாழ்க்கை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பனவற்றுக்கு ஐ.நா. தீர்மானங்களினால் எந்தப்பெறுபேறுகளும்கிட்டவில்லை.

இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மீள்குடியேற்றம், இராணுவம் உள்ளிட்ட படைத்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டுள்ள தமிழரின் பூர்வீக நிலங்களை விடுவிக்கும் நடவடிக்கை என்பன பேச்சளவில் மட்டுமேயுள்ளன.

மைத்திரி தலைமையிலான புதிய அரசின் கொள்கை வகுப்பும் தமிழரைப் புறம்தள்ளிய நிலையில் 100 நாட்களைக் கடந்து விட்டது.

தமிழரை இரண்டாம் தரப்பிரஜைகளாக நாம் பார்க்கவில்லை என்று சிங்கள ஆட்சியாளர்கள் கூறி வருகின்ற போதிலும் நடைமுறையில் அதைப் பின்பற்றுவதை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

இலங்கை அரசு மீது தமிழர்கள் நம்பிக்கையை வைக்க முடியாத நிலையில் சர்வதே நாடுகளையே முழுக்க முழுக்க நம்பியிருந்தனர், நம்பியுள்ளனர்.

இருப்பினும் இறுதிப் போரில் ஈழத் தமிழர்களை நாதியற்றவர்களாக சர்வதேச நட்டாற்றில் விட்டிருந்தது.

இதன் விளைவாக இனப்படுகொலையை தமிழினம் எதிர்கொள்ள நேரிட்டது.

சர்வதேசம் அன்று ஐ.நாவின் துணையுடன் தலையிட்டிருந்தால் தமிழினம் இத்தனை துயரங்களை இன்றும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்காது.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசமனிதவுரிமைகள் அமைப்புக்கள் மற்றும் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் நேரடியாக தலையீடு செய்வதன் மூலமே இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் குறித்தும் போர்க்குற்றங்கள் குறித்தும் நீதியான விசாரணையை நடத்த முடியும்.

அவ்வாறு நடத்தப்படும் போது தான் தமிழினப் படுகொலை தொடர்வதை இலங்கையில் நிறுத்த முடியும் என்பதை விக்னேஸ்வரன் தனது அமெரிக்கப் பயணத்தின் போது ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

அதேவேளை வடக்கு, கிழக்குக்கு விரிவான சுயாட்சியே இனப்படுகொலைப்பாதிப்பிலிருந்து தமிழ் மக்கள் மீட்சி பெற ஒரே வழி என்றும் முதல்வர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

எனவே இலங்கையில் இனப்படுகொலை தொடர்வதை இனியும் கைகட்டி, வாய்பொத்தி பார்த்துக்கொண்டிராது அமெரிக்கா போன்ற நாடுகள் நேரடித் தலையீடுகளைச் செய்து தமிழரைக் காக்க வேண்டும். இதுவே ஒவ்வொரு தமிழனும் முன்வைக்கும் மிகவும் முக்கியமான அத்தியாவசியமான கோரிக்கையாக அமைந்துள்ளது.

**காண்டீபன்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# facebook

# உண்மை விளம்பி



சிந்து நதி தீரத்தில் சச்சி தானந்தா என்ற யோகி, ஒரு ஆசசிர மத்தை ஸ்தாபித்து தன் சிஷ்யர் களோடு வாழ்ந்து வந்தார்.

அவர் உண்மைதான் தேசத்தை முன்னேறச் செய்யும் என்ற கொள்கைய்யக் கடைப் பிடித்ததால் மக்கள் அவரை, யோகி உண்மை விளம்பி என வர்ணித்தனர். மெய் உயர்வைத் தரும் பொய் தாழ்வைத் தரும் என்பதுதான் அவரின் தாரக மந்திரம். ஆகவே, அதையே உபதேசித்தும் வந்தார்.

ஒருசமயம் நதி ஓரத்தில் தன் சிஷ்யர்களோடு செல்லும்போது, ஒருவன் தான் பிடித்த ஆமையைக் கொல்ல அதன் முதுகின் மீது தடியால் அடித்துக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ணுற்ற யோகி உண்மை விளம்பி அவனைப் பார்த்து, அன்பனே ! ஆமை ஓடு வலுவானது.

அதை உடைக்க முடியாது. திருப்பிப் போட்டு அடித்தால் அது உடனே இறந்துவிடும்! என்றார். அந்த ஆளும் மகிழ்ச்சியோடு செய்து முடித்தான்.

யோகி சொன்னது உண்மையாக இருக்கலாம். ஆனால், ஒரு ஆமையைக் கொன்ற பாவ மூட்டையைச் சுமக்கக் காரணமானார். ஆனால், அதை அவர் உணரத் தவறிவிட்டார்.

மற்றொரு சமயம் உண்மை விளம்பி தன் ஆச்சிரமத்தின் மேடையில் அமர்ந்து கொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே ஒருவன் ஓடிச் சென்றான்.

சிறிது நேரத்தில் அங்கு சில காவலர்கள் வேகமாக ஓடிவந்தனர். அங்கு யோகியைக் கண்டதும், சுவாமி! இவ்வழியாக சற்று முன் யாராவது ஓடினார் களா? என்று வினவினர்.

ஆம்! சிறிது முன் என் ஆச்சிரமத்தின் வழியாக ஒருவர் ஓடிச் சென்றார்! என்றார் யோகி.

நன்றி சுவாமி! எனக் கூறிவிட்டு அந்த ஆளை எப்படியாவது பிடித்து விடலாமென்று வேகமாகப் பறந்தனர். கொஞ்ச தூரம் சென்றதும் அந்த ஆளைப் பிடித்துவந்து அரசனுக்கெதிரில் நிறுத்தினர். அரசனும் ஏதும் விசாரிக்காமல் காவலர்களைப் புராட்டி விட்டு, அந்த ஆளைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

மறுதினம் அரசவையில் அவனை விசாரிக்கக் கொண்டு வந்தனர். காவலர்கள் அவனை துன்புறுத்தியும், தான் கள்வன் அல்ல; எதையும் கொள்ளை அடிக்கவில்லை என வாதாடி னான்.

அரசனும் அவனிடம், உண்மையைச் சொன்னால் உனக்கு விடுதலை.இல்லையேல் தூக்குத் தண்டனைதான் புரிந்ததா! என்றார்.

நிரபராதியான அவன், நான் ஓடி வந்தது உண்மைதான். டாக்டர் அறிவுரைப்படி தினந்தோறும் உடற்பயிற்சிக்காக ஓடுவது வழக்கம். தெரியாமல் ஆச்சிரமத்தின் வழியாக ஓடி வந்ததால் இந்த விபரீதம். கொள்ளை அடித்திருந்தால் மூட்டையோடு ஓடி வந்திருக்க மாட்டேனா? நிரபராதியான என்னைத் துன்புறுத்தியது நியாயமா? ஆனால், உங்களைச் சபிக்க நான் கண்ணகி அல்ல! எனச் சொல்லி வருந்தினான்.

அப்போது உண்மையான கள்வன் பிடிபட்டான் என அரசனுக்கு செய்தி வந்தது. நான் நீதி தவறி நடந்து விட்டேனே என்று வருந்தி இதற்கு காரணமான காவலர்களைக் கோபித்து, எக்காரணத்தைக் கொண்டு இவரைக் கைது செய்தீர்கள்? என்று கேட்டான்.

அரசே! எங்களை மன்னித்து விடுங்கள். கள்வனைத் தேடிச் சென்றபோது வழியில் ஆச்சிரமத்தில் யோகியைக் கண்டு விசாரித்ததில் அவரும், ஆம் இவ்வழியே ஒருவன் ஓடியதைப் பார்த்தேன் என்றார். யோகி உண்மை விளம்பியாச்சே அவர் சொன்னது சரியே என மேலும் வேகமாகச் சென்று இவரைப் பிடித்து வந்தோம்! என்றனர்.

எல்லாம் அந்த யோகி உண்மை விளம்பியால் நடந்து விட்டதை உணர்ந்த அரசன் யோகியை அரசவைக்கு கொண்டுவர உத்தரவிட்டான். யோகி அரசவையை அடைந்தார்.

தாங்கள் உண்மை விளம்பி என்பது யாவரும் அறிந்ததே. காவலர்கள் கேட்டதற்கு தாங்களும், ஆம் ஒருவன் இவ்வழியே ஓடினான் என்று கூறிவிட்டீர்.

எல்லாம் அறிந்த நீங்கள் அவன் கையில் ஏதாவது மூட்டை இருந்ததா எனப் பார்த்திருக் கலாம். எதற்காக அவனைத் தேடுகிறீர்கள் என்றுக் கேட்டி ருந்தால் இந்த அநீதி நடந் திருக்காது.

தாங்கள் சொன்ன யோசனையற்ற உண்மை நிரபராதியைக் குற்றவாளியாக்கி விட்டதே. உண்மை பகர்வதிலும் சிந்தித்து செயற்பட்டிருந்தால் நன்மை ஏற்படுமா எனத் தாங்கள் ஊகித்திருக்க வேண்டும். இருப்பினும் தங்களால் ஏற்பட்ட இக்குழப்பத்திற்காக ஒருநாள் சிறையில் தியானம் செய்து தங்களைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள்! என்றான்.

தவறு செய்த காவலர்களைப் பதவி நீக்கம் செய்தார் மன்னர். தன் அவசர புத்திக்கு அபராதமாக ஆயிரம் பொற்காசுகளை நிரபராதிக்கு அளித்தார் மன்னர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 436

Search for people, places and things   Nagendram   Home

இராசரத்தினம் றஜி

கஷ்டங்கள் நஷ்டங்கள்
அடைந்த
பின் மனிதர் அதிக
அடக்கத்தையும்
அறிவையும் பெறுகின்றனர்

சச்சி சங்கீத்




ரவி ராஜகோபால்




ரகு பாலா




நிஷா சர்மா

நாய் நன்றியுடன் இருப்பது ஆச்சர்யம் இல்லை!!!



காலம் காலமாக மனிதர்களுடன் இருந்தும் நன்றியுடன் இருப்பது தான் ஆச்சர்யம்!

கியாஸ் மொகமட்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் கிங்ஸ்சின் தடை தர்மசங்கடத்தில் டோனி

உலகின் மிகப்பெரிய, பிரமாண்டமான 'டைட்டானிக்' கப்பல் மூழ்கியது போல, சென்னை அணி தரை தட்டி நிற்கிறது. கப்டன் டோனி தர்ம சங்கடமான நிலையில் உள்ளார்.

அணி மீண்டும் வரும் வரை காத்திருப்பாரா அல்லது வேறு அணிக்கு தாவுவாரா என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2008இல் ஐபில் பிரிமியர் தொடர் ஆரம் பிக்கப்பட்டது முதல் சென்னை அணியின் கப்ட னாக இருப்பவர் டோனி, (வயது34). இந்திய அணிக்காக 2007 ('இரு பது-20'), 2011 (50 ஓவர்), 2013 ('மினி') என, மூன்று விதமான உலக கோப்பை வென்று தந்தது போல, சென்னை அணிக்காகவும் அசத்தியுள்ளார். இதுவரை நடந்த 8 பிரிமியர் தொடரில் 2010, 2011இல் சம்பியன் பட்டம் வென்று தந்தார். கடந்த 2008, 2012, 2013, 2015இல் இறுதிப் போட் டிக்கு முன்னேற காரண மாக இருந்தார். தவிர, சம்பியன்ஸ் லீக் தொடரில் 2010, 2014 இல் சம்பியன் என, அசத்தல் கப்டனாக வுள்ளார்.

இவ்வளவு சாதனை படைத்த இவருக்கு 2011க் குப் பின் சற்று சறுக்கல்கள் ஏற்பட்டன. சூதாட்ட விடயத்தில் டோனியின் பெயரும் கடந்த சில ஆண்டுகளாக அவ்வப்போது அடிபட்டன. 2012, 2013இல் பிரிமியர் தொடர் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதும் கோப்பை இழந் தார். தொடர்ச்சியான தோல் விகளால், டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார்.

தற்போது சென்னை அணிக்கு 2 ஆண்டு தடை விதிக்கப்பட்ட நிலையில் டோனி வேறு அணிக்காக விளையாடுவாரா அல்லது இந்த அணியில் நீடிப்பாரா என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், இத்தாலி மற் றும் ஜுவெண்டஸ் (உள்ளூர்) காற்பந்து அணி கப்டனாக இருப்வர் பஃவான், (வயது37). உலகின் சிறந்த கோல் கீப்பர். 'சீரிஸ் ஏ' தொடரில் இந்த அணி நிர்வாகிகள் சூதாட்டத்தில் ஈடுபட்டது (2006) தெரியவர, தரம் குறைந்த 'சீரிஸ் பி' தொடரில் விளையாட நீதிமன்று உத்தரவிட்டது. இருப்பினும், 2001 முதல் ஜுவெண்டஸ் அணியில் உள்ள இவர், தொடர்ந்து




இப்போது வரை இதே அணியில் நீடிக்கிறார்.

இதுபோல உலகின் சிறந்த விக்கெட் கீப்பர் டோனி, சென்னை அணியில் நீடிப்பாரா என ரசிகர்கள் எதிர்பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

ஏற்கனவே இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் துணைத் தலைவராக உள்ள இவர், பெரியளவில் காயம் ஏற்பட்டால் தவிர, சென்னை அணிக்கான போட்டிகளில் தவறாமல் களமிறங்கி விடுவார். அந்தளவுக்கு சென்னை அணியை நேசிக்கிறார்.

அதேநேரம் டோனி 2016க்குப் பின் பிரிமியர் தொடரில் விளையாட மாட்டார் என்று கூறப்படுகிறது. இதனால் சென்னை அணியில் நீடிக்க விரும்புவாரா எனத் தெரியவில்லை.

ஐபில் பிரிமியர் விதிப்படி,' சம்பந்தப்பட்ட அணி உரிமையாளர், அணியின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் நிலையில் ஏதாவது தவறாக நடந்தால் உரிமம் இரத்து செய்யப்படும்,' என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது.

தற்போது சென்னை, ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் குருநாத், ராஜ் குந்தராவுக்கு 'சூதாட்டம் காரணமாக வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏன் இந்த இரு அணிகளின் உரிமத்தையும் ரத்து செய்யக் கூடாது என, கேள்வி எழுந்துள்ளது.

ஐபிஎல் பிரிமியர் தொடரில் பங்கேற்க தடை விதிக்கப்பட்ட சென்னை, ராஜஸ்தான் அணிகளின் நிலை தான் தற்போது பெரும் கேள்விக்குறியாகி உள்ளது. ஒருவேளை இந்த அணிகளை இந்திய கிரிக்கெட் போர்ட் (பி.சி.சி.ஐ.) தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால், தொடரில் பங்கேற்க அனுமதிக்கலாம். வீரர்களுக்கான சம்பளத்தை பி.சி.சி.ஐ., வழங்கும்.

அதேநேரம் ஐபிஎல் பிரிமியர் தொடர் நடத்தும் போர்டே, அணியை நிர்வகித்தால், ஆதாயம் தரும் வகையில் செயற்படுகிறது என்ற சர்ச்சை எழும். இதனால் இந்த இரு அணிகள் விடயத்தில் பி.சி.சி.ஐ., முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.சி.சி., தலைவர் சீனிவாசனுக்கும், பி.சி.சி.ஐ., செயலர் அனுராக் தாகூர் இடையே மோதல் உள்ளது. இதனிடையே சமீபத்தில் மேற்கிந்தியத்தீவின் பார்படாசில் நடந்த ஐ.சி.சி., கூட்டத்தில் இந்த இருவருக்கும் இடையே சமாதான பேச்சு நடந்ததாக தெரிகிறது. இதனால் அணியின் உரிமத்தை இரத்து செய்வது போன்ற பெரிய நடவடிக்கைளில் பி.சி.சி.ஐ., ஈடுபடாது என்று கூறப்படுகிறது.

சென்னை அணிக்கு தடை விதிக்கப்பட்ட போது, கப்டன் டோனி, ஜார்க்கண்ட்டின் பொகாரோவில் உள்ள டில்லி பப்ளிக் பள்ளிக்கு சென்றார். இங்கு சிறந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய இவர், மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்து எப்போதும் போல மிகவும் 'கூலாக' கிரிக்கெட் தொடர்பான விடயங்களை பேசி மகிழ்ந்தார்.

2013இல் சூதாட்ட சர்ச்சை வெடித்த போது, பி.சி.சி.ஐ., ஒழுங்கு நடவடிக்கைக்குழு, ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் மூலம் விசாரித்து, குருநாத் எவ்வித தவறான செயல்களிலும் ஈடுபடவில்லை என்று கூறியது. இப்போது இவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

இதே குழுதான் ஸ்ரீசாந்த், அன்கீத் சவானுக்கு வாழ்நாள் தடை விதித்தது. சமீபத்தில் ஹிக்கென் ஷாவை தடை செய்தது. தற்போது இந்தக்குழு எடுத்த நடவடிக்கையின் நம்பகத்தன்மை கேள்விக் குறியாகி உள்ளது.

க. மதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org